# ஆண்டு மலர்
## 2016-17




கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா

Cary Tamil School

Cary, North Carolina, USA

# தொல்காப்பியம் - பாயிரம்

பாயிரம் என்பது ஒரு நூலினது அறிமுகம் ஆகும். தொல்காப்பியம் இலக்கிய வடிவிலிருக்கும் ஓர் இலக்கண நூலாகும். இதை எழுதியவர் பெயர் தொல்காப்பியர் என்று தொல்காப்பியப் பாயிரம் குறிப்பிடுகிறது. பழங்காலத்து நூலாக இருப்பினும், இன்றுவரை தமிழ் இலக்கண விதிகளுக்கு அடிப்படையான நூல் இதுவே.

தொல்காப்பியர் வழக்கு மொழியாகிய கொடுந்தமிழையும், செய்யுள் மொழியாகிய செந்தமிழையும் ஆய்ந்து இரண்டிற்கும் பொருந்தும் வகையிலேயெ இலக்கணம் வகுத்துள்ளார் என்று பாயிரம் உரைக்கிறது.

தொல்காப்பியம், தமிழில் இன்று கிடைக்கின்ற நூல்களுள் முதல் நூல், முதன்மையான நூல். மொழி இலக்கண நூல் மட்டுமன்று. வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறும் நூல். வாழ்க்கைக்கு தேவையான பண்புகள், தேவையற்ற தீக்குணங்கள் போன்றவற்றை எல்லாம் தெளிவாகப் பேசும் நூல். தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் இதுபோன்ற ஒரு நூல் இந்திய மொழிகளிலோ, உலக மொழிகளிலோ தோன்றவில்லை என்பது உண்மை.

தொல்காப்பியம் 1602 பாக்களால் ஆனது. இதன் உள்ளடக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதலாவது எழுத்ததிகாரம் தனிமொழியிலும், புணர்மொழியிலும் உள்ள எழுத்துகளைப் பற்றிக் கூறுகிறது. இரண்டாவது சொல்லதிகாரம் மொழித்தொடர் அமையும் பாங்கைச் சொல்கிறது. மூன்றாவது பொருளதிகாரம் எழுதப்படும் நூலிலுள்ள வாழ்க்கைப் பொருளையும், அப்பொருள் சொல்லப்பட்டுள்ள யாப்பு, அணி முதலான பாங்குகளையும், தமிழ்மரபையும் விளக்குகிறது.

ஒவ்வொரு அதிகாரத்திலும் 9 இயல்கள் உள்ளன. அவற்றை மாணவர்களின் படைப்புகளுக்கு இடையில் காணலாம்.

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்

சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்

தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்

தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறும் திலகமுமே

அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற

எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெரும் தமிழணங்கே!

தமிழணங்கே!

உன் சீரிளமை திறம்வியந்து


செயல்மறந்து வாழ்த்துதுமே!!!

வாழ்த்துதுமே!!!

வாழ்த்துதுமே!!!

மனோன்மணியம் பெ. சுந்தரம் பிள்ளை

வணக்கம் !



பத்தாண்டுகளுக்கு முன்பு, கேரி தமிழ்ப்பள்ளியினை மேம்படுத்த வேண்டும் எனும் எண்ணம் உருவானது. ஆனால் அதனை எப்படிச் செய்வது? நம் பகுதியில் தமிழ் மொழிக்கல்விக்கு ஓர் அடையாளச்சின்னமாக அமையக்கூடிய வகையில் ஒரு பள்ளிக்கூடத்தை நாம் எப்படிக்கட்டமைப்பது? தொடர்ந்து வளர்ச்சியடைக்கூடிய, நம்பகத்தன்மையை பெறகூடிய வகையிலும் ஒரு கல்வி நிலையத்தை நிறுவுவது எப்படி?

ஒரு கல்விநிலையத்தின் பங்குதார்களாக விளங்கக்கூடிய அனைத்துத் தரப்பினரிடமும் உறுதியான நம்பிக்கையைப் பெறுவதும் அதனை நிலைநிறுத்துவதும் எப்படி? எல்லாவற்றிற்கும் மேலாக, இக்குமுகத்தில் நல்ல மாற்றங்களை எப்படிக்கொண்டுவருவது?

தரமான கல்வித் திட்டம், மிகச்சிறந்து சேவை, வெளிப்படையான கொள்கைகள் என அனைத்தையும் செம்மையான முறையில் கையாண்டு ஒவ்வோரு ஆண்டும் கேரி தமிழ்ப்பள்ளியை வளர்த்தோம். நமது விழுமியங்கள் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. நமது பள்ளி பல வெற்றிகளைத் தொடர்ந்து ஈட்டியுள்ளது. இந்த வளர்ச்சியில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், ஒப்படைப்புணர்வோடு பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோர்க்கு பெரும் பங்குள்ளது. அனைவர்க்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாம் எதனை அடையவேண்டும் என்பதில் முதல்நாளிலிருந்தே தெளிவான நோக்கம் இருந்தது. நமது குறிக்கோள், விழுமியங்கள் பற்றிய பார்வை இருந்தது. மேலும் நமக்கான குறுகியகால, நீண்டகால நோக்கங்கள் வரையறுக்கப்பட்டன. நமது நோக்கங்களை அடையும் பாதையில் முன்னேக்கி நகர்ந்தோம், ஒவ்வொரு ஆண்டும் இலக்கை நெருங்கினோம். மிக நெடிய பயணம் எனினும் பயனளிக்கக்கூடிய பாதையில் ஒவ்வொன்றாக பல வெற்றிகளை ஈட்டினோம். நமது நோக்கத்தை அடைவதில் நமது எதிர்பார்ப்புகளையும் மீறி அடுத்தடுத்த வெற்றிக் கனிகளை எட்டிப்பறித்தோம். தரமான ஒரு கல்வி நிலையத்தை நிறுவினோம். பின்னர், நமது மாணவர்களின் இரண்டாவது தமிழ்வீடாக இப்பள்ளி ஏன் இருக்கக்கூடாது என்று நினைத்தோம். இப்படியான மாபெரும் உந்துஆற்றலை நாம் எப்படித் தக்கவைத்துக்கொள்கின்றோம்? இதற்கான பதில் பன்முகத்தன்மை வாய்ந்தது. அதில் முதன்மையானது, பொதுநோக்கம். மாணவர்களும் பெற்றோரும் பயிற்றுவிப்போரும் இணைந்து பணியாற்றுவது. மாணவர்களின் தமிழ் மொழியார்வத்தைத் தொடர்ந்து வளர்த்தெடுப்பதில் கவனமாக இருத்தல்.

தன்னொப்படைப்புடன் பணியாற்றும் திறமையான ஆசிரியர்கள் பலரை கேரி தமிழ்ப்பள்ளி பெற்றுள்ளது. முனைப்போடு செயல்படும் இவர்கள் மாணவர்களின் வெற்றிக்கு வித்தாக உள்ளனர். மாணவர்களை ஊக்குவிப்பதையும், அவர்களை மேம்படுத்துவதில் முனைப்பு காட்டுவதையும், கல்வி கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தைப் பெருக்குவதையும் நமது ஆசிரியர்கள் மனமுவந்து செய்கின்றனர். மாணவர்கள் கல்விகற்பதற்கான இதமான நட்பான சூழலை உருவாக்கவும் கேரி தமிழ்ப்பள்ளியின் உயர்ந்த தரத்தைப் பேணிக்காக்கவும் நமது ஆசிரியர்கள் கடுமையாக உழைக்கின்றனர். கல்வி கற்பதற்கான மிகச்சிறந்த பயிற்றுவிக்கும் உத்திகளை உருவாக்குவதற்கும், ஒவ்வொரு வகுப்பறையிலும் மாணவர்கள் கருத்துக்களை மெய்யாக உள்வாங்கி, பாடத்திட்டத்தினைப் புரிந்துகொண்டு படிப்பதற்கும் ஏற்றவாறு எமது ஆசிரியர்கள் குழுவாக இணைந்து கூட்டுமுயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றனர்.

நூலைப் படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி
காலையில் படி - கடும்பகல் படி
மாலை இரவு பொருள்படும்படி ( நூலைப் )
கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டுமப்படி
கல்லாதவர் வாழ்வதெப்படி ? ( நூலைப் )
-புரட்சிப்பாவலர் பாவேந்தர் பாரதிதாசன்

அன்பார்ந்த பெற்றோர்களே, தங்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வண்ணம் நாங்கள் சிறப்பாகப் பணியாற்றியுள்ளதாக முழுமையா நம்புகின்றோம்.

இப்பயணம் சரியான பாதையில் தொடர்ந்து பயணிப்பது நமது அனைவரின் கைகளிலும்தான் உள்ளது. ஊர்கூடித் தேரிழுப்போம், மகிழ்வோடு வாழ்வோம்.

தமிழன்புடன்,

செல்வன் பச்சமுத்து

தலைமை ஆசிரியர், கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வட கரோலினா

அனைவருக்கும் வணக்கம்,



“என்னை நன்றாக இறைவன் படைத்தனன்

தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே”

எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ
மனவலிமையை வளர்க்குமொ, விரிந்த அறிவைத் தருமோ
அத்தகைய கல்வி வளரும் தலைமுறைக்கு மிக மிக அவசியம், அத்தகையக் கல்வியைத் தரும் வல்லமை தாய்மொழிக்கு உண்டு.

“கலையணிச் செல்வன் கமலச்சேவடி

தலையணி புனைந்து சாற்றுதும் தமிழே”

என்றார் திருமூலர். மொழியாலேயே நாம் அடையாளம் காணப்படுகிறோம். மொழியின் தேக்கம், இனத்தின்தேக்கம்.

“தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்பரவும்

வகை செய்தல் வேண்டும்” என்ற மகாகவி பாரதியின் விருப்பத்திற்கேற்ப அமெரிக்காவில் வாழும் தமிழர்கள் தமிழ்ப் பணியாற்றி வருகிறோம்.

தாய்மொழியை குழந்தைகளுக்கு சிறுவயதிலேயே கற்றுத்தரும்போது அவர்களில் செயல் திறனும் மூளைத்திறனும் அதிகரிக்கும் மனம் விரிவடையும். என்னிடம் என் குழந்தைகள் நாம் அமெரிக்காவில் இருக்கிறோம், நமக்கு ஆங்கிலம் போதுமே ஏன் தாய்மொழியை படிக்க வேண்டும் என்ற கேள்வியை அவள் கேட்டபோது தான் எனக்கு இதற்கான விடையை காண வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. அதனால் தான் தமிழ்பள்ளி வாயிலாக நம் குழந்தைகளுக்கு தாய்மொழி ஆர்வத்தை ஊட்டவேண்டும் என்ற நோக்கத்தில் தமிழை இந்த ஆண்டு மழலை வகுப்புக்கு சிறு சிறு பாடல்கள், கதைகள், ஆத்திசூடி, விளையாட்டின் மூலமாக தமிழை எளிமையாக குழந்தைகளுக்கு புரிந்து கொள்ளும் வகையில் நானும் என் உதவி ஆசிரியர் பிருந்தாவும் மகிழ்ச்சியாக கற்பிக்க ஆரம்பித்தோம்.

நன்றி!

உத்தமிஸ்ரீ முத்தையா,

கேரி தமிழ்பள்ளி ஆசிரியை.

ஆசிரியரிடமிருந்து....



கேரி தமிழ்ப்பள்ளி ஆண்டு மலரின் அன்புமிகு வாசகர்களுக்கு வணக்கம்!

ஆண்டு மலரின் வழியாக மீண்டும் உங்களை சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆண்டு மலரானது மாணவர்களது ஓர் ஆண்டு நினைவு மற்றும் மாணவர்களின் திறமைகளை தாங்கி வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நமது பள்ளி மாணவர்களின் திறமை வளர்ந்து கொண்ட்டிருப்பதை அவர்கள் எழுதும் கட்டுரைகளை பார்க்கும் பொழுதும், படிக்கும் பொழுதும் நாம் தெரிந்து கொள்ளலாம். உதாரணமாக உங்கள் குழந்தையின் ஆரம்பக்கால கட்டுரைகளை இவ்வாண்டு மலரோடு ஒப்பிட்டு அவர்கள் தமிழில் எழுதுவதிலும், சிந்திப்பதிலும் உள்ள ஆற்றலை அறிந்துகொள்ளலாம். அதுமட்டுமல்லாது அவர்கள் கட்டுரைகளில் இருந்து சில புதிய செய்திகளையும் தெரிந்து கொள்ளலாம். இந்த பள்ளி ஆண்டுமலரின் முக்கிய நோக்கம், நமது மாணவர்களின் தமிழ் மொழி மற்றும் கற்பனை திறனையும் வெளி கொணர்ந்து ஆவணப்படுத்துவது ஆகும்.

இந்த ஆண்டும் மாணவர்கள் மிக ஆர்வத்துடன் தங்களை உட்படுத்திக் கொண்டு கட்டுரைகளை படைத்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஆண்டுமலர் தயாரிக்க உதவிய அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். முக்கியமாக தன்னார்வலத் தொண்டர்கள் திரு.நிர்மல்குமார் மற்றும் திரு.நிரஞ்சன் கந்தசாமி அவர்கள் பொறுமையாகவும் மிகச் சிறப்பாகவும் புகைப்படங்கள் எடுத்துக் கொடுத்தமைக்கும், திரு.லோகனாதன் புத்தகம் தயாரிக்க உதவியதற்கும், சிறப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்!

அசோக்குமார் நாகராஜன்
மலர் ஆசிரியர்


கேரி தமிழ்ப்பள்ளி
ஆண்டு 2016-17
கேரி தமிழ்ப்பள்ளி
கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா
Cary Tamil School
Cary, North Carolina, USA
TRACK 1
TRACK 3




வேலப்பன், ரவி, சீனிவாசன், அசோக்குமார், இராஜசேகர், காசி, கஸ்தூரி, மணிவண்ணன், அம்பலவானன்
நிரஞ்சன், கார்த்திகேயன், சிவயோகன், குமரன், செல்வராஜ், சுவாமிநாதன், வல்லபன், ரமேஷ், வேதையன், செல்வன், குரு
வித்யா, சித்ரா, சுபா, மங்கை, லலிதா, ரம்யா, நிர்மலா, சரண்யா, விஜி, கலைவாணி
அருள்விநாயகி, செல்வி, மாரி, பாரதி, ஜெயஸ்ரீ, சுவர்ணா, ஷர்மிலா, அல்லி, சித்ரா, காந்திமதி, சரண்யா, யாமினி, சுபா
உத்தமிஸ்ரீ, சரோஜினி, சத்யா, பாகீரதி, மலர், இராஜி, சாரு, சிவகாமி, விமலா, இந்திரா, மோகனா, ஸ்ரீவித்யா, அனுராதா
பிருந்தா, ஜெயலஷ்மி, லஷ்மி, இராதா, கோல்டா, விகுனா, சபிதா, அருணா, மலர், சங்கீதா, தேவி, ஸ்ரீதேவி, திரிபுரசுந்தரி





தீபிகா ஸ்ரீகாந்த், அக்ஷரா விவேக், பூர்வஜா சரவணன், ரக்ஷனா பாலமுருகன், ஜெய்கிருஷ்ண முனியாண்டி சுரேஷ், அதிதி சுந்தரேசன், நந்திதா அனந்தராமன்

பிருந்தா(ஆ), சார்வின் கௌதமன், ஸ்ரீஹிமானிஷ் பொம்முராஜ், கனிஷ்கா பரத்ரா, அஞ்சனா மூர்த்தி, ருத்விஹா சுப்பிரமணியன், உத்தமிஸ்ரீ(ஆ)


# ஆசிரியை திருமதி உத்தமிஸ்ரீ / பிருந்தா


03/19/2017













நந்திதா
அனந்தராமன்
ஆசிரியர்: உத்தமி
பிருந்தா
வகுப்பு: Pre-K


கனிஷ்கா
Pre-K
உத்தமி
பிருந்தா


பூர்வஜா
மழலை வகுப்பு
உத்தமி
பிருந்தா


I LOVE INDIA
தேசிய
கொடி
ஸ்ரீஹிமானிஷ்
Pre-K
உத்தமி
பிருந்தா
தேசிய
மலர்



என் குடும்பம்
தீபிகா
மழலையர் வகுப்பு
ஆசிரியர்:
உத்தமி,பிருந்தா


அதிதி
Pre-K
திருமதி. உத்தமி, பிருந்தா


மழலை பிரிவு
ஆசிரியர்:
பிருந்தா
உத்தமி


ஆசிரியர்கள்:
உத்தமி,பிருந்தா






**தொல்காப்பியக் கால எழுத்து வடிவங்கள்**






கஸ்தூரி(ஆ), ஜெய், அனீஷ், அக்ஷிதா, அத்ரீஷ், பூர்வா

அபிநவ், வினய், சாசனா, சித்தார்த், ஸ்மையன், கலைவாணி

மலர்(ஆ), மஹதி, ஸ்ரீநிதா, சஹானா, ரிஷி, ஹரிணி, அபிராமி





கிருஷ்ணா, கார்த்திகேயா, இஷான், அர்ஜுன், இந்திராதேவி(ஆ), சர்வேஷ், கிரிஷ்

சுருதி, ரியானா, மோகனா(ஆ), லக்ஷனா, ரித்திகா, ஹர்சினி

அருண், மித்துல், பிரணவ், விமலா(ஆ), சஹானா, ரியான், ஸ்ரீநிதி

# ஆசிரியை திருமதி இந்திரா சுவமிநாதன்











# ஆசிரியை திருமதி கலைவாணி வேலுசாமி















# ஆசிரியர் திரு கஸ்தூரி ரெங்கராஜன்













## ஆசிரியை திருமதி விமலா சுரேஷ்






பெயர் : சஹானா
Sahana
ஆசிரியர்: விமலா சுரே
வகுப்பு: 1
சிறு துளி
பெரு வெள்ளம்


கால் பந்து




ஸ்ரீநிதி ஜெயக்கு
விமலா சுரேஷ்

# ஆசிரியை திருமதி மலர் இளங்கோவன்












# ஆசிரியை திருமதி மோகனா இளங்கோவன்













**<u>எழுத்ததிகாரம்:</u>**

எழுத்ததிகாரத்தில் உள்ள 9 இயல்கள்.

1) நூல் மரபு
2) மொழி மரபு
3) பிறப்பியல்
4) புணரியல்
5) தொகை மரபு
6) உருபியல்
7) உயிர் மயங்கியல்
8) புள்ளி மயங்கியல்
9) குற்றியலுகரப் புணரியல்








திரிபுரசுந்தரி ராஜேந்திரன்(ஆ), ஆதித், சிவானிகா, ஆதவ், லஷ்வின், ஹரிஷ்

தேவிநாச்சாள்(ஆ), தியா, உமர், வசீகரன், பஹீம், நிஷிகா, ஷிவானி, ஹரன், ஆருஷ், ஸ்ரீஅவினேஷ், ஸ்ரீதேவி(ஆ)

சித்ரா நந்தகுமார்(ஆ), மெலிசா, சச்சின், வர்ஷா, பிரஜனா, தான்யா, சஞ்சுஸ்ரீ, ராஷிதா, கீர்த்தனா, நந்தகோபால், கேதவ், பாகீரதி(ஆ)




அருணா(ஆ), ரோஷன், நிஷிகா, நிக்கில், தனீஷ்வரன், அபிநய், சிவகுமார், வெங்கட், வர்ஷினி, விஸ்வேஷ், சுபா(ஆ)

மலர் கண்ணன்(ஆ), சந்தோஷ், சஞ்சனா, அர்ஷா, சர்விகா, சாதனா, நித்திகா, ஆரவ், ஷிரியா, சத்யா எழில்(ஆ)

விகுணா(ஆ), அனிஷா, ஆகாஷ், நிஷி, மித்ரா, மகிழினி, தன்யா, கௌதம், சபிதா தீத்தாரப்பன்(ஆ)




அகிலன், வைஷ்ணவ், இஷான், செம்மல், மங்கையர்கரசி(ஆ)
ஜெயலட்சுமி ரவிகுமார், அனுஷ்கா, அதிதி, ரிஷி, வர்ஷித்தா, ஈஷா, அருணா தர்மர்(ஆ)
சரோஜினி(ஆ), ஹரிணி, வர்ஷா, ஸ்ரீபாலா, அபிநவ், விவின், விஷ்வாஸ், ஸ்ரீநிகா, தாரிணி, ராதா ராமானுஜம்(ஆ)
அனிருத், கார்த்திக், சர்வேஷ், கவின், அசீம், ரியா, ஸ்வேதா, அன்விதா, ஜெயலக்ஷ்மி ராமநாதன்(ஆ)

# நிலை 1அ





ஆகாஷ், வீ ரா, பிரணவ், மணிவண்ணன்(ஆ), வர்ஷா, தர்ஷினி, கிவின்

வினய், கேத்தி, தனுஸ்ரீ, சாருலதா(ஆ), ஆதித்யா, அணிக், சித்தார்த்

சுர்ஜித், வியாஸ், நரேன், ஸ்ரீவித்யா(ஆ), தேவேஷ், கிருஷ்ணா, ராகுல், ஜெயதேவ்

# ஆசிரியை திருமதி பாகிரதி நாராயணன்





சஞ்சூஸ்ரீ செந்தில்குமார்
ஆசிரியர் : பாக்கியரதி - 1-அ

<u>நெல்லிக்காயின் பயன்கள்</u>

- ஒரு நெல்லிக்காய் ஒரு ஆப்பிளுக்கு சமம்.
- வைட்டமின் "சி" மற்றும் இரும்பு தாதுக்கள் உள்ளது.
- நார் சத்து அதிகம் உள்ளது.
- ஆறு சுவைகளில் இனிப்பு, புளிப்பு, கசப்பு,
- துவர்ப்பு, உவர்ப்பு என்னும் ஐந்தும் நெல்லிககாயில் உள்ளன.
- நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ளது.
- ரத்தத்தை சுத்திகரிக்க உதவுகிறது.
- நாள் முழுவதும் சோர்வு இல்லாமல் இருக்கும் ஆற்றல் தருகிறது.
- மேலும் ஏராளமான நன்மைகள் கொண்டது.

பெயர்-கீர்த்தனா பாலா
ஆசிரியர்-திருமதி பாகிரதி
வகுப்பு – IA







# ஆசிரியை திருமதி சித்ரா நந்தகுமார்











## நாய்க்குட்டி

வர்ஷா
1A
சித்ரா



நாய்க்குட்டி நாய்க்குட்டி
எங்கள் வீட்டு நாய்க்குட்டி
நாய்க்குட்டி நாய்க்குட்டி
அது சொல்ல சொல்ல
என்னோடு விளையாடும் நாய்க்குட்டி
ரெம்ப ரெம்ப குரைக்கும் நாய்க்குட்டி
தாவி தாவி குதிக்கும்
அது எங்கள் வீட்டு நாய்க்குட்டி!

மீத்தேன்




பூமியை

பெயர் : சூான்
வகுப்பு : 1 - அ
ஆசிரியர் பெயர் : சித்

# ஆசிரியை திருமதி தேவிநாச்சாள் நாச்சியப்பன்

## மின்னல்

தியா விஜயகுமார்
1 அ
ஆசிரியர் : தேவி



மின்னல் இடியுடன் கூடிய மழை. இது மிகவும் ஆபத்தானது. மின்னலினால் ஆண்டு தோறும் 75 - 100 பேர் வரை இறக்கிறார்கள். மின்னலின் வெப்பம் தோராயமாக 54,000 டிகிரி பாரன்ஹீட் ஆகும். இது சூரியனின் மேற் பரப்பு வெப்பத்தைவிட ஆறு மடங்கு அதிகம். மின்னலின் வண்ணத்தை உறுதியாக சொல்ல முடியாது. மின்னலின் வண்ணம் அதன் பின்னணியை பொறுத்தது.

## குழந்தைத் தொழிலாளர்
[Child Labour]


குழந்தைத் தொழிலாளர் என்பது தொடர்ந்து, நீடித்த பணியில் குழந்தைகள் தொழிலாளர்களாக ஈடுபடுவதைக் குறிக்கிறது. குறிப்பிட்ட வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை கண்டிப்பாக பணியமர்த்தக் கூடாது. இந்த குழந்தைத் தொழிலாளர் வயது வித்தியாசம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது.

- உமர் பர்ஹான்
வகுப்பு - 1A
ஆசிரியர் - திருமதி தேவி


குழந்தைத் தொழிலாளர்
[Child Labaur]

குழந்தைத் தொழிலாளர் என்பது தொடர்ந்து, நீடித்தப் பணியில் குழந்தைகள் தொழிலாளர்களாக ஈடுபடுவதைக் குறிக்கிறது. குறிப்பிட்ட வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளை கண்டிப்பாக பணியமர்த்தக் கூடாது. இந்த குழந்தைத் தொழிலாளர் வயது வித்தியாசம் ஒவ்வொரு நாட்டிற்கும் மாறுபடுகிறது.

-உமர் பர்ஹான்
வகுப்பு-1A
ஆசிரியர்-திருமதி தேவி




## ஆசிரியை திருமதி சுபா பாலகிருஷ்ணன்





பூக்கள் என்னைப் பார்த்துச் சிரிக்கும், அவை நான் பறிக்கும்போதும் சிரிக்கும், அவை சிரித்துக் கொண்டே இருக்கும். காலை நேரம் வருவேன் இந்தக் காட்சி கண்டு மகிழ்வேன்


சாதனா சுப்பிரமணியன்
Shubha balakrishnan
மயில்
திணை: விலங்கு
வகுப்பு: பறவை


FARMER




அழகான
மயில்

# ஆசிரியை திருமதி கிரிஜா இராஜேந்திரன்




பெயர்-ஹரிஸ்
வகுப்பு-1A
ஆசிரியர்-கிரிஜா

## மரம் வளர்ப்போம்

கிளி வளர்த்தேன்
பறந்து விட்டது
அணில் வளர்த்தேன்
ஓடி விட்டது
மரம் வளர்த்தேன்
இரண்டும் திரும்பி
வந்து விட்டது

- அப்துல் கலாம்



பெயர் : சிவாணிகா
வகுப்பு : 1 அ
ஆசிரியர் : கிரிஜா

## பார்! பார்!

தரையின் மேலே
தொட்டி பார்
தொட்டி மேலே
செடியைப் பார்
செடியின் மேலே
பூவைப் பார்
பூவின் மேலே
வண்டைப் பார்
வண்டின் மேலே
பளபளக்கும்
வர்ணம் உண்டு
அதையும் பார்!



முத்துக்கள் அது என்ன?
விடை : மாதுளை

வெற்றிவேள்.ஜெ
1 அ
ஆசிரியை:கிரிஜா




# ஆசிரியை திருமதி மங்கையர்கரசி

## நம் நகரம்


ஆதித் மருது
1 அ
ஆசிரியர்: கிரிஜா

நம் நகரம் மிக அழகான நகரம்
அங்கு நிறைய உயர்ந்த கட்டிடம் இருக்கிறது
அங்கு பள்ளிக்கூடம் இருக்கிறது
பள்ளிக்கூடத்தில் நிறைய மாணவர்கள் இரக்கிறார்கள்
அங்கு பூங்கா இருக்கிறது
பூங்காவில் நிறைய பூக்கள் இருக்கிறது
நம் நகரம் ஒரு நல்ல நகரம்











மாணவர் : செம்மல் சத்ஷ்
வகுப்பு : 1A
ஆசிரியர் : மங்கையர்கரசி




எனக்கு பிடித்த பூ ரோஜா பூ




பழமொழிகள்


1. அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
2. அடக்கமே பெண்ணுக்கு அழகு.
3. அடாது செய்தவன் படாது படுவான்.
4. அடியாத மாடு படியாது.
5. அடி செய்வது அண்ணன் தம்பி செய்யார்.

பெயர்: ஸ்வேதா சுரேஷ்
வகுப்பு: 1A
ஆசிரியர்: மங்கை






## ஆசிரியை திருமதி சபிதா தீத்தாரப்பன்








# ஆசிரியை திருமதி ஜெயலக்ஷ்மி ரவிக்குமார்










# ஆசிரியை திருமதி ஜெயலஷ்மி தேனப்பன்












# ஆசிரியை திருமதி மலர் கண்ணன்









# ஆசிரியை திருமதி சத்யா எழில்வேந்தன்

ஸ்ரீ வர்ஷினி கண்ணன்
அசிரியர் மலர்கண்ணன்
வகுப்பு 1அ



ஷ்ரியா பிரகாஷ்
1-அ
ஆசிரியை: திருமதி. சத்யா

ஆத்திச்சூடி

-ஔவையார்

1) அறம் செய்ய விரும்பு
- தருமம் செய்ய நீ விரும்புவாயாக.

2) ஆறுவது சினம்
- கோபம் தணிந்து விடக்கூடிய தன்மை உடையது.

3) இயல்வது கரவேல்
- இயன்ற தருமத்தை செய்யாமல் இருக்கக் கூடாது.



வகுப்பு 1A பெயர் ஆரவ்
ஆசிரியர் திருமதி.சத்யா

எனக்கு பிடித்த உணவு

வணக்கம், எனக்கு தோசை மிகவும் பிடிக்கும் அது அரிசி மாவும் உளுந்து மாவும் சேர்த்து அரைத்தால் தோசை சுடலாம். எனக்கு மொரு மொரு நெய் தோசை பொடியுடன் சாப்பிட பிடிக்கும்.

கௌதம சரவணன்
வகுப்பு: 1A
ஆசிரியர்: திருமதி. சத்யா

எனக்கு பிடித்த உடை

வணக்கம். நம் தமிழரின் பாரம்பரிய உடையான வேட்டியும் சட்டையும் எனக்கு மிகவும் பிடிக்கும். எங்கள் வீட்டில் என் அப்பாவின் அப்பா அதைதான் அணிவார். என் அப்பாவும் வேட்டியை பண்டிகை மற்றும் விழாகாலங்களில் அணிவார். எங்கள் குடும்பத்தின் பெரியவர்கள் அதனை தங்கள் உடையாக அணிவதைப் பார்த்த நானும் ஆசையுடன் வாங்கினேன். வேட்டியும் அணிவது எனக்கு மிகவும் பிடிக்கும். மிக தமிழ் நாட்டு முதல் அமைச்சர்களும், மிக சிறந்த தலைவர்களும் நம் பாரம்பரிய உடையான வேட்டியை தான் அணிந்தார்கள்.





# ஆசிரியை திருமதி சரோஜினி பிரபாகரன்











## ஆசிரியர் பணி !

ஒரு குழந்தையின் வாயிலிருந்து உதிக்கும்
கேள்வியிலிருந்து நான் பிறக்கிறேன்
அன்புகாட்டும் அன்னையாய் அறிவுபுகட்டும்
தந்தையாய் பல்வேறு உருவெடுக்கிறேன்

பல மருத்துவர்களையும், பொறியாளர்களையும்
உருவாக்கும் ஆற்றல் எனக்குண்டு
சொல்லேர்ரால் சோலைகள் மலர
நல்லதைவிதைக்கும் பொறுப்பும் உண்டு


ஒரு ஓவியனின் வண்ணக்கோர்வையை ஒற்ற
வண்ணநினைவுத்துளிகள் கண்முன் எழுகிறது
ஒரு கேள்விக்கான பற்பல விடைகளை
வியப்போடு எதிர்கொள்ள முடிகிறது

ஒவ்வொரு வருடமும் ஒரு புதிய
புதையலை அள்ளித் தருகிறது
ஒவ்வொரு நாளும் புதுப் பிறவியை
தருகின்றது இந்த அறப்பணி !

- என்னை ஆசானாக்கிய மாணவமணிகளுக்கு இவ்வரிகள்
சமர்ப்பணம்

- ராதா ராமானுஜம்








# ஆசிரியை திருமதி ராதா ராமானுஜம்







# ஆசிரியை திருமதி ஸ்ரீதேவி சுரேஷ்









**பார்! பார்!**

ஹரன் ஆனந்த்
வகுப்பு - 1அ
ஸ்ரீதேவி

தரையின் மேலே
தொட்டிபார்
தொட்டி மேலே
செடியைப் பார்
செடியின் மேலே
பூவைப்பார்
பூவின் மேலே
வண்டைப் யார்
வண்டின் மேலே
பளபளக்கும்
வர்ணம் உண்டு
அதையும் பார்!

அழ. வள்ளியப்பா







## ஆசிரியை திருமதி விகுனா தாமஸ்





# ஆசிரியர் திரு மணிவண்ணன் முத்துமாணிக்கம்



ஜெ. ஜெயதேவ்
1 ஆ பிரிவு
ஆசிரியர் மணிவண்ணன்

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினும் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

## தமிழ் மொழி

Dharshini Raman
Manivanan 1A/1B

தடுக்கி விழுந்தால் மட்டும் அ... ஆ...
சிரிக்கும் போது மட்டும் இ... ஈ...
சூடு பட்டால் மட்டும் உ... ஊ...
அதட்டும் போது மட்டும் எ... ஏ...
ஐயத்தின் போது மட்டும் ஐ...
ஆச்சர்யத்தின் போது மட்டும் ஒ... ஓ...
வக்கணையின் போது மட்டும் ஔ...
விக்களின் போது மட்டும் ஃ...
என்று தமிழ் பேசி மற்ற நேரம்
வேற்று மொழி பேசும்
தமிழர்களிடம் மறக்காமல் சொல்
உன் மொழி
தமிழ் மொழியென்று!!!



## இந்தியா


ஆகாஷ் சதிஷ்
1 ஆ பிரிவு
ஆசிரியர்: மணிவண்ணன்



இந்தியா என்
தாய்நாடு. மிகவும்
பிடித்தமான விடுமுறை
இடம் நான் அங்கு
சந்தோஷமாக இருப்பேன்.
என் பாட்டி, தாத்தா,
அம்மம்மா அங்கு
இருக்கிறார்கள்.



கசப்பான காய் (அக்கா)
அன்பான நாய்
அகலமான தாய்
ஆசையான அப்பா



வர்ஷா சிவகுமார்
1 பி
மணிவண்ணன்

## இந்திய தேசிய சின்னங்கள்



தேசியப் பறவை- மயில்
தேசிய மலர்- தாமரை
தேசிய விலங்கு- புலி
தேசியக் கனி- மாம்பழம்
தேசிய மரம்- ஆலமரம்
தேசிய மொழி- இந்தி
தேசிய கீதம்- ஜனகணமன
தேசிய விளையாட்டு- ஹாக்கி
தேசிய பாடல்- வந்தே மாதரம்
தேசிய நதி- கங்கை
தேசியச் சின்னம்- அசோகச் சக்கரம்
தேசிய கொடி- மூவர்ணக் கொடி







# ஆசிரியை திருமதி ஸ்ரீவித்யா வெங்கடராகவன்

Kevin Richard
Manivannan
1A/1B

மலர்கள் வசந்த காலத்தில் பூக்கும். அனைத்து வண்ணங்கள். மற்றும் வடிவங்கள். விலங்கு குட்டிகள் பிறந்தனர். சூரியன் பார்த்து புன்னகைத்தது. எல்லாரும் மகிழ்ச்சியாக உள்ளனர். வசந்தம் இங்கே. வந்தது.









கிரிஷ்ணா
1 ஆ பிரிவு
ஆசிரியர் ஸ்ரீவித்யா

## சிலப்பதிகாரம்

இது ஒரு காப்பியம். சிலம்பு – அதிகாரம் என்ற இரு சொற்களால் ஆனது. இதை எழுதியவர் இளங்கோ அடிகள். இதில் கோவலன், கண்ணகி, மாதவி, பாண்டியன் நெடுஞ்செழியன் ஆகியோர் பற்றிய கதை உள்ளது. பூம்புகார், மதுரை ஆகிய இடங்களில் இக்கதை நடைபெறுகிறது. கண்ணகியின் சிலம்பை விற்கச் சென்ற கோவலனை பாண்டியன் தவறாக தண்டிக்க கண்ணகி பாண்டியன் சபைக்குச் சென்று கோவலன் நிரபராதி என்று நிரூபிக்கிறாள். இதை அறிந்த பாண்டியன் தன் உயிரை விடுகிறான். கண்ணகி மதுரை நகர் எரியட்டும் என்று சபிக்கிறாள்.

-ராகுல்
1A/1B
Sri Vidhya



அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

-ராகுல்
1A/1B

செ டேவேஷ்
1-ஆ
ஆசிரியை – ஸ்ரீ வித்யா

எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் – ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்

– மகாகவி பாரதியார்

நரேன பரீவித்

# திருக்குறள்

1. கற்றதனால் ஆய பயனென்கொல்
நற்றான் தொழா அர் எனின.

2. இல்வாழ் வான் என்பான
இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.


3. அறிதாற்றி அல்லல்நோய் நீக்கிப்
பிரிவாற்றிப் பின்இருந்து வாழ்வ
பலர்.



## ஆசிரியை திருமதி சாருலதா குருபரன்

தனுஶ்ரீ வேலு
1அ/ஆ பிரிவு
ஆசிரியர்: சாரு குருபரன்

உடுக்கை இழந்தவன்
கைபோல ஆங்கே
இடுக்கண்
களைவதாம் நட்பு



Cathy Walter
1B
Sarulatha

## வாழை மரம்

வாழைப் பழங்கள் காய்க்கும்
வாழை மரங்கள் உண்மையில்
மரங்கள் இல்லை. அதாவது வாழை
மரம் என்று நாம். கூறுவது தவறு.
அது ஒரு தாவரம். ஏனெனில்
மரங்களில் உள்ளது போல் கடினமான
தண்டுப் பகுதியோ, கிளைகளோ
இருப்பதில்லை.



பெயர் : அனிக் ஹரிலீல்
வகுப்பு : 1 – ஆ
ஆசிரியர் பெயர் : சாரு குமரன்



# கனவு காணுங்கள்

இந்தியா
எனது தாய்நாடு

பெயர் : ஆதித்தியா
வகுப்பு : 1 ஆ
ஆசிரியர் : சாருலதா





# கன்னியாகுமரி

பெயர் : சித்தார்த் சரவணன்
வகுப்பு : 1A/1B
ஆசிரியர் : திருமதி. சாருலதா குருபரன்

போனமுறை நான் இந்தியா சென்று இருந்தபோது கன்னியாகுமரிக்கு செல்லும் வாய்ப்பு அமைந்தது. இது இந்தியாவின் தெற்கு எல்லையில் அமைந்த கடற்கரை நகரம். இதன் கடற்கரையில் இருந்து நம்மால் சூரிய உதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் பார்க்க முடியும்.

அங்கு கடலில் உள்ள பெரிய பாறைகளில் திருவள்ளுவருக்கும், விவேகானந்தருக்கும் நினைவு மண்டபங்களை கட்டியுள்ளனர். அவை பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. அந்த பாறைகளில் இருந்த போது அடித்த கடற் காற்று எனக்கு மிகவும் பிடித்து இருந்தது.



# பாரதியார் பொன்மொழிகள்



வினய்
1-ஆ பிரிவு
ஆசிரியர்-சாருல

தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா.

அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழிய வே!"

# நிலை 1ஆ



சரண்யா(ஆ), ப்ரணயஹா, சுசித்ரா, சுகிதா, சான்வி, ஜெனிகா, கார்திகேயன்(ஆ)

ஆதித், ஹர்ஷிதா. சிவகாமி, காவ்யா, ஜனனி, வர்ணிகா, தனிஷ்

வித்யா(ஆ), கவின், ஆகாஷ், மாதினி, தீக்ஷிதா, அர்ஜுன், ஜெகதீஸ்வர், கோல்டா மெர்லின்(ஆ)

# நிலை 1 ஆ





அதித்தி, கேட்லின், சர்வேஷ், சந்தோஷ், சாய்சரண், சுபத்ரா(ஆ)

சுவர்ணா(ஆ), இனியா, ஆடலைன், ஷில்பா, ஹரிணி, சித்தார்த்தா, நிதீஷ்


ஜெயஸ்ரீ(ஆ), பிருந்தாஸ்ரீ, ஹரிணி, சோனிகா, ஹர்ஷினி, மான்ஷி, சுதீப், புவன், யாமினி(ஆ)

# நிலை 1 ஆ





மாரி(ஆ), சேஷா, சஞ்சய்ராம், ஆகேஷ், தனஞ்ஜெய்
பாரதி(ஆ), வைஷ்ணவி, நிசிதா, நீலேஷ், ஹாசியா, சஞ்சய்
அருள்விநாயக செல்வி(ஆ), அஞ்சனா, ஜோன்ஸ், அதிதி, ஸ்ரீதிக்ஷிதா


# ஆசிரியை திருமதி அருள்விநாயகசெல்வி ஸ்ரீஹரி














**ஆசிரியை திருமதி**

**பாரதி முருகேசன்**


பெயர் : சந்சய் ராம்
ஆசிரியர் : பாரதி
வகுப்பு : 1ஆ





தனஞ்ய் வேலு
1ஆ பிரிவு
ஆசிரியர் : பாரதி முருகேசன்


என் பெயர் தனஞ்சய் வேலு. நான் 1ஆ தமிழ் வகுப்பில் படிக்கிறேன். நான் உயர்நிலை பள்ளியில் படிக்கிறேன். எனக்கு தமிழ் படிக்க எழுத ஆர்வமாக உள்ளேன். எனக்கு தமிழ் கலாச்சாரம் பற்றி அறிய வேண்டும். ஆதலால் தமிழ் பள்ளியில் படித்து, அதன் மூலம் தமிழ் கலாச்சாரம் கற்று கொள்வேன்




ஆசிரியை திருமதி **மாரியம்மாள் நாராயணன்**



## வண்ணத்துப்பூச்சி

சேஷா 1ஆ
மாரியப்பன்

வண்ணத்துப் பூச்சி வண்ணத்துப் பூச்சி
பறக்கிறது பார் பறக்கிறது பார்
சிறகை அடிக்குது பார் அடிக்குது பார்
தேனைக் குடித்து தேனைக் குடித்து
களிக்குது பார் களிக்குது பார்



## விடுகதைகள்

பெயர்: ஸ்ரீகிருத்திகா
வகுப்பு: 1ஆ
ஆசிரியர்: மாரி

1 மூடிய வெள்ளைக் கிணற்றுக்குள் மஞ்சள் நிலா.

2. கிண்ணம் போல் பூ பூக்கும், பானை போல் காய் காய்க்கும். அது என்ன?

3. விடிய வேலை செய்பவனுக்கு ஒரு கை பிரியதாம். அவன் யார்?

4. மூவராய் சேர்வார்கள், சிவப்பு வண்ணம் தீட்டுவார்கள். அவர்கள் யார்?

5. மண்ணுக்குள் மறைந்திருப்பேன், மங்களத்தை வழங்கிடுவேன். நான் யார்?

விடை: 1) முட்டை 2) பூசணிக்காய் 3) கடிகாரம்
4) பாக்கு, வெற்றிலை 5) மஞ்சள்

அதித்தி -1B
Mari Narayanan



...லையில் விடி வாசலில் கோலம் போடுவார்க
...ட்டுக்கு அழகாக அமையும்
...ார்கழி மாதம் விடியலில் கோலம் போட்டு
ஆண்டாள் திருப்பாவை பாடுவார்கள்
...ட்டை பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

## என் கப்பல்

பெயர்: சஞ்சய் கண்ணன்
ஆசிரியர்: மாரி
வகுப்பு: 1B


என் கப்பல்

கப்பல் அழகு கப்பல்
அசைந்து ஆடும் கப்பல்
காற்று வீசும் திசையில்
பயணம் செல்லும் கப்பல்
உலகம் சுற்றும் கப்பல்
எனக்கு பிடித்த கப்பல்



# ஆசிரியர் திரு கார்த்திகேயன் நாகலிங்கம்










# ஆசிரியை திருமதி சரண்யா கார்த்திகேயன்




பிரணையா ராகவ்
1B : சரண்யா

## தஞ்சை பெரிய கோவில்

தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் உள்ள பிரஹதீஸ்வரர் மிகவும் பழமையான கோவில். இந்த கோவில் தஞ்சை பெரிய கோவில் எனவும் அழைக்கப்படும். இக்கோவில் 1000 ஆண்டுகளுக்கும் மேல் பழமையானது. ராஜா ராஜா சோழன் என்ற அரசனால் இந்த கோவில் கட்டப்பட்டது.

இக்கோவிலின் கோபுரம் மிக உயரமாக இருக்கும். அதுபோல் இந்த கோவிலில் இன்னொரு சிறப்பு, நந்திகேஸ்வராின் சிலை. இந்த சிலை ஒரே கல்லால் செய்யப்பட்டது.

இத்தனை அழகான கோவில் நம் தமிழர்களின் வரலாற்றையும், பெருமையையும் குறிக்கும்



| ஸ்ரீ அகத்திய மாமுனிவர் |

1. சித்தர்களில் முதலானவர்.
2. தமிழ் கடவுள் ஸ்ரீ முருக பெருமானிடம் தமிழ் மொழி மற்றும் சித்த மருத்துவத்தைக் கற்றவர்.
3. தமிழ் மொழியின் தந்தையாகக் கருதப்படுபவர்.
4. தமிழ் மொழியின் முதல் இலக்கண நூலான அகத்தியத்தை எழுதியவர்.
5. தொல்காப்பியத்தை எழுதிய தொல்காப்பிய முனிவர் இவரது மாணவர்களில் ஒருவர்.

பெயர்: ஜெகதீஷ்வர் முருகேசன்
வகுப்பு: 1 ஆ
ஆசிரியர்: திருமதி. சரண்யா ரங்கராஜ்

திருமதி. சரண்யா (1 B)
வர்ணிகா ரவிவர்மா

தமிழ் குறள்:

அன்பும் Love 3 | அறனும் Virtue 4 | உடைத்தாயின் Possesses 2 | இல்வாழ்க்கை Married Life = Family 1



பண்பும் Quality 5 | பயனும் Benefit 6 | அது. It = Family 7 = 1




Be Happy = Quality + Benefit
= 5 + 6

ஆங்கில குறள்:

Family Possesses Love Virtue
1 2 3 4
It'd be happy
7 5 6


உலக குறள்:




# ஆசிரியை திருமதி ஜெயஸ்ரீ முருகேசன்

இந்தியா

பெயர்: சோணிகா சங்கர்
வகுப்பு: 1B
ஆசிரியர்: ஜெயஸ்ரீ முருகேசன்




பெயர்: ஹரிணி நிர்மல்குமார்
வகுப்பு: ஆ
ஆசிரியர்: ஜெயஸ்ரீ முருகேசன்

| தமிழ் எண்கள் | ஆங்கிலம் எண்கள் |
|---|---|
| ௧ | 1 |
| ௨ | 2 |
| ௩ | 3 |
| ௪ | 4 |
| ௫ | 5 |
| ௬ | 6 |
| ௭ | 7 |
| ௮ | 8 |
| ௯ | 9 |
| ௰ | 10 |
| ௱ | 100 |
| ௲ | 1000 |


5247 - ௫ ௲ ௨ ௱ ௪ ௰ ௭
5 100 2 100 4 10 7







# ஆசிரியை திருமதி சுபத்ரா முருகானந்தம்






சந்தோஷ் குமரன்
ஆசிரியர்: சுபத்ரா
வகுப்பு: 1ஆ

## திருக்குறள்

அதிகாரம்: 13 அடக்கமுடைமை

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு

பொருள்: தீயினால் உண்டாகிய புண் வெளியில் வடுவைத் தந்தாலும் ஆறிவிடும். ஆனால் உடலின் வெளியில் எத்தகைய வடுவையும் உண்டாக்காத நாவினால் சுட்ட வடு ஆறவே ஆறாது. அதனால் நல்லதை மட்டுமே பேசுவோம்.







## முட்டாள் காகம்!

ஒரு நாள் ஒரு நரி ரொம்ப பசியோடு இருந்துச்சு அது உணவு தேடி ரொம்ப அலைந்தது. அப்பொழுது ஒரு மரத்தின் மேல காக்கம் வடையை வாயில் வச்சிகிட்டுந்துச்சு. அந்த வடையை எப்படியாவது வாங்கணுமேன்னு நரி யோசிச்சது. அந்த காகம் கிட்ட நரி போயி காகம் நீ ரொம்ப அழகா இருக்க ஒரு பாட்டு பாடேன்னு சொல்லுச்சு. நரியோட பேச்சுல நம்பி காகம் பட வாயை திறந்துச்சாம், வடை கீழே விழுந்துச்சாம். அந்த நரி வடையை சாப்பிட்டு ஓடியே போயிடுச்சு!!!

மாணவன் :- சாய்சரண் கார்த்திகேயன்
ஆசிரியர் :- சுபத்ரா
வகுப்பு - 1ஆ

ஔவையாரின்

## 'ஆத்திசூடி'

1) அறஞ்செய விரும்பு
(அறம் - தருமம்)
தருமம் செய்ய நீ விரும்பு வாயாக


2) ஆறுவது சினம்
(சினம் - கோபம்; ஆறுவது - தணிவது
கோபம் தணிந்து விடக்கூடிய தன்மையுடையது!!

3) இயல்வது கரவேல்
(இயல்வது - இயன்ற; கரவேல் - தருமத்தை செய்யாமல் இருத்தல் கூடாது)
செய்வதற்கு இயன்ற தருமத்தை செய்யாமல் இருக்ககூடாது!!





# ஆசிரியை திருமதி சுவர்ணா விஜயகுமார்












சித்தார்த்தா

ஆசிரியர்: சுவர்ணா விஜயகுமார்

1 ஆ



சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்து
ஒருபால் கோடாமை சான்றோர்க்கு அணி




**ஆசிரியை திருமதி**

**வித்யா வைத்யநாதன்**




சிவகாமி

1 ஆ

ஆசிரியர்: வித்யா வை


## அம்மா

இந்த உலகத்தில் எனக்கு மிகவும் பிடித்தவர் என் அம்மா அவர் எனக்கு பாட்டும், கதையும் சொல்லி சாப்பாடு ஊட்டுவார். எனக்கு தினமும் பாடம் சொல்லித் தருவார். உடம்பு சரியில்லாத போது என்னை மிகவும் நன்றாக கவனித்துக் கொள்வார். எனக்கு வேண்டிய எல்லாப் பொருட்களையும் வாங்கித் தருவார். என் அம்மா அன்பானவர்.

## ரோஜாப்பூ

ஜனனி
வகுப்பு:1B
ஆசிரியர்:- வித்யா

எனது பெயர் ரோஜாப்பூ.
நான் பலரது வீட்டுத்
தோட்டங்களையும் அலங்கரிப்பவள்.
நான் சாமி படங்களை மிக
அழகாக அலங்கரிப்பேன் .
நான் எந்த சாதி மதமும்
பார்ப்பதில்லை. எனக்கு பல நிறங்கள் உண்டு
அதனால் என்னை பல பட்டாம்பூச்சிகளும்
சுற்றி வருகின்றன. தேனீக்கள் உறிஞ்சும்
தேனையும் தருகின்றேன். மனிதனுக்கு மருந்தாகவும்
உதவுகின்றேன். நான் இருக்கும் இடமெல்லாம்
இனிய மணம் வீசுவேன்.






## ஆசிரியை திருமதி யாமினி ராஜாஜி


### மகா பாரதம்

புவன் பிரவீன்
1B
Ms. யாமினி

மகா பாரதம் ஒரு இந்திய இதிகாசம்.
அது மாமுனிவர் வியாசரால் இயற்றப்பட்டது.
அதில் தர்மத்தின் வழி வாழும்
பாண்டவர் ஐவரும் தங்கள் உரிமைக்காக
போராடுவர். விஷ்ணுவின் அவதாரமாகிய
கிருஷ்ணனும், பாண்டவரின்
மனைவியாகிய பாஞ்சாலியும்
பாண்டவர்க்கு துணை நின்றனர்.
வாழ்க்கையின் யுத்தங்களுக்கு மட்டும்
அல்ல, வாழ்க்கை வாழ்வதற்கான நெறியே
தர்மமாகும் என்னும் பாடத்தை நமக்கு
கற்றுதருவது மகா பாரதம். நாமும் அதன்
வழி நடப்போம்!

### வீடு எங்கே!


பெயர்: மான்ஷி சுதாகரன்
வகுப்பு: 1ஆ
ஆசிரியர்: இரா. யாமினி



குட்டிக்குரங்கு வீடு கட்டியது.
தோசைதான் வீட்டின் தரை!
வாழைப்பழங்களே வீட்டின் தூண்கள்.
வெல்லம் தான் சுவர்.
முறுக்குதான் சன்னல்.
அப்பளமே கூரை.
எறும்பு வந்தது.
எலி வந்தது.
பூனை வந்தது.
காகம் வந்தது.
வீடு எங்கே போனது!








ஆசிரியை திருமதி

**கோல்டா மெர்லின்**






நான் பிறந்த ஊர் "நாமக்கல்"

சுசித்ரா தாணுமாலயன் I "ஆ"

ஆசிரியர்: திருமதி. கோல்டா மெர்

மக்கலின் சிறப்புகள் :-

7 - ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஊர்.

நாமக்கல் மலைக்கோட்டை.

ல்லவ கட்டடக் கலைக்குச் சான்றாக ரங்கநாத சுவாமி மற்றும் நரசிம்ம சுவாமி கோவில்கள்.

8 அடி ஆஞ்சநேயர் கோவில்.

இந்தியாவின் முட்டை உற்பத்தியில் 2-ஆம் இடம்.

கோழிப்பண்ணை, லாரி கட்டுமான தொழில்.

கே அருகில் சுற்றுலாத் தலமான கொல்லிமலை



**<u>சொல்லதிகாரம்:</u>**

சொல்லதிகாரத்தில் உள்ள 9 இயல்கள்.

1) கிளவியாக்கம்
2) வேற்றுமை இயல்
3) வேற்றுமை மயங்கியல்
4) விளி மரபு
5) பெயரியல்
6) வினை இயல்
7) இடையியல்
8) உரியியல்
9) எச்சவியல்

# நிலை 2அ




செல்வராஜ்(ஆ), தியாகராஜன்(ஆ), வர்ஷினி, தேஜஸி, அரவிந்த், ஸ்ரேயஸ், விஷ்ணு, நிரஞ்சன்(ஆ)
குமரன்(ஆ), கௌதம், நித்தின், ரேவன்த், அக்ஷிதி, சஹானா, ஷிவானி, அனந்து, தீபக்
பிருத்து, புவனேஷ், வினய், ஸ்மிரிதி, சங்கவி, நிகீதா, மரீயா, சவிதா, சுவாமிநாதன்(ஆ)
அம்பலவானன்(ஆ), ஸ்ரீநாத், மிருதுளா, ஜானிஸ், ஜனனி, சிரியா, சித்தார்த், ரோஹன், நிஷாந்த், பழனி

# ஆசிரியர் திரு அம்பலவாணன் சுப்பையா

## மரம் வளர்ப்போம்


பெயர்- மிருதுளா பாலா
ஆசிரியர்- திரு அம்பலவானன்
வகுப்பு- 2A



மரம் வளர்த்தால் மழை வரும்.
மழை வந்தால் பூமி செழிக்கும்.
மரம் வளர்ப்போம்!
வளம் பெறுவோம்!

ஸ்ரீநாத் ஜெயராமன்
வகுப்பு:2அ
அம்பலவாணன்

நான் இரண்டு வாரங்களுக்கு முன் "பளானடேரியம்" சென்றேன். அது என்ன என்று எனக்கு தெரியாது. ஆனால் அதன் உள்ளே சென்ற பின் நான் வியந்தேன். அதன் உள்ளே வானம் எப்படி இருக்கும் என்று பார்த்தேன். நட்சத்திரங்களை மிக சமீபத்தில் பார்த்தேன். பல விண்வெளி கோளங்களை பார்த்தேன். எனக்கு "பளானடேரியம்" மிகவும் பிடித்தது.






பெயர்: ... அம்பலவாணன்
வகுப்பு: 2-அ
ஆசிரியர்: அம்பலவாணன்

## புதிய ஆத்திசூடி

அச்சம் தவிர்.
ஆண்மை தவறேல்.
இளைத்தல் இகழ்ச்சி.
ஈகை திறன்.
உடலினை உறுதிசெய்.
ஊண் மிக விரும்பு.
எண்ணுவது உயர்வு.
ஏறுபோல் நட.
ஐம்பொறி ஆட்சிகொள்.
ஒற்றுமை வலிமையாம்.
ஓய்தல் ஒழி.
ஔடதம் குறை.

சி. சுப்ரமணிய பாரதியார்

பெயர் – கௌதம்
ஆசிரியர் – அம்பலவாணன்
வகுப்பு – 2A


## பனி

எனக்கு குளிர் காலத்தில் வரும் பனிபொழிவு மிகவும் பிடிக்கும் வெண்மை நிறத்தில் வானத்திலிருந்து சிறுசிறு துகள்களாக விழும் பனிபொழிவை பார்க்க மிகவும் அருமையாக இருக்கும். புல்வெளியில் விழுந்த பனிகளைச் சேர்த்து. நண்பர்களுடன் சேர்ந்து பனிமனிதன் சிலை செய்து விளையாடுவோம் தெருவில் நண்பர்களுடன் சேர்ந்து. பனிசறுக்கு விளையாட்டில் விளையாடுவேன்.



## செடி வளர்ப்பது எப்படி

பெயர் : வர்ஷ்னு
ஆசிரியர்: கலைச்செல்வி
வகுப்பு: 2A



1. ஒரு சிறிய தொட்டியை எடுத்துக்கொள்ளவும்.
2. அதில் மண் நிரப்பவும்.
3. விதைகளை தொட்டியில் போடவும்.
4. தினமும் தண்ணீர் ஊற்றவும்.
5. தினமும் சூரிய வெளிச்சத்தில் வைக்கவும்.
6. சில நாட்களில் செடிகள் வளர ஆரம்பிக்கும்.
7. தினமும் நீர் ஊற்றி கவனிக்கவேண்டும்.

# ஆசிரியை திருமதி
# கலைச்செல்வி சூலூர்

அக்ஷிதி நாராயணன்
2அ
ஆசிரியர்:
கலைச்செல்வி



## தமிழ் நாட்டின் நடனங்கள்

தமிழ் நாட்டில் பல்வேறு வகையான நடனங்கள் இருக்கின்றன. அவை ஒயிலாட்டம், கரகாட்டம், கோலாட்டம், பறையாட்டம், கும்மியாட்டம், மயிலாட்டம், பொய்கால்குதிரை போன்றவை. இவற்றில் எனக்கு பிடித்தது பொய் கால் குதிரை. நான் இந்தியா சென்றபோது. எங்கள் கிராமத்தில் இந்த நடனம் பார்த்தேன். அதில் காலில் கொம்பு கட்டி, குதிரை போல் உடை அணிந்து ஆடினர். இந்த நடனம் திருவிழாவில் சிறப்பாக நடைபெறும்.


## திருக்குறள்

அரவிந் சிவகுமார் – 2அ
ஆசிரியர்: கலை செல்வி



① அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

விளக்கம்:
எழுத்துக்கள் எல்லாம் 'அ'வில் தொடங்குகின்றன. அது போல், உலகம் கடவுளில் தொடங்குகிறது.




② கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

விளக்கம்:
கற்கத் தகும் நூல்களைப் பிழை இல்லாமல் கற்க; கற்ற பிறகு கற்ற கல்விக்கு ஏற்ப நல்ல வழிகளில் வாழ்க.

# ஆசிரியர் திரு குமரன் தக்ஷினாமூர்த்தி

மாணவர் பெயர்: பிருத்து பொன்னுசாமி
ஆசிரியர் பெயர்: குமரன்
வகுப்பு: 2அ





தமிழ் கடற்காவல் தமிழ் கடல் எல்லையில் நுழைந்தாதைக் நுழையாமல் தடுக்கவும் [illegible] மாற்று நாட்டின் மீனவர்களை [illegible] கொடுக்கிறது. தமிழ் மீனவர்களை அவர்கள் மீன் பிடிக்க செல்லும் போது காப்பாற்றுவதும் தலையாய கடமையாகும். மீட்பு பணிகளை செய்து மக்களை காப்பாற்றவும் உதவுகிறது.

## பொங்கல்

பெயர்: புவனேஷ்
Bhuvanesh Senthil
வகுப்பு: 2அ
ஆசிரியர்: குமரன்

வெள்ளை வெல்லம் அடித்துவைத்து,
வீட்டை நன்கு மெழுகிவைத்து,
விடியும் போதே குளித்துவிட்டு,
விளக்கு ஒன்றை ஏற்றிவைத்து,
கோலம் இட்ட பானைவைத்து
கொத்து மஞ்சள் கட்டிவைத்து,
அந்தப் பானை தன்னைத்தூக்கி
அடுப்பில் வைத்துப் பாலை ஊற்றிப்
பொங்கிப் பாலும் வருகையிலே
பொங்கலோபால் பொங்கலென்போம்.
தேங்காயோடு கரும்பும், சோறும்
தெய்வத் துக்குப் படைத்துவைத்து,
ஒன்று சேர்ந்து உண்டிடுவோம்,
ஓடி ஆடி பாடிடுவோம்.

பெயர்: ஸ்மிரிதி
வகுப்பு: 2A
ஆசிரியர்: குமரன்



வார்த்தைகளே இல்லாத வடிவம்,
அளவுகோலே இல்லாத அன்பு
சுயநலமே இல்லாத இதயம் ;)
வெறுப்பை காட்டாத முகம்

அம்மா..!

## பூங்கா

பெயர்: வினய் நாகராஜன்
வகுப்பு: 2A
ஆசிரியர்: குமரன்

பூங்கா என்றாலே நினைவிற்கு வருவது மரங்கள், மலர்கள், விளையாட்டுத்திடல், மணல்வெளி மற்றும் உணவு விடுதி. பூங்கா மிகவும் அழகானது. நிறைய மரங்கள் நிழலையும், குளிர்ந்த காற்றையும் தருகின்றன. பூங்காவில் எனக்கு மிகவும் பிடித்தது விளையாட்டு மைதானம். நாங்கள் எப்போதும் நண்பர்களுடன் பூங்கா செல்வோம். நான் என் நண்பர்களுடன் விளையாடுவேன். சிறிது நேரத்திற்கு பிறகு உணவு அருந்து விட்டு, இளைப்பாறிவிட்டு பின் வீடு திரும்புவோம்.



# ஆசிரியர் திரு நிரஞ்சன் குமார்

## தீபாவளி

-தீபக்

ஆசிரியர்: நிரஞ்சன்
மாணவர்: தீபக்




தீபாவளி ஒரு மகிழ்ச்சியான விழா. நாங்கள் குடும்பத்தோடு இந்த விழாவை கொண்டாடுவோம். எனக்கு பிடித்த வெடி புஸ்வானம். ஒவ்வொரு வருடம் வாண்வெடி பட்டாசுகள் நாங்கள் வெடிப்போம். ஏன் தீபாவளி கொண்டாடுகிறோம் என்று உங்களுக்கு தெரியுமா? ஏன் என்றால் ராவணனை ராமன் அழித்ததினமே தீபாவளியாக கொண்டாடப்படுகிறது அதுபோல் நம் மனதில் உள்ள ராவணன் என்னும் தீய குணங்களை அழிக்கும் தினமாக தீபாவளியை நாம் எண்ண வேண்டும். அதனாலேயே தீபாவளி தீபங்களின் திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது. அந்த ஒளியைக் கொண்டு மனதின் இருளை நாம் போக்க வேண்டும்.

அது மிகவும் மகிழ்ச்சியான, தினமாக உள்ளதாலேயே நிறைய இனிப்புகள் உண்கிறோம். தீபாவளி அன்று புத்தாடை அணிந்து, நண்பர்களை சந்தித்து விளையாடி மகிழ்வோம்.

## மீளருவாக்கம் (Recycle)

பெயர்: ஹர்ஷினி தண்டபாணி
ஆசிரியர்: நிரஞ்சன் கந்தசாமி
வகுப்பு : 2அ



ஒரு பொருளின் பயன்பாடு முழுவற்றதுடன் அதன் மூலப்பொருட்களை புதிய பொருட்களாகச் செய்யும் செயற்பாடு மீளருவாக்கம் (Recycle).

மீளருவாக்கம் புதிய மூலப்பொருள் தேவையையும் பதனிடத் தேவையான ஆற்றலையும் குறைப்பதோடு கழிவுப் பொருள் வெளியேற்றத்தையும் குறைக்கிறது.

கண்ணாடி, காகிதம், மாழைகள், நெகிழிகள், நெய் பொருட்கள், இலத்திரனியல் கருவிகள் போன்றவை மீளருவாக்கம் செய்யப்படக்கூடியனவாகும்.

தயவுசெய்து மீளருவாக்கும் பொருட்களை கழிவுப் பெட்டிகளில் மட்டுமே போடுங்கள்

நன்றி

ஹர்ஷினி

பெயர் :- நியந்த்ரி பூர்ணா தியாகராஜன்
வகுப்பு :- இ அ
ஆசிரியர் :- நிரஞ்சன் கந்தஸ்வாமி



## எம்.எஸ்.சுப்புலட்சுமி

எம்.எஸ்.சுப்புலட்சுமி என்று பரவலாக அறியப்படும் மதுரை சண்முகவடிவு சுப்புலட்சுமி (செப்டம்பர் 16, 1916-டிசம்பர் 11, 2004) ஒரு புகழ்பெற்ற கர்நாடக இசைப்பாடகியாவார். 1998 ஆம் ஆண்டு இந்தியாவின் மிக உயர்ந்த விருதான பாரத ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு, வங்காள மொழி, இந்து, சமஸ்கிருதம், குஜராத்தி ஆகிய பல மொழிகளில் இவர் பாடியுள்ளார். மேலும் ஐக்கிய நாடுகள் அவையிலும் இவர் தன் அரங்கேற்றத்தை நிகழ்த்தியுள்ளார்.

## ஜல்லிக்கட்டு



ஜல்லிக்கட்டு தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்று. மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் கொம்பைப் பிடித்து அடக்குவதுதான் விளையாட்டு.

தான்யா விஜயகுமார்
2 அ
நிரஞ்சன் குமார்

# ஆசிரியை திருமதி சங்கீதா மகேந்திரன்

பெயர் – நிதின் ஜெ
வகுப்பு – 2A
ஆசிரியர் – சங்கீதா

பசு மாடு



வீட்டு விலங்குகளில் மிகவும் பயன் தரும் விலங்கு பசு ஆகும். பசு மாடு பால் தரும். வைக்கோல், புல், புண்ணாக்கு போன்றவை உண்ணுகிறது. கழுநீரை விரும்பிக் குடிக்கிறது. பால் தந்து பல உயிர்களை காப்பதால் பசுமாட்டை "கோமாதா" என்று அழைக்கிறோம். பசு மாட்டின் சாணம், சிறுநீர் போன்றவை பயிர்களுக்கு சிறந்த உரமாக ஆகிறது.

---

என் சொகுசு வாகனம்

பெயர் : ரேவந்த்
வகுப்பு : 2A
ஆசிரியர் : சங்கீதா



இது என் சொகுசு வாகனம்
என் வாகனத்தில் எட்டு
சக்கரம் உள்ளது. மூன்று
சக்கரம் கீழ் தொடும். ஐந்து
சக்கரம் மின்சாரம் செய்யும்

---

பெயர்: ஓவியா நம்பி
வகுப்பு: 2 அ
ஆசிரியர்: சங்கீதா

திருக்குறள்

1. அறத்துப்பால்

1. கடவுள் வாழ்த்து

1. அகரமுதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

குறள் விளக்கம்:

எழுத்துகள் எல்லாம் அகரத்தை அடிப்படையாக கொண்டிருக்கின்றன. அது போல உலகம் கடவுளை அடிப்படையாக கொண்டிருக்கிறது.

---

சஹானா மற்றும் கயல்




ஒருநாள் சஹானா கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு பெரிய அலை அவளை கடலுக்குள் இழுத்து சென்றது. அங்கு அவள் கடல்கன்னி கயலைப் பார்த்தாள்.

சஹானா : வணக்கம்
கயல் : வணக்கம். உனக்கு தமிழ் தெரியுமா?
சஹானா : ஆமாம். எனக்கு தமிழ் எழுத படிக்கவும் தெரியும். என் தாய்மொழி தமிழ். நான் தேரி தமிழ் பள்ளிக்குச் செல்கிறேன். அதனால் என் தாத்தா, ஆச்சி, அம்மம்மாவிடம் எளிதாக தமிழில் பேசுகிறேன்.
கயல் : உலகின் பழமையான மொழி தமிழ். அதை கற்க பள்ளிக்கு செல்லும் உன்னை நினைத்து மிகவும் பெருமையாக உள்ளது.
சஹானா : மிக்க நன்றி. சரி நேரமாகி விட்டது. நான் அம்மாவிடம் செல்ல வேண்டும். நாளை பார்க்கலாமா?
கயல் : கண்டிப்பாக பார்க்கலாம்

# ஆசிரியர் திரு செல்வராஜ் கோடீஸ்வரன்



ஜனனி
சோலையப்பன்
ஆசிரியர்: செல்வா
வகுப்பு: 2அ



## மலை கொரில்லா

மலை கொரில்லா இனம் அழிந்து கொன்டு இருக்கிறது. இவை விருங்கா மலை மற்றும் தேசிய பூங்காக்களில் வசிக்கின்றன. மலை கொரில்லா இனம் 1902ல் கன்டு பிடிக்க பட்டன. அன்றில் இருந்து அவை வேட்டை, வியாதி, மற்றும் வாழ்விட இழப்பு எதிர் கொன்டன. இப்பொழுது உலகிலேயே 880 மலை கொரில்லாக்கள் உள்ளன. அவை 440 lbs எடையும் 4-5 அடி உயரமும் இருக்கும். மலை கொரில்லாக்கள் குறிப்பிட்ட காரனத்திற்-காக வேட்டை அட படுவதில்லை ஆனால் மற்ற மிருகங்களுக்காக வைக்கபட்ட பொறியில் சிக்கி மடிகின்றன இந்த கம்பீரமான மிருகங்கள் உயிர் வாழ WWf இனையதளம் சென்று உதவி செய்யுங்கள்.

## சிலம்பம்

பெயர்: ரோஷன் சுரேஷ்
வகுப்பு: 2அ
ஆசிரியர்: செல்வராஜ்

சிலம்பம் என்பது ஒரு தடியடி தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும்.

முற்காலத்தில் மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக்கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும் கலையாக வளர்ந்துள்ளது என்பர்.


சிலம்பம் சுமார் 5000 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படுகிறது. 2500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அகத்திய முனிவர் 64 கலைகளில் ஒன்றாக சிலம்பத்தை குறிப்பிடுகிறார்.




தமிழக அரசு சிலம்பத்தை பள்ளி விளையாட்டாக அங்கீகரித்துள்ளது.

## புலி

பெயர்: ஜானஸ் சுரேஷ்
வகுப்பு: 2A



புலி இந்தியாவின் தேசிய விலங்கு. இது இந்தியா-வின் செல்வ செழிப்பாகவும் உள்ளது. இந்த வனவிலங்குக்கு, இந்தியாவின் சரித்திரத்திலும், புராணங்களிலும் ஒரு தனி இடம் உண்டு. இந்தியாவில் வங்கப்புலி ரகப்புலிகள் வாழ்ந்து வருகின்றன. தற்போது இவற்றின் எண்ணிக்கை மிகவும் குறைந்து விட்டது.



## ரோசாப்பூ

யாழினி இளங்கோவன்
செல்வராசு கோடீசுவரன்
2A

எனக்கு மிகவும் பிடித்தது ரோசாப்பூ ஆகும். ரோசாப்பூ சிவப்பு மற்றும்பல நிறங்களில் கிடைக்கும். என் வீட்டில் நாங்கள் ரோசாப்பூ செடி வளர்க்கிறோம்.

ஆசிரியர்: செல்வராஜ்

## என் தாத்தா பாட்டி

பெயர்: நிஷா
வகுப்பு: 2 அ

எனக்கு என் தாத்தா பாட்டியை ரொம்ப பிடிக்கும் தாத்தா பாட்டி இங்கு வருவாரகள். தாத்தா பாட்டியுடன் நான் புங்காவிற்கு செல்வேன். தாத்தா பாட்டியுடன் நடந்து செல்ல பிடிக்கும். பாட்டி பல சுவையான பலகாரங்கள் செய்து தருவாள். தாத்தா பாட்டியை பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்.





# ஆசிரியர் திரு வல்லபன் தியாகராஜன்

## தாமரைப் பூக்கள்


பெயர்: ஆனந்தி செல்வராஜ்
ஆசிரியர்: தியாகராஜன்
வகுப்பு: 2 அ




உங்களுக்கு தாமரைப்பூ என்றால் என்னவென்று தெரியுமா? தாமரைப்பூ இந்தியாவின் தேசிய மலர். தாமரைப்பூ எந்த விதமான சேற்று நீரிலும் வளரும். வெள்ளை, மஞ்சள், சிவப்பு, நீலம் என பல நிறங்களில் அழகாக இருக்கும். தாமரைப்பூ தூய்மையையும், தெய்வத்தன்மையையும் குறிக்கும்.




# ஆசிரியர் திரு சாமிநாதன் தில்லைகோவிந்தராஜன்









# ஆசிரியை திருமதி சுஜாதா மோகன்

ஆசிரியர்: சுஜாதா
வர்ஷினி சதீஷ்
2A

## தீபாவளி

எனக்கு தீபாவளி மிகவும் பிடிக்கும். தீபாவளி அன்று வீட்டிற்கு நண்பர்கள் வருவார்கள். அம்மா லட்டுவும், வடையும் செய்வார்கள். நாங்கள் எல்லோரும் சேர்ந்து பட்டாசு வெடித்து கொண்டாடுவும்.



பெயர்: சித்தார்த் வி
ஆசிரியர்: சுஜாதா மோகன்
வகுப்பு: 2அ

## தஞ்சை பெரிய கோவில்

தமிழ்நாட்டில், தஞ்சாவூரில் பிரகதீஸ்வரர் கோவில் உள்ளது. தமிழ்நாட்டில் இது ஒரு முக்கிய சுற்றுலா தலமாகும். இந்த கோவில் 1007 வருடம் பழமையானது. ராஜ ராஜ சோழப் பேரரசர் இந்த கோவிலை கட்டினார். இந்த கோவில் கோபுரம் 198 அடி உயரமானது. இது உலகிலேயே உயரமான கோபுரம். கோபுரத்தின் விமானம் 80 டன் எடையுள்ளது. இது ஒரே கல்லில் செதுக்கபட்டது. 16 அடி நீளம், 13 அடி உயரமான, ஒரே கல்லில் செதுக்கபட்ட நந்தி கோவிலின் முன்புற வாசலில் அமைந்துள்ளது. இந்த கோவில் UNESCO World Heritage இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

## தீபாவளி

தேஜஸ்வி
ரவி
2A

தீபாவளி ஒரு முக்கியமான பண்டிகை. அன்று விடிகாலையில் எழுந்து தலைக்கு எண்ணெய் தேய்த்து குளித்து, புது ஆடை அணிவோம். சாமி கும்பிட்டு இனிப்பு சாப்பிடுவோம். மாலையில் தீபம் ஏற்றி வைத்து பட்டாசு கொளுத்துவோம். நண்பர்களுக்கு பலகாரம் கொடுத்து மகிழ்வோம்.



## பொங்கல் பண்டிகை

பொங்கல் தமிழர் திருநாள் என்றும் உழவர் திருநாள் என்றும் கொண்டாடப்படுகிறது. பொங்கல் தை மாதம் முதல் நாள் கொண்டாடப்படும். இந்தப் பண்டிகை சூரிய பகவானுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக கொண்டாடப்படும் பண்டிகை.

பொங்கலன்று சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், பால் பொங்கல், ஆகியவை செய்து கரும்பு, மஞ்சள் கொத்துடன் சூரியனுக்கு நிவேதனம் செய்யப்படும்.

பொங்கல் தினத்தை முன்னிட்டு கோவில்களில் சிறப்பு பூஜை நடைபெறும். மக்கள் புத்தாடை அணிந்து பொங்கலை கொண்டாடுவார்கள்.



தை பிறந்தால் வழி பிறக்கும்
பொங்கலோ பொங்கல்!

பெயர்: நிக்கிதா பிரபாகரன்
வகுப்பு: 2A
ஆசிரியர்: சுஜாதா மோகன்




அருணா(ஆ), ஆதிரை, ஸ்ருதிகா, ஹேமந்த், ரித்தின்
அனீத், மஹேஷ்வர், நிர்மல், ரித்தன்யா, ஸ்ருதி, ஸ்ரீராம், நிர்மலா தியாகராஜன்(உ.ஆ)
வேலப்பன்(ஆ), பிரியங்கா, அக்ஷிதா, நேஹா, நேத்ரா, வினிதா, ரூபக், ரேஷ்மி, விஜயலஷ்மி(ஆ)
அனுராதா(ஆ), விஷால், கிரிடி, மாதவ், ரங்கநாத், மஹதி, ஷ்ரியா, தேஜஸ்ஸ்ரீ, சஹானா, சந்தீப், காந்திமதி(ஆ)

# ஆசிரியை திருமதி காந்திமதி ராமசாமி

## ரோசா பூ

பெயர்-பாவனா ஸ்ரீனிவாசன்
வகுப்பு-2ஆ
ஆசிரியர்-காந்திமதி இராமசுவாமி



சிகப்பு ரோசா சிகப்பு ரோசா
நீ அழகான ரோசா
மணம் நிறைந்த ரோசா
தினமும் என்னை பார்த்து
சிரிக்கும் ரோசா!

## என்னுடைய லட்சியம் ஐ.ஏ.எஸ்

தேஜஸ் செந்தில் குமார்-2-ஆ
ஆசிரியர் - காந்திமதி

ஆம். இந்திய ஆட்சிப் பணி என்ற ஐ.ஏ.எஸ் பணிதான் அனைத்தையும் சாதிக்கும் வல்லமை கொண்டது. ஆட்சியாளர்களுக்கும், மக்களுக்கும் பாலமாக இருந்து நிர்வாகத் திறமையால் நற்பணிகள் செய்யும் திறன்வாய்ந்தது ஐ.ஏ.எஸ் பணி.

இன்றைய உலகில் எண்ணற்ற தொழில்கள் உள்ளன. அவற்றை எல்லாம் விட்டு விட்டு ஏன் இந்த ஐ.ஏ.எஸ் என்று கேட்கிறீர்கள். உங்களுக்கு சில விவரங்கள். இளம் வயதில் சப்கலெக்டர், கலெக்டர் பதவிகளின் மூலம் மொத்த கோட்டத்தையோ அல்லது மொத்த மாவட்டத்தையோ நிர்வாகம் செய்யும் பொறுப்பு நம் வசம். நம் மாவட்டத்தின் நல்லது, கெட்டது, அரசுத் திட்டங்கள், சட்டம் ஒழுங்கு ஆகிய அனைத்திலும் நம் பங்கு நிச்சயம் இருக்கும்.

மற்றவர்களுக்குப் பயனில்லை என்றால் எத்தனை லட்சம் சம்பாதித்தாலும் அந்தப் பணி வீண். ஆகவே ஆற்றலும் ஆர்வமும் நிறைந்த இளம் வயதில்தான் இந்த ஐ.ஏ.எஸ் பதவியின் மூலம் அதிகம் சாதிக்க நினைக்கின்றேன்.

## தீபாவளி

பெயர் : ஹரனா செல்வகுமார்
வகுப்பு : 2 "ஆ"
ஆசிரியர் : காந்திமதி ராமசாமி

தீபாவளி அல்லது "தீப ஒளித்திருநாள்" என்பது ஐந்து நாட்கள் கொண்டாடப்படுகின்ற ஒரு பண்டிகை ஆகும். கிருஷ்ணர் நரகாசுரன் என்ற அரக்கனை கொன்ற போது, அவன் கேட்ட வரத்திற்கிணங்க அந்த தினத்தை மக்கள் தீபாவளியாக மகிழ்ச்சியாகக் கொண்டாடுகிறார்கள். தீபாவளி அன்று அனைவரும் அதிகாலையில் எழுந்து, எண்ணெய் குளியல் செய்வர். புது ஆடைகளை உடுத்தி, இனிப்புகள் சாப்பிட்டு பட்டாசுகள் வெடித்து மகிழ்வார்கள். அடிப்படையில் இந்துப் பண்டிகையாக இருந்தாலும், சாதி மத வேறுபாடின்றி அனைத்து மக்களும் ஒற்றுமையாக கொண்டாடும் பண்டிகை தீபாவளி. இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களில் பல விதமாக தீபாவளி பண்டிகை மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.



## குமரிக் கண்டம்

சந்தீப்
2 ஆ
காந்திமதி இராமசுவாமி

குமரி கண்டம் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் இந்திய பெருங்கடலில் மூழ்கியது. இங்கு தமிழ் மொழியில் பேசினார்கள், இங்கு 49 மாநிலங்கள் உள்ளது. குமரி கண்டம் மடகஸ்கர், இந்தியா, ஆஸ்திரேலியா ஒன்று இணைந்தது. இங்கு ஒரே மாதிரியான செடி, மரங்கள், விலங்குகள் இருந்தன. ஒரு பண்டைய தமிழ் நாகரிகம் மற்றும் பாண்டிய மன்னனின் ஆட்சி இருந்தது. இங்கு தமிழ் இலக்கிய சங்கங்கள் மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றை நிருபித்தது நாகரிகத்தின் தொட்டில் குமரி கண்டம் என்று கூறினார்கள்




# ஆசிரியை திருமதி உமா ராமசாமி

மாணவன்:- மாதவ்
ஆசிரியர்:- உமா
வகுப்பு:- 2ஆ

## திருவள்ளுவர் வரலாறு

திருவள்ளுவர் திருக்குறள்களை எழுதினார்.
திருவள்ளுவர் ஒரு தமிழ் கவிஞர். உலகாவிய தத்துவங்களைக் கொண்ட திருக்குறளைப் படைத்தவர் திருவள்ளுவர்.
திருக்குறள் படித்தால் நலம் தரும்.

பிறப்பிடம்: மயிலாப்பூர், தமிழ் நாடு, இந்திய
பணி: புலவர்



ப்ரு ராம குமார்
2 ஆ
உமாதேவி ராமசாமி

## ராமானுஜன்

ராமானுஜன் 1887ம் ஆண்டு தமிழ்நாட்டில் உள்ள ஈரோட்டில் பிறந்தார். அவர் கணிதத்தில் முறையான கல்வி இல்லாத போதே பல தேற்றங்களை கண்டுபிடித்தார் அவருடைய கணித படைப்புகளை கண்டு வியந்து, கேம்பிரிட்ஜ், இங்கிலாந்திற்கு அழைக்கப்பட்டார். அங்கு 4 ஆண்டுகள் பல ஆய்வுக்கட்டுரைகளை பிரசுரித்தார். அவர் 32 வயதிலேயே இறந்துவிட்டாலும், இந்த குறுகிய காலத்தில் அவருடைய பங்களிப்பு உலக கணித வரலாற்றில் என்றும் பேசப்படும்.

பெயர் : சந்தோஷினி ராதாகிருஷ்ணன்
ஆசிரியர் : உமா
வகுப்பு : 2ஆ

## அம்மாவும் நானும்

அம்மா நீ தேன்,
நான் அந்த தேனின் சுவை
அம்மா நீ கவிதை,
நான் அந்த கவிதையின் சொற்கள்
அம்மா நீ மழை,
நான் அந்த மழையின் துளி
அம்மா நீ வானவில்,
நான் அந்த வானவில்லின் வர்ணம்
அம்மா நீ கடவுள்,
நான் அந்த கடவுளின் படைப்பு




ஸ்ரியா
உமாதேவி
இராமசாமி
2B

## மயில்

இந்தியாவின் தேசிய பறவை மயில். மயில் மிகவும் அழகான பறவை. இதற்கு விசிறி போல வண்ண வண்ண தோகைகள் இருக்கின்றன. மயிலைப் பற்றி நான் படித்த ஓர் அழகான பாடலை கேளுங்கள்.


இந்தியாவின் தேசிய பறவை எதுவென்று
தெரியுமா? அதன் பெயர் மயில் தானே.
வசந்தத்தில் அவன் ஆடுவான்.
வானவில் பார்த்ததும். தன் தோகைகளை
காற்றினிலே அசைத்திடுவான்.



# ஆசிரியர் திரு வேலப்பன் வேலப்பன்

அஞ்சம் கான்
2B
வேலப்பன்

## முயல்



எனக்கு முயல் ரொம்ப பிடிக்கும்.
அது பார்க்க அதிகாக வெள்ளை நிறத்தில்
இருக்கும். முயல் அதிகாக தாவி குதித்து ஓடும்.
முயல் காய்கறிகளை உணவாக சாப்பிடும்.
முயல் ஒரே நேரத்தில் பல குட்டிகளை
ஈன்று அருக்கும். நான் முயலை என்
செல்ல பிராணியாக வளர்க்கு ஆசை-
படுகிறேன்.


Scanned by CamScanner

## ஸ்ரீ பொத்தை கோயில்

ஸ்ரீ பொத்தை கோயில் திருநெல்வேலி, வள்ளியூர் அருகில் பொத்தை மலையடிவாரத்தில் அமைந்துள்ளது.

ஸ்ரீ காமாட்சி அம்மன், மகா மேரு, ஸ்ரீ முத்துக்கிருஷ்ண சுவாமிகளின் சிலைகள் இங்கு காணலாம். பொதுமக்களும் பூசை செய்யலாம். ஒரு லட்ச திரிகளைக் கொண்ட விளக்கை பூசைக்கு பயன்படுத்துகிறார்கள்.

இக்கோயில் அநேக சேவைகளில் ஈடுபட்டுள்ளது அன்னதானம், மருத்துவ சேவை, தொடக்கப்பள்ளி ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது.



பெயர் : அருண் இளஞ்செயன்
வகுப்பு : 2ஆ
ஆசிரியர் : திரு. வேலப்பன்

## விடுகதைகள்

By: அக்ஷிதா 2B

1. வெளியே உள்ளதை எறிந்து உள்ளே உள்ளதை சமைத்தான். பின் வெளியை உள்ளதை சாப்பிட்டு விட்டு உள்ளே உள்ளதை எறிந்தான் அது என்ன?
2. முழு உலகமும் சுற்றி வரும், ஆனால் ஒரு மூலையிலேயே இருக்கும் அது என்ன?
3. ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் நீரை குடிக்க தந்தால் இறந்து விடுவேன், நான் யார்?
4. ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு, ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது, அக்குற்றம் என்ன.

### விடைகள்

1. சோளம்
2. முத்திரை
3. நெருப்பு
4. தற்கொலை

பெயர் : பிரியங்கா ஐயர்
ஆசிரியர் : வேலப்பன்
வகுப்பு : 2B

## மீனாட்சி அம்மன் கோவில்

மீனாட்சி கோவில் தமிழ் நாட்டில் இருக்கிறது. இந்து கோவில் அழகாக இருக்கிறது. மீனாட்சி கோவில் மதுரை உள்ளே இருக்கும். இந்த கோவில் கடவுள் பார்வதி ஆகும். நிறைய மக்கள் மீனாட்சி கோவில் போவார்கள். நிறைய பாட்டுக்கள் இந்து கோவிலுக்கு இருக்கிறது. இந்து கோவில் ஒரு பெரிய நகரம் உள்ளே இருக்கிறது. நீங்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு செல்ல வேண்டும்.



# ஆசிரியை திருமதி அருணாஆர்த்தி ரவிந்திரன்

அதிதி தினேஷ்
வகுப்பு:2ஆ
ஆசிரியை-அருணா ஆர்த்தி

## ஔவையார்

ஔவையார் சங்ககாலத் தமிழ் புலவர். அவர் அறிவில் சிறந்த பெண் புலவர் ஆவார். அவர் கம்பர், ஒட்டக்கூத்தர் ஆகிய புலவர்களின் காலத்தில் வாழ்ந்தார்.

அவர் சிறுவர் சிறுமியர்களுக்காக ஆத்திசூடி, கொன்றை வேந்தன் ஆகிய நூல்களை எழுதியுள்ளார். மேலும் மூதுரை, நல்வழி ஆகிய நூல்களையும் படைத்துள்ளார். நற்றிணை குறுந்தொகை, புறநானூறு ஆகிய நூல்களில் அவரது பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

மன்னன் அதியமான் ஔவையாரின் சிறந்த நண்பனாக விளங்கினான். ஔவையார் அவர் நூல்களில் நமக்கு காட்டிய நல்வழியில் நடந்து, நாம் அனைவரும் நலம் பெறலாம்.

## பாரதிதாசன்



பாரதிதாசன் என்பவர் யார்? அவர் ஒரு கவிஞர். எனக்கு அவரை மிகவும் பிடிக்கும். அவர் பாரதியாரின் மேல் கொண்ட அன்பினால் தன் பெயரை பாரதிதாசன் என்று வைத்துக்கொண்டார். அவரின் இயற்பெயர் கனகசுப்புரத்தினம். அவர் புதுச்சேரியில் ஏப்ரல் 29-1891ல் பிறந்தார்.

அவரை "பாவேந்தர்", புரட்சிக்கவிஞர் என்றும் அழைப்பர். அவர் தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழெங்கள் உயிருக்கு நேர் என்ற வரிகளுக்கு சொந்தக்காரர்.

பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு ஆகியவை அவரது மிகச்சிறந்த படைப்புகள் ஆகும்.

ஆதிரை எழில்வேந்தன்
ADHIRAI EZHILVENDAN
வகுப்பு- 2ஆ
வகுப்பு ஆசிரியர் - அருணா ஆர்த்தி

## கம்பர்

பெயர்:- ஹேமந்த் சுதாகரன்
வகுப்பு:- 2ஆ
ஆசிரியர்:- அருணா ஆர்த்தி

பிறப்பு :- கம்பர் அவர்கள், கிபி 12 நூற்றாண்டில், இந்தியாவின் தமிழ்நாடு மாநிலம், தஞ்சை மாவட்டத்தில் பிறந்தார் அவரது பெற்றோர்கள் கடவுள் நரசிம்மரின் தீவிர பக்தர்கள் என்பதால், அவருக்கு 'கம்பர்' என்று பெயர் சூட்டினர் 'கம்பர்' என்றால் தூண் என்று பொருள்

ஆரம்ப வாழ்க்கையும், கல்வியும் :- நாதஸ்வர வித்வான்களான ஒச்சன் பரம்பரையில் பிறந்திருந்தாலும் அவர் தமிழ்நாட்டில் உள்ள வெண்ணை நெல்லூர் என்னும் ஊரில் உள்ள ஒரு பணக்கார விவசாயி ஒருவரால் செல்வ, செழிப்போடு எடுத்து வளர்க்கப்பட்டார். சிறு வயதிலிருந்தே அவருக்குக் கவிதைகளை எழுதும் ஆர்வம் இருந்தது. அம்மொழியின் அடிப்படையை பாரம்பரிய முறையில் நன்கு கற்ற அவர் பல கவிதைகளும் நூல்களும் எழுதத் தொடங்கினார் அதன் பின்னர், அவரது கவிப்புலமை எட்டுத்திக்கும் பரவத் தொடங்கியது.

இலக்கிய வாழ்க்கை :- கம்பரின் தாய் மொழி தமிழ் என்றாலும், சமஸ்கிருதத்திலும் அவர் புலமை பெற்றே விளங்கினார் அதற்கு சான்று அவர் எழுதிய கம்பராமாயணம், முனிவர் வால்மீகி சமஸ்கிருதத்தில் படைத்த ராமாயணத்தை, அவர் தமிழில், அவருக்கேயுரிய பாணியில் மீண்டும் எழுதினார். தமிழ்மொழியின் பெருமையை, இடைக்கால காலகட்டங்களில் அற்புதமாக நூல்களை எழுதினார்.

இறப்பு :- கவிச்சக்கரவர்த்தி கம்பர், கிபி 1250 ஆம் ஆண்டில் இயற்கை எய்தினார்.
இது வரை வந்த தமிழ் அறிஞர்கள் பட்டியலில், கம்பர் யாரும் எட்ட முடியாது இலக்கில் உள்ளார்.

## பாரதியார்

ரித்வின் வேல்மணி
வகுப்பு 2B
ஆசிரியர்: அருணா ஆர்த்தி




நான் விரும்பி போற்றும் கவிஞர் மகாகவி பாரதியார் ஆவார். அவர் கவிதைகள் மூலம் தேசியத்தை வளர்த்தார். அவர் எட்டையபுரத்தில் பிறந்தார். பைந்தமிழ்ப் பாவலராய் திகழ்ந்து பாரதி என்னும் பட்டம் பெற்றார். "பாருக்குள்ளே நல்ல நாடு", "நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்" என்று பாடி மக்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டினார். பாரதியார் பெண்கள் விடுதலைக்காக மிகவும் போராடினார். சாதி வேற்றுமை அழிக்க 'குலத்-தாழ்த்தி உயர்த்தி சொல்லல் பாவம்' எனக் குழந்தைகள் மனதில் விதைத்தார். நாமும் நாட்டுப்பற்று மிக்கவராகத் திகழ்வோம்! நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவோம்.

பெயர் : ஸ்ருத்திகா
வகுப்பு : 2ஆ(2B)
ஆசிரியர் : ஆர்த்திஅருணா

## திருவள்ளுவர்

ஈரடி குறளில் உலகத் தத்துவங்கள் அனைத்தையும் "திருக்குறள்" என்னும் உன்னதப் படைப்பில் மக்களுக்கு எடுத்துச் சொன்னவர், திருவள்ளுவர். அவரின் பிறப்பு மற்றும் பிறப்பிடத்திற்கான சரியான சான்றுகள் இல்லை. உலக இலக்கிய அரங்கில் தமிழ்மொழிக்கென்று ஓர் உயர்ந்த இடத்தை நிலைப்பெற செய்தவர். உலக மக்களால், 'தெய்வப்புலவர்', 'பொய்யில் புலவர்', 'பெருநாவலர்', 'நாயனார்' என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.



பெயர்: அனீஷ் சஜீவன்
வகுப்பு: 2ஆ
ஆசிரியர்: பத்மப்ரியா

## பொய்க்கால்குதிரை ஆட்டம்

பொய்க்கால்குதிரை ஆட்டம் தமிழ்நாட்டின் நாட்டுப்புற கலைகளில் ஒன்றாகும். இது தமிழ்நாட்டு கிராமங்களில் பண்டிகை சமயம் மற்றும் பொழுதுபோக்கிற்காக நடத்தப்படுகிறது. இதில், நடனம் ஆடுபவர்கள் ராஜா, ராணி வேடம் போட்டு பொய்யான குதிரை கூட்டைச் சுமந்து கொண்டு மரக்காலில் நின்று ஆடுகிறார்கள். மராட்டிய மன்னர்கள் காலத்தில் தஞ்சைக்கு முதலில் வந்து பிறகு தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கும் இந்த ஆட்டம் பரவியது.



**ஆசிரியை திருமதி**
**பத்மப்ரியா கந்தசாமி**

## நாட்டுப்புற கலைகள்
### கரகாட்டம்

கரகாட்டம் தமிழர்களின் பாரம்பரிய நாட்டுப்புற கலைகளில் ஒன்று.

தலையில் அலங்கரிக்கபட்ட செம்பு அல்லது குடையை வைத்து ஆடுவது கரகாட்டம்.


கோவில்களில் தெய்வத்திற்கு ஆடுவது சக்தி கரகம் ஆகும்.

மற்ற பொதுநிகழ்வுகளில் ஆடப்படுவது ஆட்ட கரகம் ஆகும்.

கரகாட்டம் ஆடுபவர்கள் கரகம் கீழே விழாதபடி ஆடி திறமையை வெளிப்படுத்துவார்கள்.







ame: Rhythanyaa Nagaraja,
eacher: Padmapriya
lass : 2B
THANKYOU!

பெயர்: ரிதன்யா நாகராஜா
ஆசிரியர்: பத்மப்ரியா
வகுப்பு : 2ஆ
நன்றி!

பெயர் : ஷ்ருதி சுரே
வகுப்பு: 2ஆ
ஆசிரியர் : பத்மப்ரி

## நாட்டுப்புறக் கலைகள்
### மயிலாட்டம்




தமிழக நாட்டுப்புற ஆட்டக் கலைகளில் மயிலாட்டம் ஒன்றாகும். மயிலாட்டம் சுப்ரமணிய சுவாமி கோவில் திருவிழாவில் ஆடப்படும். இந்தியாவில் தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் இந்த ஆட்டம் ஆடுவார்கள்.




நாட்டுப்புற நடனத்தில் மயில் நடனத்தை ஆண்களும், பெண்களும் ஆடுகின்றனர். ஆடுபவர்கள் மயிலின் நிறத்தைப் போலச் சட்டையும், காலுறையும் அணிந்து கொள்வர். இடுப்பில் சுருங்கி விரியும் மயிலிறகைக் கட்டிக் கொள்வர்.




இதில் நையாண்டி மேள இசை பக்க இசையாக விளங்குகிறது. இதில் இரு நாதசுரங்கள், இரு தவில்கள், இரு பம்பைகள், ஒரு கிடுகிட்டி போன்ற இசைக் கருவிகள் இருக்கும். இப்பக்க இசைக்கேற்ப அசைவுகள் தலையசைப்பு, தோகையை விரித்தல் போன்றவற்றைச் செய்கின்றனர்.











பெயர் : மகேஷ்வர் முருகேசன்
வகுப்பு : 2B
ஆசிரியர் : திருமதி. பத்மபிரியா கந்தசாமி.

## நாட்டுப்புறக்கலை


### சிலம்பாட்டம்



சிலம்பம் என்பது ஒரு தடியடி, தமிழர் தற்காப்பு கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும், வடக்கில் இவ்விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியை கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்து கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும். சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பினைத் தடுத்தல் எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினைத் தொடுதல் தொடு புள்ளி போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும், நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர். தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் சிலம்பாட்டத்தைக் கற்று விளையாடி வருகின்றனர்.

ஒயிலாட்டம் – Dance of grace | நிர்மல் - II அ | பத்மபிரியா

ஒயிலாட்டம் என்பது தமிழ் நாட்டின் கிராமப்புற கலைகளில் ஒன்று. இந்த ஆட்டத்தில் ஆண்களும் பெண்களும் வண்ண கைகுட்டையை வைத்து நடனம் ஆடுவார்கள். நடனக்காரர்கள் வரிசையாக நின்று மேளதாளத்திற்கு ஆடுவார்கள். இராமாயணம், பாரதம் மற்றும் முருகர் கடவுளின் கதைக்கு ஆடுவார்கள்.



**ஆசிரியை திருமதி விஜயலக்ஷ்மி செல்வகுமார்**

பெயர் : ஷ்ரவன் சுப்ரமணியன்
வகுப்பு : 2 "ஆ"
ஆசிரியர் : விஜயலைட்சுமி

## கபடி

கபடி இந்தியாவின் விளையாட்டாக இருக்கிறது. இந்த விளையாட்டைத் தமிழர்கள் பல ஆண்டுகளாக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் மக்கள்தான் கபடியை உருவாக்கினார்கள். பெண்களும் இந்த விளையாட்டை விளையாடுவார்கள். இரு குழுவாக வீரர்கள் பிரிக்கப்பட்டு இந்த விளையாட்டு நடைபெறும். ஒரு குழுவில் மொத்தம் பன்னிரெண்டு வீரர்கள் இருப்பார்கள். என்னுடைய அப்பா தன் சிறிய வயதில் கபடி விளையாடி இருக்கிறார். எனக்கும் கபடி விளையாட ஆசையாக இருக்கிறது. கபடி விளையாட்டின் சிறப்புகளைப் பற்றி நான் தமிழ் படங்களில் பார்த்திருக்கிறேன்.




2 அ — ரூபக் இராஜசேகர்

## சதுரங்கம்

விஜயலட்சுமி செல்வகுமார்

நாம் இப்போது "செஸ்" (chess) என்று அழைக்கும் விளையாட்டு முன் காலத்தில் இந்தியாவில் உருவான "சதுரங்கா" எனும் விளையாட்டாகும். தமிழகத்தில் இன்றும் சதுரங்கம் என்றே அழைக்கப்படுகிறது. சதுரங்கம் குப்த பேரரசு காலத்தில், ஆறாம் நூற்றாண்டில் மிகவும் பிரபலமானது. சதுரங்கா எனும் சொல் யுத்தத்தில் சேனை வியூகத்தை குறிக்கும் சொல்லாகும். இதை மகா பாரதத்தில் காணலாம். சதுரங்கம் 8x8 சதுர அட்டையில் விளையாடப்படும் இதை அஷ்டபாதம் என்றும் கூறுவர். சதுரங்கம் ஆட நிறைய யுக்தியும் புத்தியும் வேண்டும். அதனால் தான் இந்த விளையாட்டு உலகெங்கிலும் மிகவும் பிரபலமாக உள்ளது.

# பரமபதம்

(ஏணியும் பாம்பும்)

பரமபதம் ஒரு பாரம்பரிய விளையாட்டு. வாழ்வில் விரும்பிய ஒன்றை அடைவதற்கு, ஏற்ற தாழ்வுகளை சந்திக்க வேண்டும் என்பதை குழந்தைகள் புரிந்து கொள்ள செய்ய வந்ததும் இதை இரண்டு அல்லது அதற்கு மேல் ஆட்கள் விளையாடலாம்
விளையாட தேவையான பொருள்கள் :-
132 கட்டங்கள் உள்ள அட்டை. ஒவ்வொரு கட்டத்திலும் நல்ல மற்றும் தீய பழக்கம் அல்லது செயல்கள் பற்றிய படங்களோ அல்லது வார்த்தைகளோ, விதவிதமான உயிரினங்களின் படங்களோ இருக்கும் இடையிடையே சிறிதும் பெரியதுமான ஏணிகளும், பாம்புகளும் உண்டு. மேலும் கடைசி வரிசை கட்டங்களில் கடவுளின் படங்களோ அல்லது விருப்பமான குறிக்கோள்கள் பற்றிய படங்களோ இருக்கும்.

- 6 சோழிகள் அல்லது இரு தாயக்கட்டை அல்லது ஒரு பகடை
- சிறு பொருள், கட்டத்தில் வைக்கும் அளவு.

விளையாடும் ஒவ்வொருவரும் கிடைக்கும் வாய்ப்பில், பகடையை உருட்ட வேண்டும் வரும் எண்ணிக்கைக்கு தகுந்தாற் போல் கட்டங்களை நகர்த்த வேண்டும். ஏணியில் அடியில் வந்தால் (நல்லொழுக்கம்), ஏறவேண்டும். பாம்பின் தலையில் வந்தால் (தீயொழுக்கம்) இறங்க வேண்டும். இறுதியில் எவர் குறிக்கோளை தொடுகிறார்களோ, அவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப் பெறுவார்.



பெயர் : அ.நேத்ரா
வகுப்பு : உஆ
ஆசிரியர்: விஜயலட்சுமி செல்வகுமார்

---

வினிதா ரவிவர்மா
விஜி செல்வகுமார்
2B


## பல்லாங்குழி

தமிழ்நாட்டின் பாரம்பரிய விளையாடு பல்லாங்குழி பல்லாங்குழி என்பது, பொதுவாக பெண்கள் விளையாடும் ஒரு விளையாட்டு

வட்டமாக குழிசெதுக்கிய பலகையில புளியங்கொட்டையோ, சோழியோ நிரப்பி ஒவ்வொன்றாக எடுத்து விளையாடுவார்கள் இதில் பெண்களின் விரலுக்கு பயிற்சியும், கணக்குவழக்கில்தெளிவும் ஏற்படுகிறது என்பது நம்பிக்கை.

சிவராத்திரி, வைகுண்ட ஏகாதசி போன்ற நாட்களில் இரவில் கண் விழித்திருக்கும் பெண்களும் இந்த பல்லாங்குழியை விளையாடி மகிழ்வர்.

பல்லாங்குழி என்பது மரம் அல்லது உலோகத்தால் ஆன ஒரு விளையாட்டுச் சாதனம். இரு வரிசைகளில ஏழு குழிகள் இருக்கும். புளியங்கொட்டையை வைத்தோ அல்லது ஏதாவது பெரியவிதைகளையோ ஆடுபொருளாக வைத்து ஆடப்படுகிறது.



---

## ஆசிரியை திருமதி


## அனுராதா வெங்கடராமன்

---

பெயர்: ராஜ்மிராமானு
வகுப்பு: உஆ
விஜயலெட்சுமி செல்வகு

## பாரம்பரிய விளையாட்டுகள்

பாரம்பரிய விளையாட்டுகள்
படிமையான விளையாட்டுகள்
கில்லி கோலி ஆடுவோம்
அணை வரையும் அசத்துவோம்
பரமபதம் ஆடுவோம்
தாயக்கட்டை உருட்டுவோம்
கல் நிறைய சேர்ப்போம்
பல்லாங்குழி ஆடுவோம்
ஜல்லிக்கட்டு மட்டைப்பந்தையும்
மற்றும் பம்பரமும் சேர்ப்போம்
கைப்பேசி மற்றும் இணையத்தை
நிறுத்திவிட்டு இந்த விளையாட்டுகளை
விளையாடி மகிழ்வோம்



---

பெயர்: விஷால் சுப்ரமணியன்
Name: Vishal Subramanian Ramasubramanian
ஆசிரியர் பெயர்: திருமதி. அனுராதா
வகுப்பு: 2ஆ (2B)


## மகாபலிபுரம்

நான் 4 வயது சிறுவனாக இருந்தபோது என் அம்மா, அப்பாவுடன் ஒருமுறை ஒரு நாள் சுற்றுலாவுக்கு மகாபலிபுரம் சென்றோம். எனக்கு அப்போது அவ்வூர் பற்றி பெரிதாக ஒன்றும் தெரியாது.

அங்கு சென்றடைந்ததும் பலவேறு விதமான சிறபங்களைப் பார்த்தோம். சிறப்பாக வடிவமைக்கப்-பட்ட வெளிப்புற சிற்பங்கள் மிகவும் அரிதானவை.

அர்ச்சுனன் தவம், கண்ணனின் மலை சிற்பம், யானைகள் மற்றும் பிற விலங்குகளின் சிற்பங்கள் மிகவும் இயல்பான அமைப்பு உடையவை.

கடற்கரைக் கோவில்களின் அழகான சிறபங்களை ரசிக்க ஒரு நாள் மட்டும் போதாது. இவை பல நூறு ஆண்டுகளுக்கு முன் இரண்டாம் நரசிம்மனால் கட்டப்பட்டவை.



நீங்களும் ஒருமுறை மகாபலிபுரம் சென்று சிற்பங்களின் அழகை கண்டுகளிக்க வேண்டும்!

மஹதி சுந்தர்ராஜன்
Mahathi Sundarajan
திருமதி அனுராதா 2B

## காஞ்சிபுரம்



உங்கள் பட்டு புடவைகள் எங்கிருந்து வருகிறது என்று தெரியுமா? அது காஞ்சிபுர்த்தில் இருந்து வரும். காஞ்சிபுரத்தின் முன்னாள் பெயர் "காஞ்சி மாநகரம்."

காஞ்சிப்பட்டு ஒரு உயர்ந்த வகை பட்டுப்புடவை ஆகும். ஐயாயிரம் குடும்பங்கள் இந்தப் பட்டுப்புடவை தயாரிப்பியில் ஈடுபட்டுள்ளன.

காஞ்சிபுரம் ஒரு திவ்ய தேசம் ஆகும். அங்கு பல கோயில்கள் உள்ளன. ஸ்ரீ வரதராஜ பெருமாள் கோயில் மிகப் பிரசித்தி பெற்ற கோயில் ஆகும். காமாக்ஷி அம்மன் கோயிலும் காஞ்சிபுரத்தில் இருக்கும்.



நான் காஞ்சிபுரத்துக்குச் செல்லும்போது நான் வரதராஜர் பெருமாள் கொயிலுக்கு சென்றேன்





## மதுரை

ரங்கநாத் (2B)

மதுரை என்றால் நினைவுக்கு வருவது மதுரையின் இளவரசி, கொண்டை முடி அலங்கரித்து கொஞ்சும் கிளி கையில் வைத்திருக்கும் மரகதமேனி கொண்ட மீனாட்சி அம்மன், அக்கோவில் பொற்றாமரை குளம், ஆயிரங்கால் மண்டபம், மீனாட்சிக்கும் சொக்கனுக்கும் நடக்கும் திருக்கல்யாண வைபவமான சித்திரைதிருவிழா மற்றும் சமீபத்தில் தமிழர்கள் உலகத்தை உலுக்கிய ஜல்லிக்கட்டுக்கு பேர்போன அலங்காநல்லூர், கடலில் கலக்காத வைகையின் ஓர் கரையில் கள்ளழகர் மறுகரையில் கூடலழகர், அறுபடைவீடுகளில் இரண்டான திருப்பரங்குன்றம் பழமுதிர்ச்சோலை, வண்டியூர் மாரியம்மன் கோவில், மடப்புரம் காளி கோவில் என கோவில்களுக்கு பேர்போன கோவில் நகரம். சைவமும் வைணவமும் கூடும் கூடல்நகரம். மதுரை மல்லி, திருமலை நாயக்கர் மஹால் என மதுரையின் பெருமையை சொல்லிக்கொண்டே போகலாம்







பெயர்: அருண் முரளி
ஆசிரியர்: திருமதி அனுராதா
வகுப்பு: 2B

## எனது ஊர்

ஒருவன் தன் யாழால் அழகாகப் பாடி, அரசனிடம் பரிசாகப் பெற்ற நிலம் என்றபடியால் யாழ்ப்பாணம் என்று எனது ஊருக்குப் பெயர் வந்தது. இது மிகவும் அழகான ஊர். இது நிலவளம் நீர் வளம் நிறைந்தது. பனை, தென்னை போன்ற வானுயர்ந்த மரங்களும், மா, பலா, வாழை போன்ற பழ மரங்களும் நிறையப் பெற்றது. என்றென்றும் வற்றாத 'நிலாவரை' என்னும் நீரூற்றையும் கொண்டது.

பெரிய கல்விமான்களை உருவாக்கிய பெரிய பாடசாலைகளும், பிரசித்திபெற்ற மதவழிபாட்டுத் தலங்களும் நிறைந்தது.

கடல் வளத்தை அண்டிய பிரதேசமாக இருப்பதாலும் எந் நேரமும் நல்ல சுவாத்தியமுடைய ஊர் என்பதாலும் சுற்றுலா பயணிகள் வந்துகொண்டே இருப்பார்கள்.

இங்கு தெற்கு ஆசியாவில் உள்ள மிகப் பெரிய நூலகங்களில் ஒன்று உள்ளது. அது 1981 இல் இனக் கலவரத்தின்போது எரிக்கப்பட்டு பின்னர் மீளமைப்புச் செய்யப்பட்டது. எனினும் மிகவும் தொன்மையான நூல்கள் எல்லாம் திட்டமிட்டு எரிக்கப்பட்டுவிட்டன.


## ஊர்பெருமை
## மயிலாப்பூர்

பெயர்: கிரிடி நந்தகுமார்
ஆசிரியர்: திருமதி. அனுராதா
வகுப்பு: 2ஆ

இந்தியாவில் தமிழ்நாட்டில் சென்னையில் உள்ள மயிலாப்பூரின் சில முக்கிய பெருமைகள்



திருக்குறளை எழுதிய
திருவள்ளுவரின் கோயில்.



மயிலையே கயிலை! 63 மூவர்
திருவிழா புகழ் கபாலீஸ்வர் கோயில்.



தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள்
கொடுக்கப்படும் என்ற சாந்தோம் தேவ ஆலயம்



அனைவருக்கும் அன்பு செலுத்துங்கள் என்று
அல்லாவை வழிபட ஜம்மு மசூதியும்



சிறு உயிரினங்களுக்கும் தீங்கு இழைக்கக்கூடாது
என்ற உயர்ந்த நோக்கம் கொண்ட ஜெயின் கோயில்



சாமி விவேகானந்தரின் குருவான
இராமகிருஷ்ணரின் கோயில்



உலகின் இரண்டாவது மிக நீண்ட கடற்கரை



பெண்களுக்கான முதல் கல்லூரி - ராணி மேரி கல்லூரி



இந்தியாவின் முதல் பறக்கும் ரயில்
இத்தகைய சிறப்புகளைக் கொண்ட மயிலையில்
நான் பிறந்ததற்காக பெருமையடைகிறேன்.



# நிலை 3அ





அசோக்(ஆ), ஆர்த்தி, நிவிதா, காவியா, வருண், சேஷாந்த், சீனி(ஆ)
சிவயோகன்(ஆ), தான்யா, சுருதி, பூர்வஜா, சித்தார்த், அவினாஷ்
அம்ரிதா, அக்ஷயா, அஹானா, சாரங்கா, அச்சுதா, அவனேஷ், ரமேஷ்(ஆ)

# ஆசிரியர் திரு அசோக்குமார் நாகராஜன்

## மனித மூளையின் மடல்கள்

சாரங்கா இராஜகோபாலன்
3A
Ashok Kumar




மூளை, மனித செயல்பாட்டுக்கு மிக அவசியமான உடல் பாகம் ஆகும். மனித மூளையில் நான்கு மடல்கள் இருக்கின்றன. அவை முன் மடல், சுவர் மடல், பின்தலை மடல், மற்றும் நெற்றிப் பொட்டு மடல் ஆகும்.

1. முன் மடல் - இந்த பகுதி அறிவாற்றல் போன்ற உணர்ச்சி வெளிப்பாடு, பிரச்சனைகளை தீர்ப்பது, நினைவகம், பாவனை, மற்றும் தீர்ப்பை கட்டுப்படுத்துகிறது.
2. சுவர் மடல் - சுவர் மடலை இரண்டு செயல்பாட்டு பகுதியாக பிரிக்கலாம். இந்த மடல், உடல் பாகங்களிருந்து வரும் உணர்ச்சி தகவல், மொழி, சுவை, வெப்ப நிலை, தொடு உணர்வு, மற்றும் கணிதத்தை செயல்படுத்துகிறது.
3. பின்தலை மடல் - பின்தலை மடல் காட்சி உணர்வுகளை செயல்படுத்தி, பார்க்கும் பொருளை விளக்குகிறது.
4. நெற்றிப் பொட்டு மடல் - இந்த மடல், ஒலி மற்றும் செவிப்பு உணர்வு தகவலை செயல்படுத்தி, அர்த்தமுள்ள பேச்சை புரிந்து கொள்ள உதவுகிறது.

## ஜல்லிக்கட்டு

இந்தியாவில் தமிழ்நாட்டில் மதுரை மாநகரில் வருடத்திற்கு ஒரு விழா நடக்கும். அதில் வீடுகளில் உள்ள காளை மாடுகளை குளிப்பாட்டி கொம்புகளுக்கு வர்ணம் பூசி, கழுத்தில் மாலை அணிவித்து மாடுகளை தெருவிற்கு கொண்டு வந்து அவிழ்த்து விரட்டி விடுவார்கள். அவைகளை மாடு பிடி வீரர்கள் விரட்டிச் சென்று அவைகளை அடக்குவதற்கு பெயர் ஜல்லிக்கட்டாகும்.
அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு மிகவும் புகழ் வாய்ந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் ஒவ்வொரு வருடமும் இதை காண்பதற்க்கு வருகிறார்கள். பாலமேடு, அவனியாபுரம் மற்றும் சில இடங்களில் நடக்கும் ஜல்லிக்கட்டு பிரசித்தமானது. அண்மையில் ஜல்லிக்கட்டு அரசால் தடை செய்யப்பட்டது. இதனால் மக்கள் மிகவும் மனகஷ்டம் அடைந்தார்கள். எனவே அனைவரும் சேர்ந்து அமைதியானமுறையில் போராட்டம் நடத்தினார்கள். இந்த முயற்சி வெற்றி அடைந்து ஜல்லிக்கட்டு மீண்டும் நடைபெறத் தொடங்கி உள்ளது. ஜல்லிக்கட்டு தமிழர்களின் மிகவும் முக்கியமான கலாச்சார அடையாளம் ஆகும்

| | |
|---|---|
| மாணவர் | அச்யுதா |
| ஆசிரியர் | அசோக்குமார் |
| வகுப்பு | 3 அ |

## பரத நாட்டியம்





பரத நாட்டியம் ஒரு முக்கிய வகை பாரம்பரிய நடனமாகும். பரத நாட்டியம் தென்னிந்தியாவுக்குரிய சிறப்பாகத் தமிழ் நாட்டிற்குரிய நடனமாகும். இது மிகத் தொன்மை வாய்ந்ததும், இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் பிரபலமாகும்.

பரத முனிவர் என்ற சித்தரால் உருவாக்கப்பட்டதால் பரதம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். பரதம் என்று சொல் ப-பாவம், ர-ராகம், த-தாளம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகவும் சொல்லப்படுகிறது. இதில் பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும்.



இவற்றுடன் தாளம் சேர்ந்த நடனம்தான் பரதநாட்டியம். நன்குத் தேர்ச்சி பெற்ற கலைஞரின் முக பாவனையில் நவரசங்களின் பாவனைகளையும் வெளிக்கொணருதலைக் காணலாம்.








பெயர்: அக்ஷயா ராஜேஷ்
வகுப்பு - 3-அ
ஆசிரியர்: திரு-அசோக்குமார்

## மரம் வளர்ப்போம்!

### மரம் ஒரு வரம்!

பூமியில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்க வேண்டும் என்பது இயற்கையின் விதி. இவ்வாறு இருந்தால் நமக்கு கிடைக்கும் பயன் அதிகம். காடுகள் மழையைத் தருவதுடன் நிலச்சரிவைக் கட்டுப்படுத்துகிறது. மண் அரிப்பை கட்டுப்படுத்துகிறது.

இந்தியாவில் 33% அளவுக்கு இருந்த காடுகள் குறைந்து தற்போது 22% காடுகள் மட்டுமே உள்ளன. இந்த 11% அடைய வேண்டும் என்றால் 54 கோடி மரங்கள் நடவேண்டும். வனத்துறை மட்டுமே இந்தப் பணியை செய்ய முடியாது. எனவே நாமும் ஆளுக்கொரு மரம் நட வேண்டும்.

ஒரு மகனை வளர்ப்பது அவன் குடும்பத்துக்கே பயன் தரும்,
ஒரு மரத்தை வளர்ப்பது அவன் சந்ததிக்கே பயன் தரும்,
நிழல் பெறுவோம், கனி பெறுவோம், காய் பெறுவோம், மழை பெறுவோம்,
அதற்கு நாம் ஆளுக்கொரு மரம் நட வேண்டும்!
இயற்கை இயற்கையாக இருக்க நாம் துணை புரிவோம்!
பூமியும் பசுமையாகும், உயிர் இனமும் மகிழ்ச்சியாகும்!
மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!!!



| ஆசிரியர் பெயர்: | வகுப்பு: | பெயர்: |
|---|---|---|
| அசோக் நாகராஜன் | 3A | அம்ரிதா செல்வராஜ் |

# தியானம்

அதிகாலையில் தினமும் குறைந்தது பத்து நிமிடங்களாவது தியானம் செய்தால் பல நன்மைகள் உண்டு. அதில் சில:

1) தியானம் மன நிம்மதி கொடுக்கும்.
2) தியானம் செய்தால் உடம்பிற்கு மிகவும் நல்லது.
3) செய்யும் வேலையில் ஒருமுகப்படுத்துதல் கூடும்.
4) அது மகிழ்ச்சியை அதிகரிக்கும்.
5) ஆரோக்கியமான வாழ்க்கையை கொடுக்கும்.
6) தியானம் இதயத்திற்கு வலிமை கொடுக்கும்.
7) அது தன் நம்பிக்கையை கொடுக்கும்.

தியானம் செய்தால் மக்கள் அனைவரும் வேற்றுமை குறைந்து ஒற்றுமையுடன் வாழ்வர்.

ஆசிரியர்:

# தவில்


ஆர்ணி பங்குராஜ்
வகுப்பு: 3A
ஆசிரியர்: ரமேஷ் ரத்தினக்குமார்

தவில் ஒரு இசை கருவி. தவில் ஒரு பெரிய உருளை வடிவ பாத்திரம் போல் இருக்கும். அதன் அளவு 47 சதுரம் நீளம், 30 சதுரம் அகலம். இந்த கருவி தமிழகத்தில் விசேஷ நிகழ்ச்சிகளில் வாசிக்கப்படும். தவில், பலா மரத்தின் விறகால் செய்யப் படுகிறது. அதன் வலை, மூங்கில் கட்டைகளால் செய்யப்பட்டது.

இரும்பு நார்கள் தவிலின் இருபுறமும் கட்டப்பட்டிருக்கும். வலது புறம் வளந்தலை என்றும் இடது புறம் தொப்பி என்றும் கூறப்படும். வளந்தலை மற்றும் தொப்பி, எருமை தோலால் போர்த்தி இருக்கும். தவிலை வாசிக்க அன்று திரவச்சி செடியின் குச்சியை பயன்படுத்தி வந்தனர். அரிசிக் களி மற்றும் பருத்தி துணியால் செய்த கூடு ஒன்றை விரல்களில் கட்டி வலது்புறம் வாசிப்பர்.

தவில் வாசிக்கும் முன் அதன் நார்கள் சரி செய்ய மட்டும் ஒரு மணி நேரம் ஆகும். வலயப்பட்டி சுப்ரமணியம் தமிழ்நாட்டின் சிறந்த தவில் வித்துவான்.

நன்றி



## ஆசிரியர் திரு ரமேஷ் ரத்தினக்குமார்

# உடற் பயிற்சியின் அவசியம்

முன்னுரை:
"நோய்ற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ஆகும். உடல் நோய் இல்லாமல் இருக்க நாம தினந்தோறும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். உடற்பயிற்சி நமக்கு நோயற்ற வாழ்வை மட்டுமன்றி நம் உடலுக்கு வலிமையும் அழகையும் தருகிறது. அதனால் தான் பாரதியார்,

"ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"!

என்றும்,

"மாலை முழுவதும் விளையாட்டு என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா".

என்றும், விளையாட்டு ஒரு நல்ல உடற்பயிற்சி தினமும் குழந்தைகள் விளையாட வேண்டும் என்று கூறுகிறார்.
சிறந்த பயிற்சி: திருவள்ளுவர் "மருந்து" என்னும் ஓர் அதிகாரத்தை தந்து உடலோம்பலை வலியுறுத்து கின்றார்.

எந்தப் பயிற்சியையும் இளமைப்பருவத்திலிருந்து கற்பது நல்லது. காலையிலும் மாலையிலும் முறையான நடைப்பயிற்சி, மெதுவாய் ஓடுதல் எடை தூக்குதல் குனிந்து நிமிர்தல், தியானம், யோகா ஆகியவற்றைச் சிறாய் மேற்கொண்டால் "நல்ல உடலும் நல்ல மனமும் அமையும்.

முடிவுரை: உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே உடம்பை உணர்த்தேன், உயிர் வளர்த்தேனே" என்னும் திருமூலரின் வாக்குக்கேற்ப உடலினை உறுதியாக்க நாள் தோறும் உடற்பயிற்சி செய்வோம்.

— சு. சஹானா
அசிரியர்: ரமேஷ் இரத்தினகுமார்

# பணத்தின் வரலாறு

பணம், பொருட்கள் மற்றும் சேவைகளைபரிமாறி கொள்ள உதவும் ஒரு பொருள். பழங்காலத்தில் மற்ற பொருட்கள் வாங்க பால், முட்டை, மற்றும் தானியங்களை பணமாக உபயோகித்தனர். அதனை பண்டமாற்று முறை என்று கூறுவார்கள். ஒரு பொருளை மற்ற பொருளுடன் தொடர்பு படுத்தி மதிப்பிடுவது கடினமாக இரு-ந்ததால் இந்த பண்ட மாற்று முறை தோல்வி அடைந்தது. இதுவே பிரதிநிதி பணம் உருவாக வழி வகுத்தது (டாலர்-போன்ற பணம்). இது ஒரு பண்டத்தின் மதிப்பை பிரதிபலித்தது அதற்கு தங்கம், வெள்ளியன் இருப்பு மூலம் ஆதரவு இருந்தது. பிரதிநிதி பணம், ஒப்புறுதியளிக்கப்பட்ட பணமாக மாற்றப்பட்டது. இதற்கு தங்கம் மற்றும் வெள்ளியின் இருப்பு மூலம் ஆதரவு தேவையில்லை. தற்போதைய பொருளாதார அமைப்பு இதையே உபயோகப்படு-த்துகிறது.

அவனிஷ் விஜேகுமார்
அசிரியர்: ரமேஷ் இரத்தினகுமார்

ஆர்த்தி சினிவாசன்
Aarthi Srinivasan

## என் கனவு

என் சிறிய வயதில் இருந்தே எனக்கு வழக்கறிஞர் ஆக விருப்பம். வழக்கறிஞர்கள் தங்கள் எண்ணத்தை சட்டவிதிப்படி வெளியிட முடியும். என்னால் எந்த விவாதத்திலும் எனது எண்ணத்தை வெளிப்படுத்த முடியும். நான் என்னிடம் வரும் மக்களுக்கு சிறிது அளவு பணம் பிடிக்கும். கணக்கும் எனக்கு மிகவும் பிடிக்கும். அனால் வழக்கறிஞராக ஆருவதே என் குறிக்கோளாக கொண்டுள்ளேன்.

ஆசிரியர்: ரமேஷ் இரத்தினகுமார்

## ஔவையார்

ஔவையார் என்ற பெயரில் மூன்று தமிழ் கவிஞர்கள் இருந்தார்கள். இவர்களுடைய பெயர் ஔவை என்றும் ஆர் என்றும் பிரிக்கலாம். ஔவை என்றால் மரியாதையான வயதான பெண் என்று அர்த்தம்.

### முதல் ஔவையார்

முதல் ஔவையார் சங்க காலத்தில் வாழ்ந்தார். ஔவையார் ஐம்பத்தி ஒன்பது கவிதைகளை புறநானூற்றில் பாடியுள்ளார். இந்த ஔவையாருக்கு ஒரு பிரபலமான புராணக்கதை இருக்கிறது. ஒருநாள் ஔவையார் தமிழ் இலக்கியத்தில் இருந்து ஓய்வு பெற எண்ணம் கொண்டிருந்த போது, மாறுவேடமிட்டு முருகன் வந்து ஔவையாரை தமிழ் தொண்டு தொடர்ந்து செய்யும்படி உணரச்செய்துவிட்டார். அப்போது ஔவையார் ஆத்திசூடி என்று அறநூலை நமக்கு வழங்கினார்.

### இரண்டாவது ஔவையார்

இரண்டாவது ஔவையார் சோழர்களுடன் வாழ்ந்தார். ஔவையார் சோழர்களுடைய நீதிமன்றத்தில் கவிஞர். இவர் இளம் குழந்தைகளுக்கு ஆத்திச்சூடி மற்றும் கொன்றைவேந்தன் ஆகிய நூல்களை எழுதினார். இவர் மூதுரை மற்றும் நல்வழி மழைய குழந்தைகளுக்கு எழுதினார்.

ஔவையார்கள் நன்கு அறியப்பட்ட கவிஞர்கள். ஒருவர் சங்ககாலத்தில் வாழ்ந்தார், மற்றொருவர் சோழ காலத்தில் வாழ்ந்தார்.




வருண் மு. கோவிந்தராசன்
வகுப்பு 3அ
ஆசிரியர் ரமேஷ்

# ஆசிரியர் திரு சீனிவாசன் ரெங்கசாமி

சித்தாரத் ஷைலேஷ்ரன்
வகுப்பு - 3A
ஆசிரியர்: சீனிவாசன் ரெங்கசாமி

## "கப்பல்"

ஆசியாவைச் சேர்ந்த நடுத்தர வர்க்கத்து மக்கள் மத்தியிலும் கேளிக்கைகள் மற்றும் உல்லாசச் சுற்றுலாக்கள் இக் காலத்தில் அதிகரித்துள்ளன. இந்நிலையில் "குரூஸ்" என்றழைக்கப்படும் உல்லாசக் கப்பலும் உண்டு. ஓர் உல்லாசக் கப்பலும் எப்படியிருக்கும் என்பதை சராசரி மக்கள் டைட்டானிக் போன்ற பிரபல திரைப்படங்கள் வழியாக அறிந்திருப்பார்கள். அறைகளின் வரைபடம் தொடங்கி நீச்சல் குளம், திரையரங்கு வரை கப்பலின் அனைத்து அம்சங்களும் உள்ளன.





அ விணாஷ் ஜெய்யகுமார்
3அ
சீனிவாசன் ரங்கசாமி

## சிங்கம்

சிங்கம் நீ ஒரு இராக்சஸ சிங்கம் நீ என்னுடைய பிடித்த மிறுகம். நீ காலை முதல் மாலை வரை எப்போது பசிக்கிறதோ அப்பொழுது வேட்டையாடுவாய். நீ ஒரு நல்ல குடும்பதலைவன். உன்னுடைய குடும்பத்தை எதிரியிடம் இருந்து காப்பாற்றுவாய். ஒரு பொழுதும் குடும்பத்தை விட்டு போய்விட மாட்டாய். நீ காட்டின் ராஜா உன்னை பார்த்து மாட்டாய். நீ காட்டின் ராஜா உன்னை பார்த்து எல்லோரும் பயப்படுவார்கள். நீ நன்றாக உண்டு பசாட்டின் முதல் பலசாலி, உன்னால் முடியாது எதுவும் இல்லை அதனால் தானோ இந்திய அரசாங்கம், தேசிய முத்திரையை நான்கு சிங்கம் கொண்டதாக உள்ளது. எந்த பக்கம் எதிரிகள் தாக்கினாலும் இந்தியா எதிர்த்து நிற்கும் தைரியம் உள்ளதாக அமைந்து இருக்கிறது.



## சல்லிகட்டு



ஜல்லிக்கட்டு என்பது தமிழர்களின் மரபுவழி விளையாட்டுக்களில் ஒன்று. மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான் விளையாட்டு. தமிழர்களின் சிறப்பு விளையாட்டுக்களில் ஒன்றாகக் கருதப்படும் இவ்விளையாட்டு மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு எனும் ஊர்களிலும், ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளை ஒட்டி நடத்தப் பெறுகின்றன. 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த "சல்லி காசு" என்னும் இந்திய நாணயங்களை துணியில் வைத்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடப்படும் பழக்கம் இருந்தது. மாட்டை அணையும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும். இந்த பழக்கம் பிற்காலத்தில் "சல்லிகட்டு" என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து "ஜல்லிக்கட்டு" என்று ஆனது.

பெயர் : சேஷாந்த் விஜயகுமார்
வகுப்பு : 3 அ
ஆசிரியர் : சீனிவாசன்

## தாஜ்மகால்

காவியா
3-A
ஆசிரியர் :- சீனிவாசன் கிரேங்கசாமி

தாஜ்மகால் இந்தியாவில் உள்ள ஆக்ரா நகரில் யமுனை நதிக்கரையில் அமைந்துள்ளது.
இது உலக அதிசயங்கலில் ஒன்றாக கருதப்படுகிறது.
முகலாய மன்னர் ஷாஜகான், தனது மனைவி மும்தாஜ் நினைவாக கட்டிய காதல் நினைவு சின்னமே தாஜ்மகால்
இது 1632 ஆம் ஆண்டு கட்ட ஆரம்பித்து 1643 ஆம் ஆண்டு முடிக்க பட்டது. தோட்டங்கள் அமைக்க 5 ஆண்டுகள் ஆனது. இந்தியா முழுவதும் இருந்து இதற்காக பொருட்கள் கொண்டு வந்து கட்டப்பட்டன.
இதற்காக 1,000 யானைகள் பயன் படுத்தப்பட்டன.
தாஜ்மகால் முழுவதும் பளிங்கு கற்கலால் கட்டப்பட்டது.
தாஜ்மகால் முழுவதும் குரான் எழுதப் பட்டுள்ளது.



# ஆசிரியர் திரு சிவயோகன் நாகலிங்கம்

## புலி

நிவிதா கண்டியர்

ஆசிரியர் - சீனிவாசன்
3 அ

புலி ஒரு காட்டு விலங்கு உலகில் பல இடங்களிலும் புலிகள் வாழ்கின்றன. வீரத்திற்கு புலியை எடுத்துக்காட்டாக சொல்லலாம். அத்தகைய புலி பூனையின் குடும்பத்தில் பிறந்தது. நம் மன்னர்களின் ஆட்சி காலம் ஒரு பொற்காலம். ராஜராஜ சோழன் புலியை தன் கொடியின் சின்னமாக கொண்டு வெற்றிகள் பல சூடினார். முழுமையாக வளர்ச்சியடைந்த புலியின் சராசரி நீளம் 6.6-10 அடிகளாகும்



சஹானா கதிரவன்
திரு. சிவயோகன்
வகுப்பு : 3 அ

### சுற்றுலா

கடந்த விடுமுறையின்பொழுது, நானும் என் பெற்றோர்களும் புளோரிடாவுக்கு சென்றோம். நாங்கள் மற்ற உறவினர்களோடு போனோம். அங்கு, நாம் பல இடங்களை பார்க்க போனோம்; கடற்கரைக்கு சென்று விளையாடினோம், வெவ்வேறு விதங்களாய் மீன்களை பார்த்தோம், மற்றும் தெருவில் ஷாப்பிங் சென்றோம். நாங்கள் பெரிய பெரிய பூங்காக்களுக்கு சென்று வந்தோம். கடைசியாக, நாங்கள் எல்லோரும் உணவகங்களுக்கு சென்று அங்கே சாப்பிட்டோம். எனக்கு என் குடும்பத்தோடு நேரத்தை செலவளிப்பது விருப்பம் ஏனெனில் இது ஒரு அருமையான அனுபவமாக இருந்தது.



பெயர்: பூரவஜா
ஆசிரியர்: சிவயோகன்
வகுப்பு: 3அ

## நவராத்திரி

நவராத்திரி பண்டிகை முப்பெரும் தேவியரான துர்க்கை, லட்சுமி, சரஸ்வதி அவர்களின் அருளை வேண்டி கொண்டாடப்படுகிறது. நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் என்று பொருள். இந்த ஒன்பது நாட்களும் இல்லங்களில் படி அமைத்து, பொம்மை வைத்து அலங்கரிப்பர்.

மஹிஷாசுரன் என்ற அரக்கன் சிவனை வழிபட்டு சாகாவரம் பெற்றான். அதனால் அவன் மக்களை துன்புறுத்தி கொல்லத் தொடங்கினான். ஏழு உலகங்களையும் ஆள முற்பட்டான். இதனை அழிக்க பிரம்மா, விஷ்ணு, சிவன் மும்மூர்த்திகளும் இணைந்து அனைத்து சக்திகளும் கொண்ட பராசக்தி துர்க்கையை உருவாக்கினர். துர்க்கையின் இறை அழகில் மயங்கிய அரக்கன் தேவியை திருமணம் செய்ய நெருங்கினான். தேவியோ தன்னை வென்று காட்ட ஆணையிட்டாள். தன் புகழ் மோகத்தில் தேவியுடன் போராடினான். ஒன்பது இரவுகள் கழிந்து தேவி அரக்கனை வதைத்தாள். இதனையே மக்கள் நவராத்திரியாக கொண்டாடுவர்.

நவராத்திரியின் ஒவ்வொரு இரவும் கடவுளுக்கு சுண்டல் படைத்து, பாடல்கள் பாடி, விருந்தினர்களை உபசரித்து கொண்டாடுவர்.

---

பெயர்: சுருதி கண்ணன்
ஆசிரியர்: சிவயோகன்
வகுப்பு: 3அ

## பரதநாட்டியம்

பரதநாட்டியம் தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை உணர்த்தும் பாரம்பரிய நடனமாகும். மனதையும், இறைவனையும் ஒன்றுபடுத்தும் பரதகலையின் பூர்வீகம் தஞ்சாவூர். பரத முனிவரால் உருவாக்கப்பட்டது. பரதம் என்ற சொல்லில் - ப-பாவம், ர-ராகம், த-தாளம், ம்-ஸ்ருதி என்பதை குறிக்கும். இக்கலையை ஆண், பெண் இருபாலரும் பயில்கின்றனர். நிருத்தம் என்பது தாளக்கட்டுமன், அபிநயம் என்பது முகபாவனைகள். நிருத்தியம் என்பது உணர்ச்சிகளும் அபிநயமும் கலந்தது. நாட்டியம் ஆடுபவர் நடராஜரையும், குருவையும் வணங்கிவிட்டு இடதுபுறம் இசைக்கலைஞர்கள் இசைக்க நடனம் ஆடுவர். இந்த கலையில் பந்தநல்லூர் பாணி, வழுவூர் பாணி, மெலத்தூர் பாணி, தஞ்சாவூர் பாணி, கலாக்ஷேத்ரா பாணி ஆகியவை உள்ளன. இக்கலையை முழுமையாக கற்று அரங்கேற்றம் செய்து பட்டங்களும் பெறுகின்றனர். பரதநாட்டியம் ஆடுவதன் மூலம் உடல் உறுப்புகளுக்கு ஆரோக்கியமும், இதயத்திற்கு நல்ல சக்தியும் கிடைக்கிறது என்று மருத்துவர்கள் உறுதி செய்கின்றனர். பரதம் பயில்வோம்! பலத்தை பெறுவோம்!

---

பெயர்: தன்யா பாலசுப்ரமணியன்
Name: Dhanya Balasubramanian
ஆசிரியர்: Dr. N. சிவயோகன், 3ஆ

## நான் கற்ற நீதி நூல்கள்

நாம் தனித்தனியே வாழ்வதில்லை. பலர் கூடி சமுதாயமாக வாழ்கிறோம். இதற்கு என்ன பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும், எவ்வாறு பழகவேண்டும் என்பனவற்றை எடுத்துக்கூறுவனவே நீதி நூல்களாகும்.

தமிழில் பல நீதி நூல்கள் உள்ளன. அவற்றுள் தலையாயது திருவள்ளுவர் தந்த திருக்குறளாகும். அதனால்தன் பாரதியாரும்

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ் நாடு," எனப் பாடியுள்ளார்.

இதைத்தவிர ஔவையார் பாடிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் முதலிய நூல்கள் "அறஞ் செய விரும்பு," "நன்றி மறவேல்" என இரண்டு, மூன்று சொற்களில் அமைந்த ஓரடி பாடல்கள்.

திருக்குறள் இரண்டடி செய்யுளாக அமைந்த நூலாகும். ஒருவர் செய்த நன்றியை மறக்கக் கூடாது, பொருட்செல்வம் நிலையானது அல்ல, கல்விச்செல்வமே நிலையான செல்வம், ஒழுக்கம் உயர்வைத் தரும், எனவே அது உயிரைவிட சிறந்தது முதலான உயர் கருத்துக்கள் நீதி நூல்களில் கூறப்பட்டுள்ளன. நீதி நூல்கள் இலக்கிய நயம் மிக்கன, எளியன, இனியன, ஊக்கம் தருவன. வாழ்வில் தடுமாறும் போது தாங்கி நிற்கும் ஊன்று கோல்கள் போல்வன. அவற்றைப் படித்து நாம் நல்வாழ்வு வாழ்வோமாக.

---

பிரவீன்
புவீந்திரன்
வகுப்பு: 3A
ஆசிரியர்: Dr. N.
சிவயோகன்

## எனது இலங்கை பயணம்

எனக்கு ஏழு வயதாக இருந்தபோது, நான் எனது குடும்பத்தினருடன் இலங்கைக்கு எனது அப்பம்மாவை பார்க்க சென்றோம். அது எனது முதல் இலங்கை பயணம், அதனால் நான் மிகவும் உற்சாகமா இருந்தேன். அங்கு சென்று, அப்பம்மாவை அழைத்துக் கொண்டு நாங்கள் பல கோயில்களுக்கும், சுற்றுலாத்தலங்களுக்கும் சென்றோம்.

நாங்கள் முதலாவதாக சிகிரியாவிற்குச் சென்றோம். ஒரு காலத்தில், சிகிரியா ஒரு கல் கோட்டையாக இருந்தது. இப்போது, அது ஒரு சுற்றுலா மையமாக இருக்கிறது. நாங்கள் ஒரு தேயிலை தோட்டத்திற்குச் சென்றோம். நான் என் உறவினர்களோடு பல புதிய விளையாட்டுகள் விளையாடினேன். நான் எனது தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி மிகவும் அறிந்தேன். நான் என் உறவினர்களுடன் ஆடுகளுக்கு உணவு கொடுத்தேன்.

எனக்கு மிகவும் பிடித்த அனுபவம் எனது அப்பம்மாவுடன் பல நாட்கள் ஒன்றாக இருந்து, பல இடங்களுக்குச் சென்றது. எனது இலங்கை பயணம் ஒரு நல்ல கற்றல் அனுபவமாக இருந்தது.




மதுமிதா கோபிநாத், ரதிஶ்ரீ சீனிவாசன், பிரணதி செல்வகுமார், அந்தரா விவேக்,
ஆற்காடு இராஜசேகர்(ஆ), நத்தாணியேல் நாயகம், உமேஷ் இராதாகிருஷ்ணன், நிதின் ஹரிதாஸ், கார்த்திக் அண்ணாதுரை
பத்மநாபன் சரவணன், அமிழ்தன் இளங்கோவன், கேஷவ் வரதராஜன், காசி அழகானந்தம்(ஆ)

# ஆசிரியர் திரு காசி அழகானந்தன்

பெயர்- கேஷவ் வரதராஜன்
ஆசிரியர்- காசி அழகானந்தம்
வகுப்பு- 3ஆ

## மரம் வளர்போம்!

"மரம் வளர்ப்போம் - மழை பெறுவோம்." இந்த ஒரு வாக்கியத்தில் மரங்களின் பயன் அடங்கியுள்ளது. நவீன காலகட்டத்தில் பல விதமான காரணங்களால் உருவாகும் நச்சு வாயு, கார்பன்-டை-ஆக்ஸைடை தனக்குள் உறிஞ்சி நமக்கு ஆக்ஸிஜன் என்ற பிரான வாயுவை தரும். "ஆயுள் கடவுள்" நம் மரங்கள். வாயு மண்டலத்தின் மாசு, வெப்பநிலை இவற்றையும் மரங்கள் கட்டுப்படுத்துகிறது. நிலத்தின் ஆதாரமான நீர் வளத்தை சேமிக்க உதவுகிறது. பருவகாலங்கள் பொய்க்காமல் இருக்க நமக்கு உதவுகிறது.


"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

மரங்களை போல் நாம் கொண்டுள்ள செல்வத்தை பிறருக்கு கொடுத்து வாழவேண்டும் என்று திருவள்ளுவர் மரங்களின் பெருமையை நமக்கு கூறியுள்ளார்.

நமக்கு தேவையான நிழல், விளையாட்டு மைதானம் சுற்றி இருக்கும் மரங்களால் நல்ல உடல் ஆரோக்கியத்தை குழந்தைகளுக்கு தரும். நகர வளர்ச்சிக்கும் கூட மரங்கள் பயன்படுகிறது. எண்ணற்ற பயன்களை தரும் மரங்களை "மரமே" என்று கூறுவதைவிட "உயிரே!" என்று சொல்வது மிகவும் பொருத்தமாக இருக்கும்.




## நாட்டுப்புற கலைகள்






ஒரு நாட்டின் கலை மற்றும் கலாச்சாரம் அச்சமூகத்தினைப் பிரதிபலிக்கும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுது போக்கிற்காக மட்டுமின்றித் தகவல் ஊடகமாகவும், கலாச்சாரம் பலதின்யாகவும் திகழ்கின்றது. கலை என்பது மன உணர்வுகளின் வெளிப்பாடு. சிறப்பாக நாட்டுப்புறக் கலைகள் நமது மண்ணோடு, நம்மோடு தொடர்புடையவை. நமது பாரம்பரியத்தையும் அடி ஆழத்து வேர்களையும் பிரதிபலிப்பவை. கலை, சமூக வளர்ச்சிக்கும், மன எழுச்சிக்கும் சிறந்த கருவி.









ஆசிரியர்: திரு காசி அழகானந்தம்
பெயர்: லக்ஷ்மி கோபால்ராஜ
வகுப்பு: 3ஆ







பெயர்: அனிக்கா முரளி
ஆசிரியர்: திரு காசி அழகானந்தம்
வகுப்பு: 3B

## ஆறுமுக நாவலர்

இவர் 1822 இல் இலங்கையில் பிறந்தார். தனது ஒன்பதாவது வயதில் தந்தையை இழந்தார். இவருக்கு தமிழும் சைவமும் இரு கண்களாக இருந்தன. இவர் ஆங்கிலம் சமஸ்கிருதத்திலும் வல்லவராக இருருந்தார். பத்தொன்பது வயதிலேயே ஆசிரியப்பணியில் சேர்ந்தார். சிறிது காலத்தின் பின் ஆசிரியப் பணியைக் துறந்து, சமயப் பிரசங்கங்கள் மூலம் விழிப்புணர்ச்சியை உண்டுபண்ணினார். அதற்காக திருவாவடுதுறை ஆதீனத்தார், அவருக்கு "நாவலர்" பட்டம் வழங்கினர். இவரது பணி தமிழ் நாட்டிலும் பரவியது. அங்கு தனது செலவில் அச்சு இயந்திரம் வாங்கி பல தமிழ், சமய நூல்களை வெளியிட்டார். அங்கு ஒரு சைவபிரகாச வித்தியாசாலை என்னும் பாடசாலையையும் நிறுவினார். 1872 ஆம் ஆண்டு ஒரு சைவ ஆங்கில பாடசாலையை உருவாக்கினார். அவர் தனது 57 ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.



## சுப்ரமணிய பாரதியார்

சுப்ரமணிய பாரதியார் ஒரு தமிழ் கவிஞர். இவர் ஒரு கவிஞர் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளர், பத்திரிக்கையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி மற்றும் தன்னுடைய பாட்டுகளின் மூலமாக சிந்தனைகளை மக்களிடம் தட்டியெழுப்பியவர். தம் தாய்மொழியாம் தமிழ்மொழி மீது அளவுகடந்த பற்றுக்கொண்ட இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்," என்று போற்றி பாடியுள்ளார்.

மனதில் உறுதிவேண்டும்
வாக்கினிலே இனிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேணடும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
— பாரதியார்



பெயர்: அமிழ்தன் இளங்கோவன்
அசிரியர்: காசி அழகானந்தம்
வகுப்பு: 3ஆ

பெயர்: மதுமிதா. கோ
வகுப்பு: 3 ஆ
ஆசிரியர்: காசி ஸ்ரீ அழகர்நந்தம்

## மரம் வளர்ப்போம்

"வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்"
- இப்படி பல slogan-களை பார்த்திருக்கிறோம்.

ஆனால் செய்திருக்கிறோமா? மரங்கள் நமக்கு உணவு மற்றும் மருந்துகளை உருவாக்க மட்டுமின்றி கப்பல் கட்டுவதற்கும் வீடு கட்டுவதற்க்கும் பல வகையான பொருட்கள் தயாரிக்கவு உதவுகின்றன. மரங்கள் நிழல் தருவதோடு மாசு நிறைந்த காற்றை தூய்மை செய்கின்றன. வெப்பம் அதிகரித்தன் காரணம் நாம் மரங்களை அழித்ததே.





மரங்கள் மண் அரிப்பை தடுக்கின்றன, நிலத்தடி நீர் அளவையும் மழை பெய்யவும் உதவுகின்றன. நம்மால் ஒரு காட்டை வளர்க்க முடியாது. குறைந்தது ஒரு மரம் வளர்க்க முடியும். கொஞ்சம் நேரம், கொஞ்சம் நேசம், கொஞ்சம் மெனக்கெடல் இருந்தால் போதும் அனைவரும் பசுமை பயிரிடலாம். உடலுக்கு பயிற்சி. அழகுக்கு அழகு

வீட்டுக்கொரு மரம் வளர்ப்போம் என்பது அன்றைய வாசகம், ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய தேவை இன்று உள்ளது. நமக்கு முந்தைய தலைமுறையில் இல்லாத ஒன்றாக நம் தண்ணீரை காசு கொடுத்து வாங்குகிறோம், எதிர்கால தலைமுறை காற்றுக்கு காசு செலவழிக்கும் முன் நாம் செயல்பட வேண்டும் குறைந்தபட்சம் ... நம் எதிர்காலத்துக்கு விதைப்போம்!!!

பெயர்: உமேஷ் ராதாகிருஷ்ணன்
வகுப்பு: 3 ஆ
ஆசிரியர்: காசி அழகானந்தம்

## சுப்ரமணிய பாரதியார்

சுப்ரமணிய பாரதியார் அவர்கள், சின்னசாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மகனாக 1882 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே பாரதியாருக்கு தமிழ் மொழி மீது சிறந்த பற்றும், புலமையும் இருந்தது. இவருடைய கவிப்புலமையை பாராட்டிய எட்டயபுர மன்னர், இவருக்கு "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவர் "சுப்பிரமணிய பாரதியார்" என அழைக்கப்பெற்றார். பாரதியார் அவர்கள், 1897 ஆம் ஆண்டு செல்லம்மா என்பவரைத் திருமணம் செய்து கொண்டார். எட்டையபுர மன்னரின் அழைப்பை ஏற்று அரசவை கவிஞராக பணியாற்றினார். இவர் சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, ஆங்கிலம் போன்ற பிறமொழிகளிலும் தனி புலமைப்பெற்று விளங்கினார். கண்ணன்பாட்டு, 'குயில்பாட்டு', 'பாஞ்சாலி சபதம்', 'புதிய ஆத்திசூடி' போன்ற புகழ் பெற்ற காவியங்கள் பாரதியரால் எழுதப் பெற்றன. பாரதியார் "இந்தியா பத்திரிகையின்" மூலம் மக்களிடையே விடுதலை உணர்வை தூண்டும் வகையில் பல எழுச்சியூட்டும் கட்டுரைகளை எழுதினார். இவர் சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராக, நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை பணியாற்றினார். "ஆடுவோமே பள்ளு பாடுவோமே. ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோம்" என்று தன்னுடைய சுதந்திர தாகத்தை தன் பாட்டின் மூலம் வெளிபடுத்தியவர். 1921 செப்டம்பர் 11ம் தேதி, தனது 39 ஆவது வயதில் இவ்வுலக வாழ்விலிருந்து விடுதலைப் பெற்றார்.



# ஆசிரியர் திரு ஆற்காடு இராஜசேகர்

பெயர் - ரதிப்ரி சீனிவாசன்
வகுப்பு - 3 ஆ
ஆசிரியர் - திருராஜசேகர்

## அறுசுவை

துவர்ப்பு | இனிப்பு
புளிப்பு | கார்ப்பு
கசப்பு | உவர்ப்பு

துவர்ப்பு-இரத்தத்தைப் பெருக்கும்.
இனிப்பு-தசையை வளர்க்கும்.
புளிப்பு-கொழுப்பினை வழங்கும்
கார்ப்பு-எலும்புகளை வளர்க்கும்
கசப்பு - நரம்புகளை பலப்படுக்கும்
உவர்ப்பு- உமிழ்நீரைச் சுரக்கும்.

பழங்கால இந்திய மருத்துவங்களும், ஆயுர் வேதமும், நா அறியக்கூடிய சுவைகளை ஆறு வகைகளாகப் பிரிக்கின்றன. ஆயுர்வேதம், உடலின் ஆறு முக்கிய தாதுக்களுடன் இச்சுவைகளை சம்பந்தபடுத்தி, உடல் வளர்ச்சியில் இச்சுவைகளின் பங்குகளை விளக்குகின்றது இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, கசப்பு மற்றும் துவர்ப்பு ஆகிய இந்த ஆறுசுவைகள் ஆகும்.

தொன்றுதொட்டு பழக்கத்தில் இருந்து வரும் இந்திய மருத்துவங்களாகிய ஆயுர்வேதம், சித்த மருத்துவம் போன்றவற்றி சுவைகள் ஆறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. உடலானது ரத்தம், தசை, கொழுப்பு, எலும்பு, நரம்பு, உமிழ்நீர் மூளை ஆகிய ஏழு முக்கிய தாதுக்களைக் கொண்டது என்பதனால் உடலை "யாக்கை" என்று கூறினர். இதில் ஏழாவது தாதுவான மூளை சரிவர இயங்க முதல் ஆறு தாதுக்கள் சரிந்த அளவில் இருத்தல் அவசியம். இந்த ஆறு தாதுக்களும், ஆறு சுவைகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன.

அந்த கால மருத்துவங்களும், உணவு முறைகளும் இதனை அடிப்படையாகக் கொண்டே இருந்துவந்தது. உடல் தாதுவைப் பெருக்க, சமன் செய்ய அதற்கு ஏற்றவாறு உணவு வகைகளை தயாரித்து வந்தனர். இதனைக் கொண்டுதான் "உணவே மருந்து, மருந்தே உணவு" என்று சொல்வார்கள்.

## ஆழ்வார்களின் தமிழ் தொண்டு


பெயர்: ... 
வகுப்பு: 3 ஆ
ஆசிரியர்: ஆர்காடு ராஜசேகர்

| ஸ்ரீ பொய்கையாழ்வார் | ஸ்ரீ பூதத்தாழ்வார் |
|---|---|
| காலம்: 713 கியில் காஞ்சிப்புரத்தில் பிறந்தார். பாசுரம்: முதல் திருவந்தாதி. | காலம்: 713 கியில் மாமல்லபுரத்தில் பிறந்தார். பாசுரம்: இரண்டாம் திருவந்தாதி. |
| **ஸ்ரீ பேயாழ்வார்** | **ஸ்ரீ திருமழிசையாழ்வார்** |
| காலம்: 713 கியில் மயிலையில் பிறந்தார். பாசுரம்: மூன்றாம் திருவந்தாதி. | காலம்: 720 கியில் திருமழிசையில் பிறந்தார். பாசுரங்கள்: நான்முகன் திருவந்தாதி மற்றும் திருச்சந்த விருத்தம். |
| **ஸ்ரீ நம்மாழ்வார்** | **ஸ்ரீ மதுரகவியாழ்வார்** |
| காலம்: 798 கியில் ஆழ்வார்திருநகரியில் பிறந்தார். பாசுரங்கள்: திருவிருத்தம், பெரிய திருவந்தாதி திருவாய்மொழி, திருவாசிரியம். | காலம்: 800 கியில் திருக்கோளூரில் பிறந்தார். பாசுரங்கள்: கண்ணிநுண் சிறுத்தாம்பு. |
| **ஸ்ரீ குலசேகராழ்வார்** | **ஸ்ரீ பெரியாழ்வார்** |
| காலம்: 767 கியில் திருவஞ்சிக்குளத்தில் பிறந்தார். பாசுரம்: பெருமாள் திருமொழி. | காலம்: 785 கியில் ஸ்ரீ வில்லிப்புத்தூரில் பிறந்தார். பாசுரங்கள்: திருப்பல்லாண்டு, மற்றும் பெரியாழ்வார் திருமொழி. |
| **ஸ்ரீ ஆண்டாள்** | **ஸ்ரீ தொண்டரடிப்பொடியாழ்வார்** |
| பிறந்த இடம்: ஸ்ரீ வில்லிப்புத்தூரில் பிறந்தார். பாசுரங்கள்: நாச்சியர் திருமொழி மற்றும் திருப்பாவை. | காலம்: 726 கியில் திருமண்டங்குடியில் பிறந்தார். பாசுரங்கள்: திருமாலை, மற்றும் திருப்பள்ளியெழுச்சி. |
| **ஸ்ரீ திருப்பாணாழ்வார்** | **ஸ்ரீ திருமங்கையாழ்வார்** |
| காலம்: 781 கியில் உறையூரில் பிறந்தார். பாசுரம்: அமலனாதிபிரான். | காலம்: 776 கியில் திருக்குறையலூரில் பிறந்தார். பாசுரங்கள்: சிறிய திருமடல், பெரிய திருமடல், பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை. |

## இசை

பெயர்: பாரதத்க அண்ணாதுரை
வகுப்பு: 3-ஆ
ஆசிரியர் திரு ஆற்காடு ராஜசேகர்

இசை என்பது வாழ்க்கை. இது நம் எண்ண ஓட்டத்தை சீர்படுத்தவும், சீராக வளரவும் மற்றும் மனதையும் உடலையும் ஒருநிலை படுத்தவும் உதவுகிறது. நீங்கள் மன அமைதி இசையை வாசியுங்கள். நீங்கள் மகிழ்ச்சியான சூழ்நிலையில் இருக்கும்போது இனிமையான இசையையும், வருத்தமாக இருக்கும் போது மனஅமைதி தரும் இசையையும் வாசியுங்கள். நீங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள். உங்களுக்கு இசை பிடித்தால் ஒரு இசைக்கருவியை மீட்டுங்கள். ஒரு இனிமையான வேறு உலகத்திற்கு செல்வதை உணர்வீர்கள். உங்கள் உணர்வுகளை நீங்கள் உங்கள் இசையில் கொண்டு வாருங்கள். அது உங்கள் இசையாக இனிமையாகவும், அழகாகவும் ஆக்கும். அது எந்த சூழ்நிலையையும் அழகாகவும் ஆக்கும். அது எந்த பாடலாகவோ இசைக்கருவியின் இசையாகவோ இருக்கலாம். எல்லாமே இசைமயம். நாம் பேசுவதும், எழுப்பும் எந்த சிறிய ஒலியுமே இசை தான். குழந்தைகள் பாத்திரத்தை தட்டி எழுப்பும் ஓசையும் கூட இசை தான். மற்றவர்களுக்கு இது எரிச்சலை தந்தாலும், எனக்கு இதுவும் இனிமையான இசை ஆகும்



## நாட்டுப்புற கலைகள்

மதுமதி இ.
வகுப்பு - 3B
ஆசிரியர் - ராஜசேகரன் அவர்கள்.

கும்மி ஆட்டம் என்பது தமிழர்களின் கிராமிய கலையாகும். கும்மி ஆட்டம் பெண்களால் ஆடி பாடி விளையாடும் கலை ஆகும். பொங்கல் காலங்களில் கும்மி ஆட்டம் சிறப்பாகவும் கொண்டாடப்படும். இது பெண்கள் பருவ வயதை அடையும் போதும் தோழிகள் சேர்ந்து கும்மி அடித்து பெண்ணை மகிழ்விப்பார்கள். சில சமயங்களில் பக்க வாத்தியங்கள் இசைத்தும் கைகளை தட்டி ஓசை எழுப்பியும் கும்மி அடிக்கும் பெண்களை உற்சாகப் படுத்துவார்கள்.

கும்மி அடிக்கும் பெண்கள் வட்ட வடிவத்தில் அணி வகுத்து ஆடுவார்கள். கும்மி அடித்து பாடும் பாடலை அணியின் தலைமை வகிக்கும் பெண் முதல் வரியை பாடுவார், மற்ற பெண்கள் அனைவரும் ஒரு சேர அந்த வரிகளை தொடர்ந்து பாடுவார்கள். கும்மி பலவகைப்படும். பூந்தட்டி கும்மி, தீப கும்மி, குலவை கும்மி மற்றும் முளைப்பாரி கும்மி.

# ஆசிரியர் திரு
# ஷபியுல்லா கான்

## ஊக்கமது கைவிடேல்

பிரணதி செல்வகுமார் - 3ஆ
ஆர்காட் இராஜசேகர்


முயற்சியைக் கைவிடாதே"

ஒரு காட்டில் வாழ்ந்து வந்த முயல், தான் மிகவும் வேகமாக ஓடுவதை குறித்து மிகவும் பெருமைப்பட்டு கொண்டது. இதை பார்த்த ஆமை ஒன்று, அந்த முயலை ஓட்டப் பந்தயப் போட்டிக்கு அழைத்தது. ஆமை மெதுவாக நடப்பதை, முயல் கேலி செய்தது. போட்டி தொடங்கியதும் காட்டில் உள்ள அனைத்து மிருகங்களும் அதைக் காண ஒன்று கூடின. எப்படியும் தான் வெற்றி பெறுவோம் என்று நினைத்த முயல், ஓய்வு எடுப்பதற்காக சற்று நேரம் தூங்கியது. ஆனால் ஆமை தன் முயற்சியைக் கைவிடாது தன் இலக்கை நோக்கி சென்றதால் அது போட்டியில் வெற்றி பெற்றது.

(இதே கருத்தை தான் வள்ளுவர் தன் குறளில் பின்வருமாறு கூறியுள்ளார்)

"தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

பொருள்: கடவுளிடம்
வண்டி நடக்காத காரியம்
டட ஒருவர் முயற்சியோடு
உழைத்தால் கண்டிப்பாக
து வெற்றியைத்
தடி தரும்.



## பனைகள் கோடி

நித்தின் ஹரிதரன்

தமிழகம் 70% கடினத்தன்மையுள்ள நிலப்பரப்பைக் கொண்டதாகும். இதனால் நம் முன்னோர்கள் பூமியின் மேற்பரப்பில் நீரைச் சேகரிக்க ஏரிகள் குளம், குட்டைகளை வெட்டினர். நீர்நிலைகளைச் சுற்றி மருதமரம், பனைமரம் போன்ற மரங்களை நட்டார்கள். பனை மரங்கள் தனது சல்லிவேர்ப் பகுதியின் மூலம் மண் அரிப்பைத் தடுத்து நீர் நிலைகளின் கரைகளை பலப்படுத்துகிறது. இதன் ஆணிவேரானது மழைக்காலங்களில் உறிஞ்சிய நீரை சந்திகரித்து நிலத்தடி நீரோடையில் சேமிக்கிறது. பனைமரத்திற்கு வறட்சியான காலங்களிலும் குறைந்த அளவு நீரே போதுமானது.

ஆசிரியர் - ஷபி கான்

பனை மரத்தின் பயன்கள்:


- உடலுக்கு ஆரோக்கியம் தரக்கூடிய மிக்கும் மேற்பட்ட உணவு வகைகள் தயாரிப்பதற்கு மூலப்பொருட்களைக் கொடுக்கிறது.
- இந்த உணவுப்பொருட்கள் மருத்துவ குணம் நிறைந்ததாகத் திகழ்கிறது.
- நூற்றுக்கணக்கான கலை மற்றும் கைவினைப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது.
- பனைமரத்தின் சட்டம் ஓலை மற்றும் பட்டைகளைக் கொண்டு ஒரு முழுக் குடியிருப்பையே உருவாக்க முடியும். அந்த அளவுக்குக் கட்டுமானத்தில் மிகப்பெரிய பங்களிக்கிறது.
- பனைமரத்திலிருந்து கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி, தயாரிக்கபடும் பொருட்களைப் பயன்படுத்தினால் நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டைக் குறைக்கலாம்.

பனைகள் கோடி இயக்கம்:

இந்த இயக்கம் கோடி பனை மரங்களை 20ஆம் ஆண்டிற்குள் தமிழ் நாடு முழுவதும் நட்டு, நமது நிலத்தடி நீரை தக்கவைக்கும் வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். மாவட்டமாக குழுக்கள் அமைத்து முயற்சியில் உள்ளார்கள். அவர்களுடன் இணைந்து செயல்படுமாறு வேண்டுகிறேன். நீங்களும் இதைப்பற்றி முழுவிவரம் அறிய 919-594-2225 அணுகவும்.

## ஆ. ப. ஜெ. அப்துல் கலாம்


பத்மநாபன் சரவணன்
3B
ஷ.பி கான்



கலாம் 1931 அக்டோபர் 15ஆம் தேதி ராமேஸ்வரத்தில் பிறந்தார். இவருடைய குடும்பம் ஏழ்மையில் இருந்ததால், இளம் வயதிலேயே செய்தித்தாள்களை விநியோகம் செய்தார். அவர் திருச்சியிலுள்ள செயின்ட் ஜோசப் மற்றும் சென்னை எம். ஐ. டியில் படித்தார். கலாம் விஞ்ஞானியாக இருந்த இந்திய ராணுவத்திற்கு ஒரு சிறிய ஹெலிகாப்டர் வடிவமைத்தார். ரோகினி-1 என்ற துணைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் ஏவசெய்தார். கலாம் 11வது குடியரசு தலைவராக இருந்தார். நாடு முழுவதும் பயணம் செய்து மக்களையும், மாணவர்களையும் சந்தித்து இந்தியா வல்லரசாக வேண்டும் என்ற ஆசையை மக்களின் மனதில் பதியவைத்தார். கலாம் 2015 ஷில்லாங்கில் உள்ள ஐ. ஐ. எம். மேடையில் பேசிக்கொண்டிருந்தபோது மயங்கி விழுந்து மறைந்தார்.

## மயில்

மயில் நம் இந்திய நாட்டின் தேசிய பறவையாகும். பொதுவாக மயில் வெப்ப பிரதேசங்களில் உள்ள சிறிய காட்டிலும் தோட்டத்திலும் வாழும். மழை மேகங்களை கண்டவுடன் ஆண் மயில் தோகையை விசிறிபோல் விரித்து அழகாக நடனம் ஆடும். தோகையில் உள்ள இறகுகள் நீலம் மற்றும் பச்சை நிறங்களில் கண் போன்று காட்சி தரும். மயிலின் தலையில் கிரீடம் போன்று இருப்பதால் இதை அரசன் என்றும் அழைப்பர். சுமார் ஐந்து அடி நீளம் உள்ள மயிலின் கால்கள் மெல்லியதாகவும் கருப்பாகவும் இருக்கும். மயில் உள்ள இடத்தில் பாம்புகள் அண்டாது என்று சொல்வார்கள். மயிலின் முக்கிய உணவுகள் தானியங்கள், பூச்சிகள் ஆகும். இவ்வளவு சிறப்பு மிக்க மயில் முற்காலத்தில் இறைச்சிக்காகவும், பின்னர் அதன் இறகுக்காகவும் வேட்டையாடப்பட்டன. இந்த அழகான மயில் இனத்தை காப்பாற்ற அரசும் மக்களும் ஆவன செய்ய வேண்டும்....



சந்தனா ஸ்ரீஹரி
3ஆ
ஷபி கான்

| | |
|---|---|
| திருக்குறள்; | நேத்தன் நாயகம் |
| அதிகாரம் 13 | வகுப்பு: 3A |
| குறள் 616 | ஆசிரியர்: ஷபி கான் |


முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

விளக்கம்

முயற்சி ஒருவனுக்கு செல்வத்தைப் பெருக்கச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் வறுமையை அடைவிக்கும்.

படம் விளக்கம்: ஒருவன் முயன்றால்தான் மலைமேல் ஏற முடியும். முயலாவிட்டால் அவனுக்கு வெற்றி வாய்ப்பு இல்லை.

படம்:



அனிஷா சிவயோகன் வகுப்பு 3ஆ ஆசிரியர்-ஷாபி கான்

### தமிழ் மொழியின் அவசியம்

கடந்த வருடம் வரை எனது அப்பா எவ்வளவு எடுத்துக் கூறியும் தமிழின் முக்கியத்துவம் எனக்குப் புரியவில்லை. கடந்த கோடை விடுமுறையின் போது நாம் அனைவரும் எமது ஊரான யாழ்ப்பாணத்துக்குப் போனோம். இம்முறை அங்குள்ள ஆரம்பப் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு ஆங்கிலம் பேசப் பழக்க என்னை ஆசிரியர் ஒருவர் தனக்கு உதவியாக அழைத்தார். இதுவொரு நல்ல சந்தர்ப்பமாக எண்ணி நானும் போனேன்.

அங்கு படிக்கும் மாணவர்களுக்கு தமிழ் மட்டுமே தெரியும். நான் முதல்நாள் வகுப்புக்கு போனபோது எல்லோரும் எழுந்து நின்று "வணக்கம் அக்கா" என்றார்கள். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. வகுப்பு ஆசிரியர் ஆங்கிலம் கற்பிக்கும் போது நானும் அவருக்கு உதவியாக மாணவர்களுடன் ஆங்கிலத்தில் பேசி அவர்களை ஊக்குவித்தேன். அவர்கள் அமெரிக்காவைப் பற்றிக் கேட்டார்கள். நான் கூறினேன். தமிழ் எப்படி தெரியும் என்று கேட்டார்கள். நான் கூறினேன். தமிழ் எப்படி தெரியும் என்று கேட்டார்கள். நான் இங்கு தமிழ்ப்பள்ளியில் கற்கிறேன். அத்துடன் வீட்டிலும் தமிழில்தான் பேசுகிறோம் என்று கூறினேன்.

அடுத்த நாள் அப் பாடசாலையில் கணித ஆசிரியர் ஒருவர் வரவில்லை என்று என்னை அழைத்தார்கள். நானும் மாணவர்களுக்கு கணிதத்தை தமிழில் கற்பித்தேன். அதன்பின் நான் ஆங்கில வகுப்பில் இருக்கும் போதெல்லாம் என்னை வேறு வேறு வகுப்புகளைக் கவனிக்கச் சொல்லி அதிபர் அழைத்துச் செல்வார். நான் தமிழ், சமயம், கணிதம், ஆங்கிலம் என்று எல்லாப் பாடங்களையும் ஒரு மாதம் கற்பித்தேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது. எனக்கு தமிழ் நன்றாகப் பேசத் தெரிந்ததால்தான் என்னால் இவ்வாறு பாடசாலை ஒன்றில் தொண்டாற்ற முடிந்தது. இந்த அனுபவம் எனது வாழ்வுக்கு மிகவும் பிரயோசனமாக இருக்கும். நான் அடுத்த முறையும் செல்லும் போது இவ்வாறு சேவை செய்யப்போகிறேன். அதற்கு தமிழ்மொழி மிகவும் அவசியமாகும்.




ஆர்த்தி, ஹேனா, கைலாஷ், ஆகாஷ், கௌதம், ஷர்மிளா(ஆ)
அல்லி(ஆ), ஆனந்த், அமரன், ஸ்ரீநிதி, ஷிவாலி, அதிதி

# ஆசிரியை திருமதி ஷர்மிளா கோவிந்தராஜன்

## தமிழ் புத்தாண்டு

அர்த்தா சுரேஷ்
4A-Sharmi

தமிழ் புத்தாண்டு ஒரு புதிய ஆண் தொடக்கத்தின் கொண்டாட்டம். தமிழர்கள் புத்தாண்டு கொண்டாட்டம் நாள் சித்திரை பதினான்கு அகும். தமிழர்கள் மற்றும் இலங்கையார்கள் தமிழ் புத்தாண்டு கொண்டாடுவார்கள். சித்திரை தமிழ் சூரிய காலண்டர் முதல் மாதம்.

தமிழ் புத்தாண்டு முதல் நாள் இரவு அன்று குடும்பங்கள் ஒரு தட்டில் பழங்கள், கொட்டைகள், வெற்றிலை, பணம், மற்றும மலர்கள் வைப்பார்கள். மக்கள் தங்கள் வீட்டு வாசலில் கோலங்கள் உரைவார்கள். காலையில் எழுந்தும் எல்லோரும் குளிப்பார்கள். பிறகு, அவர்கள் புதிய ஆடைகளை அணிவ்வார்கள். பின்னர் கோவிலுக்கு செல்லுவார்கள். உரவினர்களுடன் சேர்ந்து கொண்டாடுவார்கள். இந்தியாவில் நீங்கள் வேப்பம் மரத்தின் புக்கள், மற்றும் மாம்பழம் பார்க்க ஆரம்பிக்க முடியும். மக்கள் உளர்ச்சி, செழிப்பு குறிப்பதாக வேப்பம் பூக்கள் மற்றும் மாம்பழம் பயன்படுத்து-வார்கள். இந்த நாள் வீட்டில் ஒரு விருந்து கொண்ட கொண்டாடப்படுகிறது.

## ஜல்லிக்கட்டு

ஹேனா
சவேரியார்
4A

ஜல்லிக்கட்டு, இது பொங்கல் விழா முடிந்த அடுத்த நாள் கொண்டாடப்படும், தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். இன்று காளை மாடுகளை குளிப்பாட்டி அலங்கரித்து, பட்டிகளில் அடைத்து, திறந்து விடுவார்கள். அதை இளைஞர்கள் அடைக்கு வார்கள். இது தமிழர்களின் பாரம்பரியமாக போற்றப்பட்டு வந்தது. இந்த பாரம்பரியத்தை மிருகவதை என்று காரணம் காட்டி 2014 இல தடை செய்தார்கள். இது தமிழர்களின் பாரம்பரியத்தை பாதித்த ஒரு செயலாக தமிழர்கள் உணர்ந்தார்கள். குறிப்பாக இளைஞர்களிடையே பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. இதனால் இந்த வருடம் பொங்கல் முடிந்தவுடன் தங்கள் அதிருப்தியை தெரிவிக்க சென்னையில் மெரினா கடற்கரையில் சில நூறு பேர்கள் ஒன்றாக கூடினார்கள். இந்த இயக்கம் எதிர்பாராத விதமாக பெரிதாக வளர்ந்து பல கோடி மக்கள் உலகெங்கும் குரல் கொடுத்தார்கள். இதனால் தமிழகமே பிரமித்து நின்றது. மத்திய அரசாங்கம் தலையிட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இந்திய அரசு இதில் தலையிட்டு தடையை தள்ளுபடி செய்தது. இது தமிழர்களுக்கு கிடைத்த வெற்றியாக மக்கள் கொண்டாடுகிறார்கள்.



ருஷா சுப்ரமணியன்
வகுப்பு 4A
ஆசிரியர்: சர்மி

## பரதநாட்டியம்

பரதநாட்டியம் தமிழ் நாட்டில் தொடங்கிய கலை அகும். நான் இந்த கலையை கடந்த ஆறு வருடங்கலாக கற்று வருகிறேன். பரதநாட்டியத்தில் நிறைய அபினையங்கள் உள்ளது. நான் பந்தநல்லுர் பயிற்ச்சி முறையில் நடனம் கற்று கொள்கிறேன். பரதநாட்டியத்தில் ஆண்களை குறிக்க தாண்டவம் நடனமும் மற்றும் பெண்களை குறிக்க லாசை வகை நடனமும் உள்ளது. பரதநாட்டியத்தில் பாடலின் பொருள்ளை அபினையத்திலும் மற்றும் நடனத்திலும் காட்டலாம். இந்த பரதநாட்டிய பயிற்ச்சி முலம் இந்து மத தைகளை தெறிந்து கொள்ளலாம். என்னுடைய ஆசரியர் இந்து மத ஸ்லோகங்கள் சொல்லிக் குடுப்பார்கள்.



கௌதம் தர்மா 4அ
ஆசிரியர்: சர்மிளா

## மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்

"மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்". இது நம் ஒவ்வொருவர் மனதிலும் ஒலிக்க வேண்டிய சொல்லாகும். மரங்கள் இயற்கையின் கொடை. இதை நாம் அழிக்க கூடாது. மாறாக அதைக் காப்பாற்ற வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது. ஏனெனில் இயற்கையன்னை அனைத்தையும் நமது நலனுக்குத்தானே தந்து கொண்டிருக்கிறாள். மரம் வளர்ப்பதால் நமக்கு பல நன்மைகள் உள்ளன.

1. மரங்கள் தூய்மையான காற்றை வழங்கும்,
2. வெப்பம் தணிக்கும்
3. பறவைகளின் சரணாலயம்
4. மண்அரிப்பை தடுக்கும்
5. நிலத்தடி நீரைக் காக்கும்
6. முக்கியமாக மழை பெய்ய பெரிதும் உதவுகின்றன.

இவ்வாறு பல நன்மைகளைத் தரும் மரங்களை வளர்ப்போம். இயற்கையை பாது காப்போம்.

நன்றி.

ஆராதி சண்முகவேல்
சர்மிலா
4அ

## கல்லணை

இரண்டாம் நூற்றாண்டில் தமிழகத்தை ஆண்ட கரிகாலன் என்ற சோழ மன்னனால் கட்டப்பட்டது கல்லணை ஆகும். ஒரு நொடிக்கு இரண்டு லட்சம் நீர் பாயும் காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டார்கள் தமிழர்கள். அந்த பாறைள் நீர் அரிப்பின் காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதன் மேல் வேறொரு பாறையை நடுவே தண்ணீர் கரையாத ஒருவித ஒட்டும் களி மண்ணைப் புதிய பாறைகளில் பூசிவிடுவார்கள். இப்போது இரண்டும் ஒட்டிக்கொள்ளும். இப்படிப் பாறைகளின் மேல் பாறையைப் போட்டு, படு வேகத்தில் செல்லும் காவிரி நீர் மீது கட்டிய அணை தான் கல்லணை.

கல்லணையின் நீளம் 1080 அடி, அகலம் 66 அடி, மற்றும் உயரம் 18 அடி. இது நெளிந்த அமைப்புடன் காணப்படுகிறது. ஆங்கிலப் பொறியாளர் சர் ஆர்தர் காட்டன் தான் இந்த அணையைப் பற்றிப் பலகாலம் ஆராய்ச்சி செய்து இந்த உண்மைகளைக் கண்டறிந்தார். காலத்தை வென்று நிற்கும் தமிழனின் பெரும் சாதனையைப் பார்த்து வியந்து அதை "கிராண்ட அணைக்கட்" என்றார் சர் ஆர்தர் காட்டன். அதுவே பிறகு உலகமெங்கும் பிரபலமானது.



## விவசாயம்

அமரன் கண்டியர்
4அ

விவசாயம் தமிழ் நாட்டின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய பங்குவகிக்கிறது. தமிழ் நாட்டில் கிட்டத்தட்ட மக்கள் தொகையில் 46331450 பேர் விவசாயத்தில் ஈடுபடுகிறார்கள். இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அதிகமான விவசாயம் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. அதிலும் தமிழ் நாட்டில்தான் அதிகமாக நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக நெல் சாகுபடி செய்வதால் அதை "நெற்களஞ்சியம்" என்று அழைக்கப்படுகிறது.

# ஆசிரியை திருமதி அல்லி தாஸ்

## இந்தியா

அதிதி நாராயணன்
4அ
ஆசிரியர் : அல்லி தாஸ்

இந்தியாவில் பல கோவில்கள் இருக்கிறது. பல விதமான நடனங்கள் குச்சிப்புடி, மணிப்புரி, கதகளி, ஒடிசி, கதக் மற்றும் பரதநாட்டியம் போன்றவை ஆகும். ஆக்ராவில், தாஜ் மஹால் இருக்கிறது. அது 1648-ல் 20,000 தொழிலாளிகள் உதவியுடன் கட்டினார்கள். இந்தியாவில் 22 மசால் உணகைள் இருக்கிறது. தீபாவளி, பொங்கல், ஹோலி மற்றம் நவராத்திரி போன்ற பல விழாக்கள் கொண்டாடப்படும். நிறைய மொழிகள் தமிழ், மலையாளம், குஜராத்தி, பெங்காலி, இந்தி மற்றம் தெலுங்கு போன்றவை பேசப்படும். இந்தியாவில் உள்ள இமாலைய மலை உலகிலேயே உயரமான மலை ஆகும். இந்தியாவின் கலாச்சாரம் மிகவு தொன்மையானது.

பெயர்: ஆனந் அழகானந்தம்
வகுப்பு: 4அ
ஆசிரியர்: அல்லி தாஸ்

ஏறு தழுவல் என்பது தமிழர்களின் மரபுவழி வீர விளையாட்டு ஆகும். ஏறு என்பது காளைமாட்டை குறிக்கும். மாட்டை ஓடவிட்டு அதை மனிதர்கள் அதன் திமிலை பிடித்து அடக்குவதே ஏறு தழுவல் ஆகும். ஆண்டு தோறும் தை மாதத்தில் பொங்கல்



திருநாளையொட்டி நடத்துவர். உலக அளவில் சிறப்பு வாய்ந்தது. அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஆகும். ஏறு தழுவல் நடத்துவதன் மூலம் நம் நாட்டு மாடுகள் உளம் வெளி கலப்பின மாடுகள் உருவாவது குறையும். ஏறு தழுவல் மூலம் காளை மாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. எனவே ஏறு தழுவல் தொடர்ந்து நடைபெற வேண்டும்.

பெயர்: பூந்த[illegible]
ஆசிரியர்: Alli
வகுப்பு: 4A

## நானிலம் போற்றும் நல்லாசிரியர்

ஆசிரியராக இருந்து குடியரசுத் தலைவராக உயர்ந்தவர்; 'தத்துவ மேதை' எனப் புகழப்படுவர்; தம் பிறந்த நாளை 'ஆசிரியர் தின'[illegible] கொண்டாட விரும்பியவர். இத்தகைய பெருமைகளுக்கெல்லாம் உரியவர் டாக்டர் இராதாகிருஷ்ணன் என்ற மாமனிதர் ஆவார்.

[illegible] தோன்றிற் புகழொடு தோன்றுக' என்பார் வள்ளுவர். இவ்வா[க்]கிற்கிணங்க 1888 ஆம் ஆண்டு, செப்டம்பர் 5 ஆம் நாள் திரு. இராதாகிருஷ்ணன் திருத்தணியில் பிறந்தார். இவரது தந்தையார் திரு. வீராசாமி; தாயார் திருமதி சீதம்மாள். 'கற்க கசடற' என்பதற்கேற்பத் தொடக்கக் கல்வியைத் திருத்தணியிலும் திருப்பதியிலும் சிறப்பாக கற்றார். தம் உயர்கல்வியை வேலூரிலும் சென்னையிலும் கற்றுத் தேர்ந்தார்.

டாக்டர் இராதாகிருஷ்ணன் சென்னை மாநிலக் கல்லூரியில் துணைப் பேராசிரியராகத் தம் பணியைத் தொடங்கினார். பின்னர், அதே கல்லூரியில் தத்துவப் பேராசிரியரானார். தம்முடைய கனிவான தோற்றத்தாலும் கற்பித்தல் திறத்தாலும் மாணவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டார்.

[illegible]ர் ஆசிரியர் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். [illegible]த்துடன் நாட்டு விடுதலையிலும் நாட்டம் கொண்டார். அண்ணல் [கா]ந்தியடிகள், நேரு போன்ற தலைவர்களுடன் இணைந்து நாட்டு [விடு]தலைக்குப் போராடினார். நானிலம் போற்றும் இந்த நல்லாசிரியர் [பெரு]மைய அரசு 'பாரத ரத்னா' விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

---

## பொங்கல்

பெயர்: ஷிவாலி
வகுப்பு: 4அ
ஆசிரியர்: அல்லி

பொங்கல் தமிழர் திருநாள் ஆகும். பொங்கல் நான்கு நாட்களுக்கு கொண்டாடப்படுகிறது. அவை போகிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் மற்றும் காணும் பொங்கல்.

போகி பண்டிகை அன்று வீட்டில் இருக்கும் வேண்டாத பழைய சாமான்களை தெருக்கோடியில் எறிப்பார்கள்.

தை மாதத்தின் முதல் நாளில் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. இந்நாள் தமிழர்கள் சக்கரை மற்றும் வெள்ளை பொங்கல் புதுஅரிசி உபயோகித்து புதுப்பானையில் செய்வார்கள். அப்புறம் பொங்கல், கரும்பு, இஞ்சிக் கொத்து, சக்கரை ஆகியவையுடன் படைப்பார்கள்.

மாட்டுப் பொங்கல் அன்று மாட்டை குளிப்பாட்டி கொம்புக்கு சாயம் பூசி, வீட்டுக்குள் அழைத்து வந்து, பொங்கல் படைப்பார்கள். அப்புறம் சிறுவர்கள் வீடுவீடாக சென்று முதியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்குவார்கள். மற்றும் கிராமத்தில் உள்ள கன்னி பெண்கள் கும்மி அடித்து மகிழ்வார்கள்.

காணும் பொங்கல் அன்று எல்லோரும் உறவினர்களுடன் சுற்றுலா செல்வார்கள்.

---

கைலாஷ் முகுந்த்
4A

## முயற்சி திருவினையாக்கும் ...

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

முயற்சி ஒருவனுக்குச் செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி செய்யாமல் இருந்தால் அவனுக்கு வறுமையைச் சேர்த்து விடும்.

விடாமுயற்சி என்றவுடன் எனக்கு நினைவுக்கு வருவது ஒரு தனி மனிதன் பெயரை விட ஒரு நாட்டின் பெயர் தான் முதலில் நினைவுக்கு வருகிறது. ஜப்பான்! இரண்டாம் உலக யுத்தத்தில் அமெரிக்கா, ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகி நகரத்தில் அணு குண்டு போட்டு நாசமாக்கியது. அந்த போரில் 2லட்சம் மக்கள் இறந்து போனார்கள். எழுபதாவது ஆண்டு நினைவு தினம் கூட சென்ற வருடம் உலகம் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தியது. இந்த இரண்டு நகரங்களிலும் பல இடங்கள் அணு குண்டின் தாக்குதலே தெரியாத அளவிற்கு புது பொலிவோடு உருவாக்க பட்டன.

தாங்கள் தேர்ந்தெடுத்த பாதையில் இடையூறுகள் எத்தனை வந்தாலும். எவ்வளவு முறை தடுக்கி விழுந்தாலும், 'தோல்விகளே வெற்றிக்கு முதல் படி' என்பதில் முழு நம்பிக்கை வைத்து முன்னேறியவர்கள்தான் சாதனையாளர்கள். அதற்கு ஜப்பான் நாடு மிக சரியான சான்று.

விடாமுயற்சியால் வெற்றி பெற்ற பல தனிப்பட்ட மனிதர்களையும் என்னால் உதாரணம் சொல்ல முடியும்.

சேலம் மாவட்ட மாரியப்பன் தங்க வேலுவை நம் அனைவருக்கும் தெரியும். தனது ஐந்தாவது வயதில் பள்ளி செல்கையில் ஏற்பட்ட விபத்தில் முழங்காலுக்குக் கீழே காலை இழந்தார்.

தனது காலை இழந்த நிலையிலும் மாரியப்பனுக்கு விளையாட்டுக்களில் ஆர்வம் இருந்தது. இவரது பள்ளி உடற்பயிற்சி ஆசிரியர் ராஜேந்திரன் பரிந்துரைப்படி இவர் உயரம் தாண்டுவதில் பயிற்சி எடுத்துக் கொண்டார். சென்ற வருடம் மார்ச் மாதம் துனிசியாவில் நடந்த மாற்றுத் திறனாளர் ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்றார்,

எவ்வளவு பெரிய சாதனை அல்லவா இது? வெற்றிப் பாதையைக் கண்டவர்கள் தாங்கள் தோற்றதாக அதிகம் கருதுவதில்லை. தடைக் கல்லைப் படிக்கல்லாகப் பயன்படுத்தி உயர்கிறார்கள்.

நிறைவாக பலமுறைவிழுந்ததாலும் மீண்டும் மீண்டும் எழுந்து நடக்க முயற்சிக்கும் குழந்தையின் தன்னம்பிக்கையைப் பாருங்கள். விடா முயற்சியே விரும்பும் வெற்றியை தரும். முடங்கி கிடந்தால் சிலந்தி கூட நம்மை சிறை பிடிக்க கூடும். மனம் தளராமல் எழுந்து நடந்தால் எரிமலை கூட வழி கொடுக்கும்.

---

## பொருளதிகாரம்:

பொருளதிகாரத்தில் உள்ள 9 இயல்கள்.

1) அகத்திணையியல்

2) புறத்திணையியல்

3) களவியல்

4) கற்பியல்

5) பொருளியல்

6) மெய்ப்பாட்டியல்

7) உவமவியல்

8) செய்யுளியல்

9) மரபியல்





ஹேமா நம்பி, ஜோ டேனிகா இனிகோ, கிருத்திகா வேலப்பன், தரணி செந்தில்குமார்
சிந்து சண்முகம், அஜய் சுனில்குமார், சிவகாமி அண்ணாதுரை(ஆ), சுஜெய் சதர்ஷன், லொரன் சேவியர்

# ஆசிரியை திருமதி சிவகாமி அண்ணாதுரை

லொறன் செவியர்
சிவகாமி
2016 - 2017

## பல்வர் பரம்பரை

275கி.பி. - 897கி.பி. பல்வர் அரசர்கள் தென்னிந்தியாவில் கி.பி. 275 ஆண்டு தொடக்கம் கி.பி. 897 வரை ஆட்சி செய்தார்கள். தென் இந்தியா பல்வர்கள் தென்னிந்தியாவை கைப்பற்றி பல பகுதிகளை சிறப்பாக ஆண்டார்கள். சாளுக்கியர்களும் பாண்டவர்களும் தென்னிந்தியாவின் ஆட்சியை கைப்பற்றுவதற்காக சண்டை பிடித்தார்கள். சங்க கால தென்னிந்தியா கட்டிடக்கலை நிறுவனம்.



நிருத்திகா வேலப்பா
சிவகாமி - 4B
Krithika Velappan
sivagami - 4B

## கரிகாலச் சோழன்

கரிகாலச் சோழர் என்கிற பெருவளத்தான் திருமாவளவன் அவர் இளஞ்சேட்சென்னியின் மகன்; நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்றோர் கரிகாலச் சோழரின் மகன்கள். கரிகாலர், சோழ நாட்டுடன் திராவிட ராஜியங்களை இணைக்க நினைத்தார். அவர் தம் போரில் பயன்படுத்திய தேர்களுக்கு மிகவும் பிரபலமானவர். வெண்ணிப் போரில், பாண்டியர்களையும், சேரர்களையும் கரிகாலச் சோழர் வென்றார். இதனால், மூன்று ராஜியங்களும் அவருடைய கையில் வந்தது. கரிகாலச் சோழர் வடக்கில் இமாலய மலை வரை ஆட்சி செய்தார். இதனால், அவருக்கு வஜ்ர நாட்டு அரசர்கள், மகத நாட்டு அரசர்கள், மற்றும் அவந்தி நாட்டு அரசர்களின் நட்பையும் ஆதரவும் கிடைத்தது. மொத்தத்தில், கரிகாலச் சோழர் என்று சொன்னால், அவருடைய பிரம்மாண்டமான போர்களும் கம்பீரமும் தான் நம் எல்லோருக்கும் ஞாபகம் வரும்.

சோழர்கள் குடவோலை முறையை கண்டுபிடித்தார்கள். குடவோலை முறை என்றால், பனை மரத்தின் காய்ந்த இலை என்கின்ற ஓலையை வைத்து, அவர்களுடைய வாக்கைப் பதிவு செய்தார்கள். வாக்குப் பதிவு செய்த ஓலைகளை ஒரு குடத்தில் வைப்பார்கள் பின்பு, ஒன்று சேர்த்து கணக்கெடுப்பார்கள். இந்த வாக்குப் பதிவு செய்யும் முறை தான் மாறி இன்று நாம் உபயோகப் படுத்தும் பதிவு செய்யும் முறையாக வளர்ந்துள்ளது.

இறுதியாக, சோழ நாட்டு மன்னர்களும், மக்களும் தமிழ் நாட்டையும், இந்த உலகத்தையும் நல்ல விதத்தில் கொண்டுவர முயற்சி செய்தார்.

இந்தப் படம் கரிகாலச் சோழரையும், அரசியையும் காட்ட உள்ளது ↓




## பல்லவர்கள்:

ஹேமா நம்பி
4B - சிவகாமி அ.


பல்லவர் தென்னிந்தியாவில் களப்பிரர்கள் வீழ்ச்சிக்குப் பிறகு கி.பி. 250 முதல் கி.பி. 850 வரை சுமார் அறுநூற்று ஐம்பது ஆண்டுகள் தமிழகத்தில் நிலைத்து ஆட்சி புரிந்தவர்கள். பல்லவர்கள் காலத்திலேயே தமிழ் நாட்டில் இந்து சமய மறுமலர்ச்சியும், சிற்பம், இசை, ஓவியம், கட்டிடக்கலை முதலிய கலை வளர்ச்சியும் இலக்கியமும் அவர்கள் காலத்தில் உச்ச நிலையடைந்தன. கலை ஆர்வலர்களான பல்லவர்கள் எல்லாக் கலைகளிலும் ஒருமித்த ஆர்வம் காட்டினார்கள். பல்லவர்கள் காலத்தில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள் பற்பல. அவற்றுள் முதன்மையானது சங்க கால மன்னர்களுக்குப் பின் மக்களின் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் பல்லவர்கள் காட்டிய அக்கறையாகும். பல பேரேரிகளையும், குளங்களையும், கிணறுகளையும், ஆற்று வாய்க்கால்களையும் வெட்டியவர்கள் பல்லவர்கள். அவர்கள் காலத்தில் வரிச்சுமை அதற்கு முன்பு இருந்ததைக் காட்டிலும் கூடுதலாகவே அமைந்தது. அரசியல் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு அவர்கள் வெளியிட்ட பட்டயங்கள் துணை புரிகின்றன. பல்லவ மன்னர்கள் தொடக்க காலத்தில் (250 - 575) வெளியிட்ட பட்டயங்கள் பிராகிருத மொழியிலும், இடைக்காலத்தில் (575 - 730) வெளியிட்ட பட்டயங்கள் சமஸ்கிருத மொழியிலும். பிற்காலத்தில் (731 - 890) வெளியிட்ட பட்டயங்கள் கிரந்த தமிழிலும் எழுதப்பட்டுள்ளன.




பெயர்: ஈஸ்வர்யா
ஆசிரியர்: திருமதி. சிவகாமி
வகுப்பு: 4ஆ


பாண்டியர்கள் பழந்தமிழ் நாட்டை ஆண்ட வேந்தர்களுள் ஒருவராவர். மற்ற இரு வேந்தர்கள் சேரர்களும், சோழர்களும் ஆவர். பாண்டியர்கள் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் தற்போதைய கேரளத்தின் ஒருபகுதி ஆகியவற்றை ஆட்சி செய்தனர். இந்தியாவில் எந்த அரு மன்னர் குலத்துக்கும் இல்லாத நீடிய வரலாறு பாண்டியர்களுக்கு உண்டு. தமிழகத்தின் தென் பகுதியில் பாண்டிய நாடு அமைந்திருந்தது. மேற்கே சேர நாடும், மலை நாடும்; கிழக்கே கடல், வடக்கே சோழ நாடும், கொங்கு நாடும்; தெற்கே கடலும் குமரிமுனை இதன் எல்லையாகவும் இருந்தன. பாண்டிய நாடு சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையைப் பெற்றிருந்தது. புலமை நலம் சான்றமுடி மன்னர்களும் இருந்தனர். ஆண், பெண் இருபாலரும் கல்வி கற்றனர். பாண்டியரின் ஆட்சிக்கு உற்ற துணையாக இருந்தவர்கள் அமைச்சர்கள். அடுத்த நிலையில் அரசியல் அதிகாரிகள், படைத் தலைவர்கள் இருந்தனர். யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை என்ற நால்வகைப் படைகளினையும் வைத்திருந்தனர் பாண்டியர். கொற்கை, தொண்டி துறைமுகங்களில் வெளிநாட்டுக் குதிரைகள் ஆண்டுதோறும் வந்திறங்கியது.



அஜய் சுனில்குமார் – 4ஆ
சிவகாமி அண்ணாதுரை

## பாண்டியர்கள்

பாண்டிய அரசு தென் இந்தியாவில் மூன்று பழமையான அரசாட்சியில் ஒன்
றது. பாண்டிய இராச்சியம் கி.மு மூன்றாம் நூற்றாண்டின் போது
வாக்கப்பட்டது. மதுரை (கி.மு 3-ஆம் நூற்றாண்டில் – 1345 ஆண்டுகளில்) மற்று
நல்வேலி (1345–1650 ஆண்டுகளில்) அவர்களுடைய தலைநகரங்களாக
ந்தன. அவர்கள் கடல்களில் மீன்பிடித்தல் மற்றும் கடல் வழி பயணத்தில்
னர்கள் ஆவர். தெற்கில் பல இடங்களில் முத்து குளித்தல் தொழில்
டியர்கள் கட்டுப்பாட்டில் இருந்தது. இதனால் உலகின் சிறந்த
க்கள் இவர்களால் கிடைக்கப்பெற்றன. அவர்கள் கொடியில் மீன் சி
ந்திருந்தது. பாண்டியர்கள் ரோமப் பேரரசு வரை வர்த்தகம் மூ
ணைப்புகளை உருவாக்கியிருந்தனர்.



துரை பாண்டியரின் தலைநகரமாக
ந்தபோது, இரண்டாம் நெடுஞ்செழியன் தனது
மீனாட்சியின் பெயரால் மீனாட்சி அம்மன்
லை கட்டினான். மீனாட்சி தனது
தயாரிடம் இருந்து அரசை பெற்று வெற்றிகரமாக
நடத்தி மதுரைக்கு செல்வம் மற்றும்
ப்பினை கொண்டுவந்தாள். மதுரை மாநகர்
லை சுற்றி கட்டப்பட்டது, அது அப்படியே இன்றும் உள்ள

அவர்கள் பல்லவர்கள், சோழர்கள் மற்றும் ஹொய்சலர்கள்
ன் எப்போதும் முரண்பாட்டுடன் இருந்தனர். ஒரு பெரிய
ரசாக ஆகும்முன் அவர்கள் வளர்ச்சி களப்பிரர்களால்
கப்பட்டு வந்தது. பின்னர் ஒரு பெரும் பேரரசாக
ர்ந்த போது சோழர்களால் மட்டுமே ஆளப்பட முடிந்த
ர்கள் மீண்டும் 12-ம் நூற்றாண்டில் ஆட்சிக்கு வந்தனர். இ
பலமிய தில்லி சுல்தான்களின் படையெடுப்பின் போது
டியர்கள் சாம்ராஜ்யம் முடிவுக்கு வந்தது.

சிந்து சண்முகம்
வகுப்பு: 4 ஆ
ஆசிரியர்: சிவகாமி
2016 - 2017

## சேரர்கள்


பண்டைத் தமிழகத்தில் புகழ் பெற்று விளங்கிய மூன்று நாடுகளுள் ஒன்றாகத் தமிழகத்தின் மேற்குக் கரையில் அமைந்திருந்த சேர நாட்டை ஆண்ட அரசவழியினரைச் சேர்ந்தவர்களே சேரர்கள் எனப்படுகிறார்கள்.
சேரநாடு அக்காலத் தமிழகத்தின் மேற்குக் கரைப் பகுதிகளை உள்ளடக்கியிருந்தது. இன்றைய தமிழகத்தின் பெரும்பாலும் நாட்டுப் பகுதியே அக்கால சேர நாடாகும். மேலும் வேணாடு, குட்டநாடு, தென்பாண்டி நாடு ஆகிய கொடுந்தமிழ் மண்டலங்களையும் கருவூரைத் தலைநகராகக்கொண்டு சேரன் ஆண்டான். சேரர்களின் கொடி வில் கொடி ஆகும். வில்லால் அம்பு எய்வதில் சேரர்கள் சிறந்தவர்களாக இருந்தனர்.

சேரநாடு வேழமுடைத்து, பாண்டி நாடு முத்துடைத்து, சோழநாடு சோறுடைத்து, தொண்டை நாடு சான்றோருடைத்து என்பது ஔவையின் பாக்கு. இதிலிருந்து நிலவளமாகிய நெல்லும், மலை வளமாகிய யானையும், கடல் வளமாகிய முத்தும், மக்கள் வளமாகிய சான்றோரும், தமிழகத்தின் செல்வங்கள் என்ற உண்மையை உணரலாம்.


சேர நாட்டில் நிறைய மலைகள் உண்டு. சிறு, சிறு குன்றுகளும், இருந்தன் நடுவிலுள்ள, பூமியில் சிறு சிறு காடுகளும் செழிப்பான நல்ல பூமி அதிகமாகவும் இருக்கும். இவற்றில் அகில், சந்தனமரங்களும், மற்றும், மிருகம் என்ற யானைகளும் (வேழம்) இருக்கும்.

இப்படி வளமிக்க சேரநாடு, கிரேக்க ரோமனிய மற்றும் மேற்காகிய நாடுகளோடு சிறப்பாக வணிகம் செய்து வந்தது.

இரண்டாவது நூற்றாண்டுக்குப்பிறகு, இந்த வணிகம் நலிவடைந்து, அதுவே சேரர்களின் ஆட்சியின் முடிவுக்கு காரணமாக இருந்தது.



## சேர மன்னர்கள்



பெயர்: தரணி செந்தில்குமார்
ஆசிரியர்: சிவகாமி அண்ணாதுரை
வகுப்பு: 4 ஆ

தமிழ்நாட்டில் புகழ் பெற்று இருந்த மூன்று நாடுகளில் (சேர, சோழ, பாண்டியர்) ஒன்று சேரநாடு. கருவூரையும், தொண்டியையும் தலைநகராக கொண்டு தமிழ்நாட்டின் மேற்குப் பகுதியான சேர நாட்டை சேர மன்னர்கள் ஆண்டனர். சேர மன்னர்களின் சின்னம், கொடி அம்பு ஆகும். சேரர்கள் அம்பு எய்துவதில் மிகவும் திறமைசாலிகள்.

சேர மன்னர்களில் முக்கியமானவர்கள் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், சேரன் செங்குட்டுவன் ஆவர். சேரமன்னர்கள் அடிக்கடி சோழர்களுடனும், பாண்டியர்களுடனும் போர் செய்தனர். சேரர்கள் பல ஐரோப்பிய நாடுகளுடன் குறிப்பாக ரோமாபுரியுடன் வணிகத்தில் ஈடுபட்டனர்.




முசிறி சேர நாட்டின் முக்கிய துறைமுகம் ஆகும். கேரளாவி
சில பகுதிகளும் சேர நாட்டில் ஒரு பகுதியாக இருந்தது.

ஜோ டேனிகா இனியோ
திருமதி சிவகாமி
வகுப்பு 4ஆ

## சோழ நாடு


ராஜ ராஜ சோழனின் ஆட்சி பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது. வலுவான சோழ சாம்ராஜ்யத்தைக் கட்டமைத்த வராகக் கொண்டாடப்படும். அதே சமயம், மக்கள் நலன் மீது அக்கறை செலுத்திய பேரரசராகவும் ராஜ ராஜன் நினைவு கூறப்படுகிறார்.

கேரளப் போரில் ஆரம்பித்து இலங்கை, மாலத்தீவு வரை ராஜ ராஜனின் படைகள் முன்னேறி வெற்றி கொண்டன. ஆனால் எல்லைகளை விரிவாக்கிக் கொள்வதற்கு மட்டும் தன் அதிகாரத்தையும், படை வலிமையையும் அவர் பயன்படுத்தவில்லை. போர் வெற்றிகள் மூலம் கிடைத்த செல்வத்தைக் கொண்டு, மக்கள் வங்கி ஒன்றை உருவாக்கினார். எளியோருக்குக் கடன் வழங்கினார்.

மற்றும், இவர் ஆட்சியின் தஞ்சாவூரிலுள்ள பெருவுடையார் கோவில் கட்டப்பட்டது. இந்த கோவில் சிவன் கடவுளுக்கு வழிபாடு செலுத்தும் இடமாக உள்ளது. தஞ்சாவூர் பெரிய கோவிலின் கலைவண்ணம் சோழ நாட்டின் கட்டட சிறப்பை வெளிப்படுத்தும் விதமாக உள்ளது.

ராஜ ராஜன் ஆட்சிக் காலத்தில் வரி வசூல் மட்டுமல்ல, மக்கள் நலப் பணிகளும் அதிகம். மக்களின் வாழ்க்கை நிலை உயர்ந்தது. காலமெல்லாம் அவர் புகழ்பாடும் தஞ்சை பெரிய கோவில் கட்டப்பட்டது. கலை, ஆட்சிமுறை, சமயம், இலக்கியம், பொருளாதாரம், பண்பாடு என்று ராஜ ராஜனால் செழிப்படைந்த துறைகள் ஏராளம். அந்த வகையில், தென்னிந்தியாவில் மட்டுமல்ல, இந்திய வரலாற்றிலும் கூட ராஜ ராஜனின் ஆட்சி பொற்காலம் தான்.








குரு குருபரன்(ஆ), ஸ்ரீராம் ஸ்ரீனிவாசன், ஆன்று சவேரியர், கவின் கோவிந்தராசன்
ஸ்ருதி, ரம்யா, வரதராஜன்(ஆ), அபர்ணா

# நிலை 5அ

## ஆசிரியை திருமதி லலிதா சண்முகவேல்

அர்ச்சனா அண்ணாதுரை
வகுப்பு: 5அ
ஆசிரியர்: திருமதி லலிதா சண்முகவேல்

# ரோமன் காலோசியம்

ரோமன் காலோசியம் சக்கரவர்த்தி வெஸ்பாஸியன் என்பவரால் ரோமன் மக்களுக்காக பரிசாக கட்டி வழங்கப்பட்டது. அப்போது இது Flavian கலையரங்கம் என்று அழைக்கப்பட்டது. ஆனால் சக்கரவர்த்தி வெஸ்பாஸியனின் ஆட்சி காலத்திற்கு பிறகு அவரது மகன் அதை கலோசியமாக மாற்றினார். அதில் ஆயிரக்கணக்கான விளையாட்டுகள் நடத்தப்பட்டது. ஆனால் நீங்கள் நினைப்பது போன்ற விளையாட்டுகள் அல்ல! இந்த வீரவிளையாட்டுகள் நூறு நாட்களுக்கு தொடர்ந்து நடக்கும். இவற்றுள் வீரர்களுக்கு இடையேயான பலபரீட்சை விளையாட்டுகளும் பயங்கரமான மிருகங்களுடன் மோதும் விளையாட்டுகளும் அடங்கும்.

இந்த இடம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருப்பதுடன் மிக முக்கியமான சுற்றுலா தலமாகவும் விளங்குகிறது. இது ரோம் நாட்டின் அடையாள சின்னமாக விளங்குகிறது.



காலோசியம் கற்களால் கட்டப்பட்டது இடையிடையே சன்னல்கள் செதுக்கப்பட்ட கட்டடம் ஆகும். ஆனால் இயற்கை காரணங்களால் இந்த காலோசியம் முதல் பகுதி அழிந்து விட்டது. இதனை ரோமன் மக்கள் புதுப்பிக்க நினைத்து முயன்று வருகிறார்கள். ஆனால் இதன் கட்டமைப்புக்கு நிகராக கட்டுவதற்கு அவர்களால் முடியாததால் தயங்குகிறார்கள்

கான்கிரீட்டை பயன்படுத்தி ஒரு சில பகுதிகளை புதுப்பித்தாலும் இந்த 2017ல் ஒரு சிறிய பகுதியே புதுப்பிக்கப்பட்டுள்ளது. ரோம் நகர மக்கள் இந்த அதிசயக்கத்தக்க வரலாற்று நினைவு சின்னத்தை போற்றி பாதுகாக்க நம்பிக்கையோடு முயற்சித்து வருகிறார்கள்.

அனுஸ்ரீ ஜெயக்குமார்
Anushree Jeyakumar
ஆசிரியர்: லலிதா
வகுப்பு: 5அ

## சிலம்பாட்டம்

சிலம்பம் என்பது ஒரு தடியடி. இது தமிழர்களின் தற்காப்புக்கலை. இந்த வீர விளையாட்டை கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர். இது தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் எனப் பல கூறுகளைக் கொண்டது. இதில் எதிராளி வீசும் கம்பினைத்தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்பினால் தொடுதல் போன்றன அடிப்படை. இதைக் கற்றுக் கொள்ள குறைந்தது ஆறு மாதம் ஆகும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே இந்தப் போட்டியில் ஆடுவர். தற்காலத்தில் ஆண்கள் பெண்கள் இருவரும் கற்று விளையாடி வருகின்றனர். திருவிழா, கோவில் விழாக்கள் மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம் பெறும். இக்கலை திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களில் பெருமளவு நடக்கிறது.



# நிலை 5ஆ

## ஆசிரியை திருமதி சித்ரா பாஸ்கர்

### லில் வேய்ன்

லில் வேய்ன் என தெரியப்பட்ட பிரபலமான ராப் பாடகரின் உண்மையான பெயர் டுவைன் மைக்கேல் கார்ட்டர் ஜூனியர். அவர் சிறிய வயதிலிருந்து தனது தாயாரால் வளர்க்கப்பட்டார். டுவைனின் தந்தையார் அவரை, இரண்டு வயதிலேயே கைவிட்டுச் சென்றார். அவரின் தாயார் டுவைனுக்கு சிறிய வயதிலிருந்தே கடின உழைப்பைப்பற்றி அறிவுறுத்தினார். டுவைன் சிறிய வயதிலிருந்து புத்திசாலி. அவர் லஃபாயட் ஆரம்ப பாடசாலையின் 'Gifted Program"ல் சேர்ந்தார். அதற்குப்பிறகு அவர் எபிரம்சன் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்றார். இரண்டு பள்ளிகளிலும் டுவைன் தனது திறமையை நன்றாக வெளிக் காட்டினார். அவருடைய எட்டு வயசிலேயே அவரின் முதலாவது ராப் பாட்டை உருவாக்கினார். 1991ல் லில் வேய்ன் காஷ் மணி (cash money) குழுவை சேர்ந்தார். அந்த குழுவில் அவர்தான் இளையவர். 1996ல் கடின உழைப்புடன் "Hot Boys" என்ற "Hip Hop" குழுவில் சேர்ந்தார். அதிலிருந்து அவர் ஒரு மிக விரும்பப்பட்ட ராப் பாடகராக ஆனார். அவர் பத்தொன்பது வருடங்களில் நாற்பது இசைத்தட்டுக்களும் "mixtapes"ம் படைத்தார். அவருக்கு பல கோடிக்கணக்கான ரசிகர்கள் உண்டு. அவர் மிகவும் எளிய நிலையில் இருந்து, கடின உழைப்புடன் ஒரு பிரபலமான ராப் பாடகராக உருவாகினார்.

ஆசிரியர்: சித்ரா பாஸ்கரன்
வகுப்4: 5B

### இந்தியாவின் இசைக்குயில்

எம். எஸ் சுப்புலட்சுமி செப்டெம்பர் 16, 1916 ஆம் ஆண்டில் பிறந்து, டிசம்பர் 11, 2004ஆம் ஆண்டில் இறந்தார். பத்து வயதிலேயே இவருடைய முதல் பாடல் வெளியானது. இது தவிர, இவர் சில திரைப்படங்களிலும் நடித்திருக்கிறார்.

**இவர் பெற்ற விருதுகள்:**

- பத்ம பூசண் - 1954
- சங்கீத நாடக அகாதமி விருது - 1956
- சங்கீத கலாநிதி - 1968
- இசைப் பேரறிஞர் விருது - 1970
- மக்சேசே பரிசு - 1974
- பத்ம விபூசண் - 1975
- சங்கீத கலாசிகாமணி வருது - 1975
- காளிதாஸ் சம்மன் விருது - 1988-1989
- நாட்டு ஒருமைப்பாட்டிற்கான இந்திரா காந்தி விருது - 1990
- பாரத ரத்னா - 1998

அவர் விருதுகளுடன் அவருக்கு கிடைத்த பரிசுத்தொகைகளை முழுவதும் நல்ல காரியங்களுக்கு தானம் செய்தார். அவருக்கு பெருமை சேர்க்கும் விதமாக திருமலை திருப்பதி ஆலயத்தில் அவர் பாடிய சுப்ரபாதம் இன்றும் தினமும் ஒலிக்கிறது. தேவதாசி குடும்பத்தில் பிறந்து இத்தனை சாதனைகளை படைத்த எம். எஸ் சுப்புலட்சுமி அவர்கள் விடாமுயற்சிக்கு ஓர் எடுத்துக்காட்டாக இன்றும் நம்மிடையே வாழ்கிறார்.

# நிலை 6அ

## ஆசிரியை திருமதி ரம்யா வரதராஜன்

### எம். நைட் ஷியாமளன்

உயிர்ப்பான சினிமாவை விரும்பும் எல்லாருக்கும் இவர் மிகவும் பரிட்சயமானவர். உலகின் தலைசிறந்த டைரக்டர்களில் ஒருவராக கருதப்படுகிறார். இவர் இயக்கிய The Sixth Sense என்ற படத்தை யாரும் மறக்க மாட்டார்கள்.

இவர் பாண்டிச்சேரியில் ஆகஸ்ட் 6, 1970-ல் பிறந்தார். அமெரிக்காவில் உள்ள பிலடெல்பியாவின் ஒரு புறநகரத்தில் வளர்ந்தார். இவரது பெற்றோர்கள் மருத்துவர்கள். ஆனால் இவருக்கு சினிமாத்துறை மீது ஒரு மிகுந்த ஈடுபாடு உண்டு. அப்பா இவரை மருத்துவராக்க ஆசைப்பட்டாலும் இவரது அம்மாவின் ஊக்கத்தில் சினிமா துறையை பயின்றார். இவர் கல்லூரி காலத்திலேயே வெளியிட்ட Praying With Anger என்ற படம் விமர்சகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

இவரது The Sixth Sense படத்தை யாரும் மறக்க மாட்டார்கள். முக்கியமாக அந்த படத்தின் முடிவை யாரும் மறக்க மாட்டார்கள். இது Bruce Willisக்கு ஒரு மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது. சுமார் 50 மில்லியன் டாலர்கள் செலவில் தயாரிக்கப்பட்ட இந்தப் படம் U.S. Box Officeல் மாத்திரம் 300 மில்லியன் டாலர்கள் வசூலைத்தது.

பின் வெளிவந்த Signs என்ற படத்தையும் யாரும் மறக்க மாட்டார்கள். Steven Spielberg, Roland Emmerich போன்ற டைரக்டர்கள் பல நூறு மில்லியன்கள் செலவு செய்து காட்டும் கதையை வெறும் 4 நடிகர்கள், 30 மில்லியன் டாலர் செலவில் சீராக ஓடும் திரைக்கதை, உணர்வு பூர்வமான வசனங்கள் என்று வசூல் சாதனையோடு விமர்சகர்களின் பெருவரவேற்பையும் பெற்றது.

அண்மையில் இவர் இயக்கி வெளிவந்த The Last Airbender திரைப்படம் விமர்சகர்கள் மத்தியில் எதிர் மறையான விமர்சனத்தையும் வசூலில் படுதோல்வியையும் சந்தித்துள்ளது. இவர் தன்னுடன் கல்லூரியில் படித்த Bhavna Vaswani என்பவரை மணந்துள்ளார். இவருக்கு 2 மகள்கள் உண்டு. இவரது மனைவியும் ஒரு மருத்துவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்: ரம்யா வரதராஜன்
வகுப்பு: 6அ

### சுந்தர் பிச்சை

தேடு |

தமிழ் மக்களின் பங்களிப்பும், அவர்களின் செல்வாக்கும், பலதுறைகளில் பதித்த முத்திரையும் எல்லைகளை தாண்டி பயணிக்கிறது. அதற்கு முக்கிய உதாரணமாக சென்னையில் பிறந்து, மேற்கத்திய நாடான அமெரிக்காவில் கூகுள் நிறுவனத்தின் தலைவராக பணியாற்றும் சுந்தர் பிச்சை அவர்களை கூறலாம். கூகுள் நிறுவனத்தின் தயாரிப்பு துறை தலைவராக இருந்த அவரின் கூகுள் தலைமை பொறுப்பு ஆகஸ்ட் 10, 2015 அன்று அறிவிக்கப் பட்டது.

சுந்தர் பிச்சை பணக்கார குடும்பத்தில் பிறந்தவர் அல்ல. அவர் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்து இரண்டு அறைகள் கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பில் அவர் அப்பா, அம்மா, மற்றும் தம்பியுடன் வசித்து வந்தார். இளம் வயதிலேயே கணிதத்திலும், கணினி அறிவியலிலும் மிகுந்த ஈடுபாடு காட்டி வந்தார். அவர் உலோகவியல், பொறியியல் துறையில் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி கல்லூரியில் பட்டம் பெற்றார். அதில் சிறந்தமுறையில் தேர்வு பெற்றதன் மூலம் அமெரிக்காவின் ஸ்டான்போர்டு பல்கலைகழகத்தில் நிதியுதவியுடன் படித்து முதுகலை பட்டம் பெற்றார். அத்துடன் நில்லாமல் வணிகவியலில் முதுகலை பட்டத்தையும், பெயர்பெற்ற பென்சில்வேனியா வார்ட்டன் பல்கலை கழகத்தில் பெற்றார்

சுந்தர் பிச்சை தன்னை ஒரு சிறந்த கண்டுபிடிப்பாளர் புதுமைகளை படைப்பவர் என்பதை கூகுள் நிறுவனத்தில வேலைக்கு சேர்ந்த உடன் நிரூபிக்க செய்தார். கூகுள் குரோம்-ஐ கண்டுபிடித்ததில் பெரும் பங்கு அவருடையதாகும். மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் பிங் உபயோகத்திற்கு வந்தபோது, கூகுளுக்கும் ஒரு வலை தேடல் வேண்டும் என்று கூகுள் குரோமை கொண்டு வந்தார். இன்று இது பெரும்பான்மையான மக்களால் உபயோகிக்கப் படுகிறது. 2013-ல் அவர் ஆண்ட்ராய்ட் துறைக்கு தலைமை ஏற்றதிலிருந்து அவர் வளர்ச்சியும் உயர்ந்து கொண்டே இருக்கிறது.

இவ்வாறு அவர் உலக அரங்கில் உயர்ந்தாலும், அவர் தமது தமிழ் மரபை கைவிடாமல் பெருமையுடன் "நான் தமிழன், என் மொழி தமிழ்" என்று பொது மேடைகளில் அறிவிக்க தயங்கவில்லை. இவர் சிறந்த எடுத்துகாட்டாக விளங்கும் தமிழர்களில் ஒருவராக திகழ்கிறார். இவரது சேவையும் புகழும் எல்லை கடந்து பரவி தமிழராய் நம்மை பெருமைபட வைத்துள்ளது.

# நிலை 6ஆ

## ஆசிரியர் திரு குரு குருபரன்

கல்வி

அன்று சேவியர்

கல்வி மிகவும் முக்கியமானது. கல்வியின் முக்கிய பகுதி நாம் கற்கப்போகும் பல்கலைக்கழகம் ஆகும். மேற்படிப்பு கற்க நாம் நல்ல பல்கலைக்கழகம் செல்ல வேண்டும். மேலும் பாடசாலைக்கு வெளிப்புற செயற்பாடுகளில் கலந்து கொள்வது அவசியம்.

நாம் பாடசாலையில் எடுக்கும் மதிப்பெண்கள் நாம் செல்லப்போகும் கல்லூரியை நிர்னயிக்கும் நல்ல மதிப்பெண்கள் எடுக்க நாம் ஒவ்வொரு நாளும் படிக்க வேண்டும், வீட்டு வேலையை எல்லா பரச்சனைகளிள் நடுவிலும் நன்றாக செய்ய வேண்டும். ஏதவது விளக்கம் தேவைப்பட்டால் ஆசிரியர் அல்லது பெற்றோரின் உதவி பெற வேண்டும்.

கல்லூரி செல்வதற்கு எசு. ஏ. டி. தேர்வில் அதிகமான புள்ளிகள் பெறுவது முக்கியமாகும். இந்தத் தேர்வு தேசம் முழுவதும் நடைபெறுவதாகும். இந்தத் தேர்வினை எத்தனை தடவையும் எடுக்கலாம் தேர்வுகளில் கிடைக்கும் புள்ளிகளில் சிறந்து மட்டும் தெரிவு செய்யலாம். இரண்டு விதமான் தேர்வுகள் இருந்தாலும் இரண்டு தேர்வுகளையும் எடுக்கத் தேவையில்லை. உங்களுக்கு எதைச் சிறப்பாக் செய்ய முடியுமோ அதை மட்டும் எடுத்தால் போதுமானது. ஒரு தரம் 11-ஆவது அல்லது 12-ஆவது படிக்கும் போது இந்தப்பிரிட்சை எடுக்க வேண்டும். இது கடினமான தேர்வு ஆனதால் ஆயத்தப்படுத்த வேண்டும். பரிட்சையில் ஒருபகுதியி நன்றாக செய்யாவிடடால் பரிட்சைப் புள்ளிகளுடன் சேர்த்து இனைக்கலாம்.

வெளிப்புற செய்கைகள் விளையாட்டு, இசை, தொண்டர் சேவை போன்றவற்றில் இணைந்து எம்மால் முடிந்ததைச் செய்ய வேண்டும். இவை எல்லாம் நல்ல கல்லூரி கிடப்பதற்கு முக்கியமாகும். வெளிப்புற நடவடிக்கைகளுக்கு மேலதிக புள்ளிகள் கிடைக்கும். இவை போன்ற வெளிப்புற நடவடிக்க்கைகளை சிறு வயதில் இருந்தே செய்வது சிறப்பாக அமையும். எமக்கு விருப்பமான வெளிப்புற நடவடிக்கைகளை செய்வது முக்கியமாகும்.கல்லூரி விண்ணப்பதில் போடுவதற்காக மட்டுமே வெளிப்புற நடவடிக்க்களை செய்யக் கூடாது.

கல்லூரி விண்ணப்பம் நிரப்பும் பொழுது விருப்பமான இடத்தைத் தெரிவு செய்வ தோடு, பொருளாதாரத்தில் உங்களுக்கு ஏற்கக் கூடியதாக இருக்க வேண்டும். இதனால் கல்வி கற்று முடிக்கும் பொழுது கடன் அதிகமாகி இருக்காது.

# <u>மதுரை மாநகரம்</u>

மாணவர்- சிரிராம் – வகுப்பு 6ஆ – ஆசிரியர் – குரு குருபரன்

மதுரை தென் தமிழ்நாட்டில் உள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க முக்கிய நகரம். இந்திய துணைக்கண்டத்தில் தொன்மையான வரலாற்றைக் கொண்ட மதுரை நகரம் சுமார் 2500 ஆண்டுகள் பழைமையான, தொடர்ந்து மக்கள் வசித்து வரும் உலகின் சில நகரங்களுள் ஒன்று. கோயில்களின் நகரம் என அழைக்கப்படும் மதுரை வைகை நதிக்கரையில் அமைந்துள்ளது. சங்க காலத்தில் மிகவும் பெருமை வாய்ந்த நகரமாக விளங்கிய மதுரை இன்றும் சீருடனும் சிறப்புடனும் கம்பீரமாக வளர்ந்து வருகிறது. புகழ் பெற்ற சுற்றுலாத் தலமான மதுரையில் இன்று சங்க கால சிறப்புகளையும், தற்கால நாகரீக முன்னேற்றத்தையும் ஒருங்கே காணலாம்.

**<u>மதுரையின் வரலாறு</u>:**

மதுரை மாநகர் முற்காலத்தில் கடம்பவனம் என்ற வனப்பகுதியாக இருந்தது. அங்கு கடம்ப மரத்தின் கீழ் இருந்த சுயம்பு லிங்கத்தை இந்திரன் வழிபட்டுக் கொண்டிருந்தான். இந்த செய்தி குலசேகரபாண்டிய மன்னனுக்கு எட்டியது. லிங்கத்தைச் சுற்றி கோயில் (இன்றைய மீனாட்சி அம்மன் கோயில்) மற்றும் கோயிலைச் சுற்றி தாமரை வடிவிலான மதுரை நகரத்தையும் குலசேகர பாண்டியன் கட்டினான். மதுரை மாநகரை சிவபெருமான் தேவாமிர்தத்தை தெளித்து அருள் புரிந்ததால், அந்நகரம் மதுராபுரி என்ற பெயராலும் அழைக்கப்பட்டது.

பண்டைக் காலத்தில் மதுரை, பாண்டிய நாட்டின் தலைநகரமாக விளங்கியது. கி.பி 10-ஆம் நூற்றாண்டில் சோழ மன்னர்களால் கைப்பற்றப்பட்ட மதுரை நகரம் மீண்டும் பாண்டியர்களால் மீட்கப்பட்டது. பின்னர் மொகலாய மன்னர்களால் சூறையாடப்பட்ட இந்நகரம், பல்வேறு செல்வங்களை இழந்தது. பின்னர் வந்த விஜயநகரப் பேரரசர் காலத்திலும், நாயக்க மன்னர்கள் காலத்திலும் மதுரை மீண்டும் பொலிவு பெற்றது. "திருமலை நாயக்கர்" மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களில் முக்கியமானவர். அவரது காலத்தில் மதுரை கட்டிடக் கலையிலும், சிற்பக்கலையிலும் உயற்வு பெற்றது.

மதுரை பற்றிய குறிப்புகள் இராமாயணம், கௌடில்யம், அர்த்தசாத்திரம் போன்ற இதிகாசங்களில் காணக்கிடைக்கின்றன. தமிழின் பழமையான இலக்கியங்களான நற்றிணை, திருமுருகாற்றுப்படை, மதுரைக்காஞ்சி, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, புறநானூறு, அகநானூறு ஆகிய நூல்களில் மதுரை குறித்து கூறப்பட்டுள்ளது. *ஓங்குசீர் மதுரை, மதுரை மூதூர் மாநகர், தென்தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை, மாண்புடை மரபின் மதுரை, வானவர் உறையும் மதுரை, பதிவெழுவறியாப் பண்பு மேம்பட்ட மதுரை மூதூர்* எனப் பல்வேறு அடைமொழிகளால் தான் எழுதிய சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளும் மதுரையைச் சிறப்பிக்கிறார். மெகஸ்தனிஸ், மார்கோபோலோ ஆகியோரின் பயணக் கட்டுரையிலும் மதுரையை பற்றிய குறிப்புகள் உள்ளன.

**கலை சிறப்புகள்**:

உலகப் புகழ் பெற்ற மீனாட்சி அம்மன் கோயில் மதுரையின் சிற்பக்கலை மற்றும் கட்டிடக்கலைச் சிறப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு. 64000 சதுர அடி பரப்பளவும் நான்கு பிரமாண்டமான கோபுரங்களும், பல சிறிய கோபுரங்களும், மண்டபங்களும் கொண்டது இக்கோயில். கோயிலில் பார்க்கும் இடமெல்லாம் நுண்ணிய வேலைப்பாடுடைய முழு உருவச் சிற்பங்கள் வியக்கவைக்கும். கோயிலின் உள்ளே அமைந்துள்ள ஆயிரம்கால் மண்டபத்திலும் எழில் மிகு சிலைகள் நிறைந்துள்ளன. 17ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட திருமலை நாயக்கர் மண்டபம் மொகலாய, இத்தாலிய கலை நயத்தை உள்ளடக்கியது.



நான் 2014ம் வருடம் மதுரை சென்ற போது மீனாட்சி அம்மன் கோயிலையும், திருமலை நாயக்கர் மண்டபத்தையும் பார்த்து வியந்தேன்.

## திருவிழாக்கள்



சித்திரைத் திருவிழா மதுரையில் நடைபெறும் மிக முக்கிய திருவிழா. ஒவ்வொரு வருடம் சித்திரை மாதம் நடக்கும் இந்த விழா, அழகர் ஊர்வலம், அழகர் ஆற்றில் இறங்குதல், எதிர் சேவை எனப் பல கொண்டாட்டங்கள் நிறைந்தது.

தெப்பத் திருவிழா, தேர்த் திருவிழா, பொங்கல், ஜல்லிக்கட்டு, ஆவணித் திருவிழா என்று மக்கள் பல திருவிழாக்களை கொண்டாடுகிறார்கள். மதுரையை சுற்றியுள்ள கிராமங்களில் மண்மணம் மாறாமல் பல பண்டிகைகள் கொண்டாடப்படுகின்றன.

## இன்றைய மதுரை:

இன்று மதுரை தமிழ் நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலமாக விளங்குகிறது. வரலாற்று அறிஞர்களும், தொல்பொருள் ஆய்வாளர்களும், சமய ஆராய்ச்சியாளர்களும் மதுரை மற்றும் அதை சுற்றியுள்ள கீழடி, சமணமலை, அழகர்கோவில் போன்ற இடங்களில் பல ஆய்வுகள் செய்து வருகின்றனர். வேறு மாநிலத்தவரும், வெளிநாட்டினரும் தமிழ்ப் பண்பாட்டையும், கலைச்சிறப்புகளையும் காண மதுரைக்கு வருகின்றனர்.

"வந்தாரை வாழவைக்கும்" மதுரை மக்கள் அனைவரையும் "அண்ணே", "அம்மா", "அக்கா", "தம்பி" என்றே அன்புடன் அழைக்கின்றனர். எனக்கு அது மிகவும் பிடித்திருந்தது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரைக்கு - வேண்டாம் அறிமுகம் என்பதை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ்க்குடியினர் அறிவர். எனினும், மதுரை மாநகரின் பெருமைகளையும், முக்கியச் சுற்றுலா அம்சங்களையும் சுருக்கமாகத் தந்துள்ளேன். நீங்களும் மதுரைக்குச் சென்று வாருங்கள். உங்களுக்கும் மதுரை நிச்சயம் மிகவும் பிடித்துப்போகும்.

# தமிழ் மொழியின் சிறப்புகள்

மாணவர் – கவின் கோவிந்தராசன் – வகுப்பு – 6ஆ – ஆசிரியர் – குரு குருபரன்

தமிழ் ஒரு மிகச்சிறந்த மொழியாகும். உலகமுழுவதும் பல கோடி மக்கள் தமிழ் மொழியைப் பேசுகிறார்கள். தமிழ் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது என்று தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆனால், தமிழ் மொழி அதற்கு முன்பே பேசப்பட்டது என்று கூறுகிறார்கள். தமிழின் பழைமை, இலக்கணம், இலக்கியம் போன்ற சிறப்பியல்கள் பற்றி இனி காண்போம்.

உலகில் எல்லா மொழிகளும் மொழிக்கு இலக்கணம் வகுத்துள்ளன. ஆனால் வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்த பெருமை தமிழுக்கு மட்டுமே உண்டு.

பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களை சங்க இலக்கியங்களாக பெற்றுள்ளது தமிழ் மொழியாகும். சங்கம் மருவிய காலத்தில் பதினென்கீழ் கணக்கு 18 நூல்கள் கொண்ட தொகுப்பு ஆகும்.

திருவள்ளுவரின் திருக்குறள் உலகின் பொதுநீதி நூலாக ஏற்றிப் போற்றிப் புகழப் பெறுகின்றது. பைபிளுக்கு அடுத்தப்படியாக திருக்குறளே அதிகமாக மொழி பெயற்கப் பெற்றுள்ளது. திருக்குறளை முதல் முதலில் மொழிபெயர்த்த பெருமை ஜி யு. போப் அவர்களையே சேரும். திருக்குறளிலுள்ள மொத்த சொற்கள் 14, 000. மொத்த எழுத்துக்கள் 42,194. இதைப் போன்ற இலக்கணங்கள் தமிழ் மொழிக்கு சிறப்பு சேர்க்கும்.


தமிழ் மொழியின் பல சிறப்புகளில் ஒரு சிறப்பானது, மொழியில் நிறைய சொற்கள் உள்ளன. உலகத்தின் பல மொழிகளை விட தமிழ் மொழியின் சொல் வளம் உயர்ந்து காணப்பெறுகின்றது. பிற மொழிச் சொற்களோ உருவத்தை மட்டுமே காட்டக் கூடியன. தமிழ் மொழிச் சொற்களோ உருவம் பருவம் இரண்டையும் காட்டும் தன்மையன. உதாரணமாக:

# முறைசாராக் கல்வி




You Can Erase School Violence
81% of public schools experienced one or more violent incidents.
7

பள்ளி நிர்வாகிகள்



**இராஜி, ரவி, செல்வன், வேதையன், குருபரன்**

செய்தியிதழ்க் குழு



அசோக், இளங்கோ, சிவயோகன், செல்வன், விஜயலக்ஷ்மி, சர்மிளா (காசி, ராமசுப்ரமணியன்)

சிறப்பு தன்னார்வலர்கள்





மோகன்ராஜ், நிர்மல், கார்த்திக், ஜெகதீசன், விஜயகுமார், தீபக், பரத்ராஜ், அருண்






கேரி தமிழ்ப்பள்ளி
Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization




கேரி தமிழ்ப்பள்ளி
Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization




கேரி தமிழ்ப்பள்ளி
Cary Tamil School
A registered, non-profit, tax-exempt organization










கேரி தமிழ்ப்பள்ளி


கேரி தமிழ்ப்பள்ளி

# கேரி தமிழ்ப்பள்ளி - ஆண்டு – 2016 - 2017 திரு செல்வன் பச்சமுத்து – தலைமை ஆசிரியர்

| | | | | |
|---|---|---|---|---|
| **உத்தமிஸ்ரீ / பிருந்தா மழலை** | | **கலைவாணி வேலுசாமி-1** | **கஸ்தூரி ரெங்கராஜன்-1** | **மலர் இளங்கோவன்-1** |
| அதிதி சுந்தரேசன் | நந்திதா அனந்தராமன் | அபிநவ் ஆனந்த் | அத்ரீஷ் சிதம்பரநாதன் | அபிராமி பாலசுப்ரமணியன் |
| அக் ஷரா விவேக் | பூர்வஜா சரவணன் | சாசனா கார்த்திகேயன் | ஜெய்அகஸ்தியா அசோக்குமார் | ஹரிணி விஜய்முருகன் |
| அமலன் இளஞ்செயன் | ரக் ஷனா பாலமுருகன் | சித்தார்த் பிரபாகரன் | லியா பென்சகர் | மஹதி ஸ்ரீநிவாசன் |
| அஞ்சனா மூர்த்தி | ருத்விஹா சுப்பிரமணியன் | ஸ்மையன் விஜய் | மதன் அக் ஷிதா | ரிஷி சைலேஷ்வரன் |
| தீபிகா ஸ்ரீகாந்த் | சமித்ரா சங்கர் | வினய் தீபக் | பூர்வா விஸ்வநாத் | சஹானா கஸ்தூரி |
| ஜெய்கிருஷ்ண முனியாண்டி | சார்வின் கௌதமன் | | அனீஷ் | ஸ்ரீநிதா கருத்தபாண்டியன் |
| | ஸ்ரீ ஹிமானிஷ் பொம்முராஜ் | | | |
| **இந்திராதேவி ஸ்வாமிநாதன்-1** | **மோஹனா இளங்கோவன்-1** | **விமலா சுரேஷ்-1** | **மணிவண்ணன் முத்துமாணிக்கம்-** | **சாருலதா குருபரன்-1அ** |
| அர்ஜுன் தேனப்பன் | ஹர்ஷினி கார்த்திகேயன் | மிதுல் கிருத்திக் விஜயகுமார் | ஆகாஷ் சத்தீஸ் | அனிக் ஹலீல் |
| இஷான் வினோத்குமார் | லக் ஷ னா ஸ்ரீஹரி | பிரணவ் சந்திரமௌலி | தர்ஷினி இராமன் | ஆதித்யா குமரன் |
| க்ரிஷ் ஆதவ் செந்தில் | ரியாணா மதினினி | சஹானா செந்தில் | ஜெயதேவ் ஜெயப்ரகாஷ் | கேதரின் வால்டர் |
| கிருஷ்ணா கார்த்திகேய | இரித்திக்கா இராஜநாயகம் | ரீயன் சிஜு | கெவின் ரிச்சாட் | சித்தார்த் சரவணன் |
| சர்வேஷ் திலீப்குமார் | ஷ்ருதி குமாரவேல் | ஸ்ரீநிதி ஜெயக்குமார் | பிரணவ் குமரன் | தனுஸ்ரீ வேலு |
| | | அருண் மொழி | வர்ஷா சிவகுமார் | வினய் ஜெயராம் மூர்த்தி |
| **ஸ்ரீவித்யா** | **ஜெயலட்சுமி ரவிக்குமார்-** | **மங்கையற்கரசி** | **ராதா ராமானுஜம்-1அ** | **ஜெயலட்சுமி தேனப்பன்-1அ** |
| அர்ச்சித் விஜய் | அதிதி பாலாஜி | அகிலன் குமார் | அபிநவ் குரு | அனிஷ் பாஸ்கர் |
| தேவேஷ் செந்தில்குமார் | அனுஷ்கா அன்பழகன் | செம்மல் சதிஷ் | ஸ்ரீநிகா ஸ்ரீநிவாஸ் | அன்விதா அம்பலவாணன் |
| கிருஷ்ணா குமரப்பன் | ஈஷா வினோத் | இஷான் ஜனா | தனிஷ்கா ரவிக்குமார் | அஷீம் நூர்மொஹிதீன் |
| நரேன் மணிகன்டன் | ஹர்ஷா ஸ்ரீராம் | ரியா செல்வரத்தினம் | தாரிணி ஸ்ரீராம் | ஜெய்ஸ்னா ஜெயராமன் |
| இராகுல் வெங்கடேசன் | ரிஷி ரகுராம் | சுவேதா சுரேஷ்ச்சந்தர் | விஷ்வாஸ் விஜயபாஸ்கர் | கவின் ராஜேந்திரன் |
| வியாஸ் மணிவாசகம் | வர்ஷிதா ஜெயக்குமார் | வைஷ்ணவ் தென்னப்பன் | விவின் மோகன்குமார் | ஸ்ரீநிதி கண்ணன் |
| **சரோஜினி பிரபாகரன்-1அ** | **பாகிரதி நாராயணன்-1அ** | **தேவிணாச்சல் நாச்சியப்பன்-1அ** | **சித்ரா நந்தகுமார்-1அ** | **கிரிஜா ராஜேந்திரன்-1அ** |
| அனிருத் செந்தில் | கீர்த்தனா பாலசுப்பிரமணியம் | தியா விஜயகுமார் | மெலிசா மார்ட்டோ | ஆதித் மருது |
| ஹரினி நாச்சியப்பன் | கேட்டவ் கார்த்திகேயன் | பாஹிம் மொஹமத் அஜிரா:அலி | பிரஜ்னா விமல் | ஆதவ் சுந்தரேசன் |
| சர்வேஷ் அழகப்பன் | நந்தகோபால் ராமானுஜம் | உமர் பர்கன் | சச்சின் வினோத் | ஹரிஷ் பாபு |
| ஸ்ரீ பாலா அருணாச்சலம் | ரஷிதா சித்திக் | வசீகரன் கருப்பையா | டானியா ஹலீல் | லஷ்வின் ஜெயப்ரகாஷ் |
| வர்ஷா அன்புச்செழியன் | சஞ்சுஸ்ரீ செந்தில்குமார் | | வர்ஷா ராதாகிருஷ்ணன் | சிவானிகா பிரேம்குமார் |
| **ஸ்ரீதேவி சுரேஷ்-1அ** | **மலர் கண்ணன்-1அ** | **சபிதா தீதரப்பன்-1அ** | **சத்யா எழில்வேந்தன்-1அ** | **சுபா பாலகிருஷ்ணன்-1அ** |
| ஆருஷ் சந்தர் | சஞ்சனா ஸ்ரீனிவாசன் | அபிநய் சிவகுமார் | ஆர்வ நாராயண் | மகிழினி கரிகாலன் |
| ஹரண் ஆனந்த் | சந்தோஷ் முருகேசன் | சந்தியா வெற்றிவேல் | தன்யா மணிகண்டன் | மித்ரா வேணுகோபால் |
| நிஷிகா பரத்ராஜ் | ஸ்ரீவர்ஷினி கண்ணன் | ஷர்விகா குமார் | கௌதம் சரவணன் | நிஷிகா காந்திராஜ் |
| ஷிவானி அய்யர் | வெங்கடநாதன் வெங்கடராகவன் | தனிஷ்வரன் மகேஷ்குமார் | ரோஷன் சந்தானா | நித்திகா காந்திராஜ் |
| ஸ்ரீஅவனேஷ் சுரேஷ்குமார் | விஸ்வேஷ் அழகப்பன் | | ஷ்ரியா பிரகாஷ் | சாதனா சுப்ரமணியன் |
| | | | | சஹானா பிரபு |

## கேரி தமிழ்ப்பள்ளி - ஆண்டு – 2016 - 2017 திரு செல்வன் பச்சமுத்து – தலைமை ஆசிரியர்

| | | | | |
|---|---|---|---|---|
| **விகுண தாமஸ்-1அ** | **அருள்வினையாகசெல்வி-** | **பாரதி முருகேசன்-1ஆ** | **மாரியம்மாள் நாராயணன்-1ஆ** | **ஜெயஸ்ரீ முருகேசன்-1ஆ** |
| ஆகாஷ் ஜெகநாதன் | அஞ்சனா தேவி ஹரி | ஆகேஷ் யோகநாதன் | அதிதி ஸ்ரீனிவாசன் | அனன்யா பாபுராஜ் |
| அனிஷா ஜோஸ்னி | ஜோன்ஸ் ஷரோன் சுரேஷ் | தனஞ்சய் நாராயணன் | ஹாஸ்யா ரவி | பிருந்தா ஸ்ரீ |
| அர்ஷா ஆரியராஜ் | நிஷிதா ஜெயக்குமார் | நிலேஷ் பாலாஜி ராஜ்குமார் | கருணா ஷண்முகம் | தர்சணா சீனிவாசன் |
| நிகில் ஜெகநாதன் | ஸ்ம்ருதி ஞானசக்தி | பிரணவ் K. கண்ணன் | சஞ்சய் கண்ணன் | ஹரிணி நிர்மல்குமார் |
| நிஷி ராமன் | வைஷ்ணவி செந்தில்குமார் | சஞ்சய் ராம சுரேஷ் சந்தர் | ஷேஜா ஜஸீர் | சோனிகா சங்கர் |
| | | | ஸ்ரீதிக் ஷிதா சுரேஷ்குமார் | |
| **சுபத்ரா முருகானந்தம்-1ஆ** | **சுவர்ண விஜயகுமார்-1ஆ** | **யாமினி ராஜாஜி-1ஆ** | **கோல்ட மெர்லின்-1ஆ** | **கார்த்திகேயன் நாகலிங்கம்-** |
| அதித்தி பிரசன்னா | ஆடலைன் கேப்டன் | புவன் பிரவீன் | காவ்யா ராஜேஷ் | ஆதித் பாலா |
| கேட்லின் ஷிஜூ | ஹரிணி அனந்தராமன் | ஹர்ஷினி மோகன்ராஜா | மாதினி சிவசைலம் | கோகுல் தியாகராஜன் |
| சாய்சரண் கார்த்திகேயன் | இனியா ரத்தினகுமார் | மான்சி சுதாகரன் | சான்வி இளங்கோவன் | ஜெனிகா இனிகோ |
| சந்தோஷ் குமரன் | நிதீஷ் ஹரிபாபு | சுதீப் கருத்தப்பாண்டியன் | சுகிதா விஜயகுமார் | கவின் ரத்னகுமார் |
| சர்வேஷ் குமார் | ஷில்பா சுப்ரமனியன் | யுவன் ஸ்ரீ சீனிவாசன் | சுசித்ரா தானுமாலயன் | சாய்சரண் சன்முகராஜ் |
| | சித்தார்த்த அகேலா | | | |
| **சரண்யா கார்த்திகேயன்-** | **வித்யா வைத்தியநாதன்-1ஆ** | **கலைச்செல்வி சூலூர்-2அ** | **நிரஞ்சன் குமார்-2அ** | **அம்பலவாணன் சுப்பையா-2அ** |
| அர்ஜுன் மதன் | ஆகாஷ் சண்முகநாதன் | ஆதுஷன் சுதர்ஷன் | தீபக் சாய்ராம் கோதண்டராமன் | மிருதுளா பாலசுப்ரமணியம் |
| தனிஷ் பொன்னுசாமி | ஹர்ஷிதா அருள் | அக்ஷிதி நாராயணன் | ஹர்ஷினி தண்டபாணி | நியந்த்ரி தியாகராஜன் |
| தீக்ஷிதா செல்வராஜ் | ஜனனி லக்ஷ்மிநாராயணன் | அரவிந்த் சுனில்குமார் | நியந்த்திரி | சங்கவி சுவாமிநாதன் |
| ஜெகதீஸ்வர் முருகேசன் | கண்மணி மதன்ராஜ் | கிரித்திக்ராஜ் கிருஷ்ணராஜ் | தான்யா | தான்யா விஜயகுமார் |
| ப்ரணயஹா ராகவன் | சிவகாமி குத்தாலலிங்கம் | விஷ்ணு பிரணவ்சுபாஷினி | சங்கவி | |
| வர்ணிகா வர்ஷினி | | | | |
| **சங்கீதா மஹேந்திரன்-2அ** | **செல்வராஜ் கோடீஸ்வரன்-** | **குமரன் தக்ஷிணாமூர்த்தி-** | **சாமிநாதன் தில்லை-2அ** | **சுஜாதா மோகன்-2அ** |
| நிதின் ஜெகதீசன் | ஜனனி சோலையப்பன் | புவனேஷ் செந்தில் | மரியா பிரிதிவிக்டோரியன் | நிக்கித்தா பிரபாகரன் |
| ஓவியா அறிவுடைநம்பி | ஜானிஸ் ஷெர்லின் சுரேஷ் | பிருத்து பொன்னுசாமி | நந்திகா இளங்கோவன் | சன்ஜுஸ்ரீ நிரன்ஜன்குமார் |
| ரேவந்த் ரெங்கசாமி | நிஷா கஸ்தூரி | ஸ்ரீவர்தன் சண்முகராஜ் | நிசாந்த் சீனிவாசா | சிரியா பிரபாகர் |
| சஹானா அம்பலவாணன் | ரோஹன் சுரேஷ் | ஸ்மிரிதி கண்ணன் | பழனியப்பன் அருணாச்சலம் | சித்தார்த் விஜய்முருகன் |
| | யாழினி இளங்கோவன் | வினய் நாகராஜன் | சிவானி தேவிபிரசாத் | தேஜஸ்ரீ ரவி |
| | | | ஸ்ரேயஸ் வல்லபன் | வர்ஷினி சத்தீஸ் |

## கேரி தமிழ்ப்பள்ளி - ஆண்டு – 2016 - 2017 திரு செல்வன் பச்சமுத்து – தலைமை ஆசிரியர்

| | | | | |
|---|---|---|---|---|
| **வல்லபன் தியாகராஜன்-** | **காந்திமதி ராமசாமி-2ஆ** | **உமா ராமசாமி-2ஆ** | **விஜயலக்ஷ்மி செல்வகுமார்-** | **அனுராதா வெங்கட்ராமன்-** |
| ஆனந்தி செல்வராஜூ | பாவனா சீனிவாசன் | மாதவ் கார்த்திகேயன் | நேத்ரா அசோக்குமார் | அருண் முரளி |
| தக்ஷா கார்த்திகேயன் | சாஸ்னா ஜெயராமன் | நேஹா ஸ்ரீனிவாசா | ராஷ்மி ராமானுஜம் | கிரிடி நந்தகுமார் |
| சவிதா சாமிநாதன் | சஹானா செல்வகுமார் | சந்தோஷினி | ரூபக் இராஜசேகர் | மஹதி சுந்தர்ராஜன் |
| சுவாதி முருகேசன் | சந்தீப் செந்தில்குமார் | ஷ்ரியா புகழேந்தி | ஸ்ரவன் சுப்ரமணியன் | ரங்கநாத் கோபால்ராஜ் |
| | தேஜஸ்ரீ செந்தில்குமார் | ஸ்ரீராம் குமார் | வினிதா ஹரிணி ரவிவர்மா | விஷால் சுப்ரமணியன் |
| **அருணார்த்தி ரவீந்திரன்-** | **பத்மப்ரியா கந்தஸ்வாமி-** | **வேலப்பன் வேலப்பன்-2ஆ** | **அசோக்குமார் நாகராஜன்-3அ** | **ரமேஷ் ரத்தினகுமார்-3அ** |
| ஆதிரை எழில்வேந்தன் | அனித் சஜீவன் | அபிஷன் சுதர்சன் | அச்சுதா அனந்தகிருஷ்ணன் | ஆர்த்தி ஸ்ரீனிவாசன் |
| அதிதி தினேஷ் | மஹேஷ்வர் முருகேசன் | அக்ஷிதா அருண் | அக் ஷயா ராஜேஷ் | ஆர்ணி பங்குராஸ் |
| ஹேமந்த் சுதாகரன் | நிர்மல் சந்திரன் | அன்சும் ஷபியுல்லாகான் | அம்ரிதா செல்வராஜ் | அவனிஷ் விஜயகுமார் |
| ரித்தின் வேல்மணி | ரிதன்யா நாகராஜ் | அருண் இளஞ்செயன் | சாரங்கா ராஜகோபாலன் | கார்த்திக் கண்ணன் |
| ஸ்ருதிகா ரவிசங்கர் | ஷ்ருதி சுரேஷ் | பிரியங்கா ஆனந்த் ஐயர் | ஊர்மிளா சண்முகம் | வருண் கோவிந்தராசன் |
| **சீனிவாசன் ரெங்கசாமி-** | **சிவயோகன் நாகலிங்கம்-** | **ஆற்காட் ராஜசேகர்-3ஆ** | **காசி அழகானந்தம்-3ஆ** | **ஷபியுள்ள கான்-3ஆ** |
| அவினாஷ் ஜெயகுமார் | சஹானா கதிரவன் | அந்தரா விவேக் | அமிழ்தன் இளங்கோவன் | அனீஷா சிவயோகன் |
| காவ்யா | தன்யா பாலசுப்ரமணியன் | கார்த்திக் அண்ணாதுரை | அனீஷா சிவயோகன் | சந்தனா ஸ்ரீஹாரி |
| நிவிதா கன்டியர் | பூர்வஜா சந்திரமௌலி | மதுமதி இளங்கோ | கேசவ் வரதராஜன் | நேத்தன் நாயகம் |
| சேஷாந்த் விஜயகுமார் | பிரவீன் புவிந்திரன் | பிரணதி செல்வகுமார் | லக்ஷ்மி கோபால்ராஜ் | நித்தின் ஹரிதாஸ் |
| சித்தார்த் சைலேஷ்வரன் | சுருதி கண்ணன் | ரதிஸ்ரீ சீனிவாசன் | மதுமிதா கோபிநாத் | பத்பநாபன் சரவணன் |
| | | | உமேஷ் ராதாகிருஷ்ணன் | |
| **அல்லி தாஸ்-4அ** | **ஷர்மிளா கோவிந்தராஜன்-** | **சிவகாமி அண்ணாதுரை-** | **லலிதா சண்முகவேல்-5அ** | **சித்ரா பாஸ்கரன்-5அ** |
| ஆகாஷ் சண்முகவேல் | அமரன் கண்டியர் | அஜய் சுனில்குமார் | அனுஸ்ரீ ஜெயக்குமார் | அஷ்வின் சிவயோகன் |
| அதிதி நாராயணன் | ஆர்த்தி சுரேஷ் | ஹேமா நம்பி | அர்ச்சனா அண்ணாதுரை | சுருதி ராஜகோபலன் |
| ஆனந்த் அழகானந்தம் | கௌதம் தர்மர் | ஜோ டேனிகா இனிகோ | | ஸ்வேதா புகழேந்தி |
| ஹேனா சவேரியார் | கைலாஷ் முத்து | கிருத்திகா வேலப்பன் | | |
| ஸ்ருதி சுப்ரமணியன் | ஷிவாலி ராஜேந்திரன் | லோரன் சவேரியார் | | |
| | ஸ்ரீநிதி ஸ்ரீநிவாஸ் | சிந்து சண்முகம் | | |
| | | சுஜய் சுதர்சன் | | |
| | | தரணி செந்தில்குமார் | | |
| **ரம்யா வரதராஜன்-5ஆ** | **குரு குருபரன்-6அ** | | | |
| ஆண்ட்ரூ சேவியர் | ஆன்ட்ரூ சேவியர் | | | |
| கவின் கோவிந்தராஜன் | கவின் கோவிந்தராஜன் | | | |
| ஸ்ரீராம் ஸ்ரீனிவாசன் | ஸ்ரீராம் ஸ்ரீனிவாசன் | | | |
| | சுனந்தா திருநாவுக்கரசு | | | |



# ஆண்டு மலர்

## 2016-17

கேரி தமிழ்ப்பள்ளி

கேரி, வடகேரொலைனா, அமெரிக்கா



Cary Tamil School

Cary, North Carolina, USA

AdvancED ACCREDITED | SACS